DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1360 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 29, 2022

# Ontario Government Builds New Schools in Scarborough

# ஒன்றாரியோ மாகாண அரசு ஸ்காபுறோவில் புதிய பாடசாலைக் கட்டங்களை நிர்மாணிக்கின்றது

கனடா ஸ்காபுறோ நகரில் இரண்டு பாடசாலைகளில் மேலதிக கட்டடங்களை நிர்மாணிக்கும் வகையில் அறிவிப்பை சில நாட்களுக்கு முன்னர் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டிபன் லெச்சே அவர்கள் விடுத்துள்ளார்.

இந்த அறிவிப்பை விடுக்கும் நிகழ்வில் மாகாண அரசின் உறுப்பினர்கள் சிலரும் கலந்து சிறப்பித்தார்கள்.



ஸ்காபுறோவில் அமைந்துள்ள எலி-சபெத் சிம்கோ ஆரம்பப் பாடசாலைக்கு நிரந்தரமான கட்டடமொன்றை மேலதிகமாக கட்டுவதற்கும், போப்லர் ரோடு கனிஸ்ட பாடசாலைக்கு மற்றுமொரு கட்டடத்தையும் கட்டுவதற்கான அறிவிப்புக்களை அன்றைய தினம் கல்வி அமைச்சர் விடுத்தார்

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

# Ontario budget offers big boost to home care to keep seniors at their homes

# நேற்றைய ஒன்றாரியோ மாகாண வரவு செலவுத் திட்ட உரையில் முதியோர்களுக்கு மேலும் சலுகைகளை வழங்கும் அறிவிப்புக்களை விடுத்த நிதி அமைச்சர்





நேற்று வியாழக்கிழமை கனடா-வின் ஒன்றாரியோ மாகாண வரவு செலவுத் திட்ட உரையை மாகாணத்தின் நிதி அமைச்சர் பீற்றர் பெத்தலன்பவி ஆற்றிய போது மாகாணத்தில் உள்ள முதியோர்களுக்கு மேலும் சலுகைகளை வழங்கும் அறிவிப்புக்களையும் அறிவித்தார்.

இந்த அறிவிப்பின் பிரகாரம். நிதி அமைச்சர். அவர்கள் மாகாணத்தில் வாழும் அதிகமான முதியவர்களை வீட்டில் அதிக நேரம் தங்க வைத்திருக்கவும், அதன் மூலம். மாகாணத்தின் வைத்தியசாலைகள் மற்றும் முதி-யோர் இல்லங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சுமை-களை எளிதாக்கவும், வரவு செலவுத் திட்டம் வழி செய்யும் என்றார்.

*(தொடர்ச்சி உள்ளே 10ம் பக்கத்தில்)*

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
gta credit
Direct Tamil Line
(416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

**ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



# LOOKING FOR YOUR *Dream House?*



Call **SEYON CHANDRAKUMAR**

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### வீடு மற்றும் Basement ஆகியன வாடகைக்கு

**Brimley & Lawrence** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றின் மேல் தளம் மற்றும் **Basement** ஆகியன தனித்தனியாக வாடகைக்கு வழங்கப்படும். சமையல் அறைகள் குளியல் அறைகள் மற்றும் **Laundry** ஆகியனவும் தனித்தனியாக உள்ளன. பாடசாலைகள் தமிழ் கடைகள் ஆகியனவும் மிக அருகில் உள்ளன.

**தொடர்பு கொள்ளுங்கள்**
**647-981-1997**

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

**உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்**

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public

250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6

**Office: (416) 613 8998**
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### AZ DRIVERS WANTED

Seeking for experienced AZ drivers for CANADA & USA.

Requirements:
- Minimum 3-4 years experience
- Cross Border experience
- Good Communication Skills
- Clean Abstract

Please Contact
416-835-6701

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### கொன்வீனியன்ஸ் கடையில் வேலை வாய்ப்பு

**Parliament & Wellesley** சந்திப்புக்கு அருகில் உள்ள கொன்வீனியன்ஸ் கடை ஒன்றில் **Cashier** ஆக பணியாற்றுவதற்கு ஆண் ஒருவர் தேவை. பணி ஓய்வு பெற்றவர்கள் **(Pensioners)** விரும்பத்தக்கது.

**தொடர்பு கொள்ளுங்கள்:-**
**416-473-8520**

உதயன் கதிரோட்டம்

# தமிழர் தாயகத்திலிருந்து தமிழகம் நோக்கிய 'படகு'ப் பயணத்தின் விளைவுகளிலும் கவனம் தேவை

இலங்கை என்னும் தீவெங்கும் தீப்பற்றி எரிவதைப் போன்ற சம்பவங்களும் பிரச்சனைகளும். ஊயிரிழப்புக்களும் தொடர்ந்து வண்ணம் இருந்தாலும். ஆட்சி அதிகாரத்தை 'அடாத்தாகப்' பற்றிக் கொண்டு அதிலிருந்து விலகிச் செல்லாமல் அனைத்து அரசுச் சலுகைகளையும் அனுபவித்த வண்ணம் இருக்கின்ற 'இராஜபக்ச இராஜ்யத்தின் தலைவர்களும் தளபதிகளும் அங்கேயே தங்கியுள்ளனர்.

ஆனால் எமது தமிழர் பகுதியிலிருந்து தினமும் சிலராக தமிழகம் நோக்கிச் செல்லும் ஆபத்தான பயணங்களை மேற்கொள்ளும் எமது ஏழை உறவுகளின் பக்கம் நாம் ஒரு தடைவ திரும்பிப் பார்ப்போம். நாம் எதிர்பார்த்தது தமிழகத்தில் நடந்தேறத் தொடங்கியுள்ளது என்று இந்தப் பக்கத்தில் பதிவு செய்யும் வகையில் தமிழகத்திற்கு படகுப் பயணம் செய்யும் எம்மவர்களை அங்கு 'கவனிக்கும்' முறைகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது.

கடலில் மீன்பிடிப் படகுகளில் வரும் மீனவர்களை எப்போதும் குறி வைத்துக் காத்திருக்கும் இலங்கைக் கடற்படை தற்போது தமிழகத்திற்கான படகுப் பயணம் செய்யும் எம் மக்களை கண்டும் காணாதவர்களாக இருக்க வேண்டும் அல்லது அவர்களிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை பெற்றுக் கொள்வார்கள் என்ற கருத்துக்களும் ஆரம்பத்தில் பகிரப்பட்டு வந்தன.

ஆனால். தற்போது. தாயகத்திலிருந்து எமக்குக் கிடைக்கப்பெறும் தகவல்களிலிருந்து. இலங்கையின் கடற்படைக் 'கயவர்கள்' வடக்கிலிருந்து புறப்படும் படகுகளின் உரிமையாளர்களிடம் 'பேரம்' பேசி பணக்கொள்ளை அடிப்பதாகச் விடயங்கள் விளக்கமாகப் பகிரப்படுகின்றன.

அத்துடன் தமிழக அரசின் புதிய ஏற்பாடுகளின் படி அங்கு அகதிகளாகச் செல்லுகின்றவர்கள் அங்கு ஏற்கெனவே நிறுவப்பெற்றுள்ள 'இலங்கை அகதிகள் முகாம்களில்' தங்க வைக்கப்படுகின்றனர். அவ்வாறு படகுப் பயணம் செய்தவர்களோடு தமிழகத்தின் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களும் மெய்நிகர் வழியாக உரையாடி அவர்களுக்கு ஆறுதல் சொல்லியதாக வெளிவந்த செய்திகளின் 'ஈரம்' இன்னும் காயாமல் இருக்கும் போதே, தமிழ்நாட்டின் காவல் துறை அதிகாரிகள் தங்கள் 'கைவரிசையைக் காட்டிவிட்டார்கள் போலும்.

நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று, மிக அண்மையில். யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இருந்து தமிழகம் நோக்கிப் படகுப் பயணத்தில் சென்ற இரு இளைஞர்கள் மீதும் இலங்கையில் போதைப்பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக இலங்கை அரசிடமிருந்து தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த செய்திகளின் பின்னால் உண்மையான விடயங்கள் அடங்கியுள்ளன என்பதை நாம் உடனடியாக நம்பி விட முடியாது மட்டுமல்ல, சரியான ஆய்வுகளின் பின்னரே இந்த சம்பவங்களின் பின்னால் உள்ள 'உண்மை' வெளிவரும் என்பதையும் நாம் எதிர்பார்க்கலாம்.

இவர்களுக்கு எதிராக வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அதிகாரிகள் தெரிவித்துள்ளமை என்ன நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் நாம் அறிந்து கொள்ள முன்வரவேண்டும்.

யாழ்ப்பாணம் – குருநகரை சேர்ந்த இளைஞர்கள் இருவர் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சென்று தஞ்சம் அடைந்த நிலையில், தமிழக கடலோர பாதுகாப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு படகுப் பயணங்களின் மூலம் தமிழகம் நோக்கி செல்பவர்களுக்கு தமிழகத்தின் கரையோர மற்றும் காவல் துறை அதிகாரிகள் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளமை எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்

யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகம் நோக்கிச் சென்ற குறித்த இருவரும் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக அகதிகளாக தமிழகத்திற்கு தஞ்சம் கோரி வந்ததாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது , குறித்த இருவருக்கும் எதிராக இலங்கை நீதிமன்றில் போதைப்பொருள் கடத்தல் வழக்குகள் நிலுவையில் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதன் காரணமாக இருவரையும் அகதிகளாக ஏற்காமல் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு 'வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும்' காவல் துறையினரின் நடவடிக்கைகளை தமிழக அரசு மனிதாபத்தோடு அணுக வேண்டும் என்ற கோரிக்கையை நாம் இன்றே முன்வைக்கின்றோம். அப்போதுதான் தமிழகம் மீதான நம்பிக்கை இனியாவது துளிர்க்க வாய்ப்புக்கள் ஏற்படும்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## நவக்கிரி மக்கள் ஒன்றியம் கனடா பொதுக்கூடமும் புதிய நிர்வாகசபைத் தேர்வும்

நவக்கிரி மக்கள் ஒன்றியம் கனடாவின் பொதுக்கூடமும் புதிய நிர்வாகசபைத் தேர்வும் வரும் மே மதம் 8ம் திகதி 2022 ஆண்டு பிற்பகல் 3:00 மணியில் இருந்து 5:00 மணிவரை தீர்மானிக்கப்படுள்ளது. அனைத்து நவக்கிரி ஊர் மக்களும் கலந்து கொண்டு இக் கூட்டத்தை சிறப்பிக்கவும் ஊரின் பெருமையை வளர்க்குவும் உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளுத.

இடம்: **7340 Markham Road (Underground Party Hall) Markham ON L3S 0B1**
காலம்: **May 8th, 2022** பிற்பகல் 3:00 தொடக்கம் மாலை 5:00 மணி வரை
மேலதிக தொடர்புகளுக்கு 416-888-1128 அல்லது 647-818-6750





மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை
ஜாதகம் பார்க்கப்படும்
கடந்த 40 வருடமாக தென்னிந்தியா, ஆசியா, அவுஸ்திரேலியா, ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் கனடாவில் பல தமிழ் மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்த திரு. கோ. காசிலிங்கம் அவர்கள் இப்போது கனடாவில். பிறந்த வருடம், மாதம், திகதி, நேரத்தை சொன்னால் போதும் நந்தி வாக்கியம் மூலம் நாள் நட்சத்திரம் கண்டு நடந்தது நடக்கப் போவதை தனது திறமையால் மிகத் துல்லியமாகக் குறித்து எழுதி பலன் சொல்லப்படும்.
குழந்தைகளுக்கு ஜாதகம் எழுதிக் கொடுக்கப்படும்
திருமணப் பொருத்தம் பார்த்து சொல்லப்படும்
கோ. காசிலிங்கம்
1320 Pharmacy Ave, Scarborough ON, M1R 2T3 (Main Intersection Pharmacy and Ellesmere Rd)
Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164


இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அரசாங்கத்திற்கு எதிரான தேசிய மக்கள் சக்தியின் போராட்டம்

மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் அரசாங்கம் ஜனாதிபதிக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி போராட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது.




ஞாயிற்றுக்கிழமை (24) இரவு அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர ஐக்கிய சதுக்க முன்றலில் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஏ. ஆதம்பாவாவின் தலைமையில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டமானது "74வருட சாபக்கேட்டை இல்லாதொழிப்போம் - மக்களை துன்புறுத்தும் அரசாங்கத்தை விரட்டியடிப்போம்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன் பல்வேறு வாசகங்களும் எழுதப்பட்ட சுலோகங்களை போராட்டக்காரர்கள் ஏந்தி பல்வேறு கோஷங்களை எழுப்பினரர்.



இப்போராட்டத்தில் கொள்ளை பணம் எங்க, அடுப்பு மூட்ட கேஸ் இல்லை, நாட்டில் எதுவுமில்லை, பசில் வேண்டாம், மஹிந்த வேண்டாம், கோத்தாவே வெளியேறு, நாட்டில் எதுவுமில்லை மக்களுக்கு பசி, பசளை தா, பெற்றோல் தா, பசிலே வெளியேறு, கோட்டா நீ அமெரிக்காவுக்கே ஓடு,வாகனம் ஓட பெற்றோல் இல்லை, நாட்டில் மின்சாரம் இல்லை, பிள்ளைகள் குடிக்க பால்மா இல்லை, குழந்தைகள் படிக்க கரண்ட் இல்லை, பரீட்சை இல்லை, அரசே வீட்ட போ, கோ கோம் கோத்தா, என கோஷங்களை போராட்டகாரர்கள் எழுப்பினர்.





இதன் போது ஜே.வி.பியின் முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ, தேசிய மக்கள் சக்தி பிரதேச அமைப்பாளர்கள் ,உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக நாட்டின் பல்வேறு இடங்களிலும் போராட்டங்கள் எதிர்ப்பு நடவடிக்கைகள் அன்றாடம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

# முப்படை மற்றும் பொலிஸார் இணைந்து விசேட அதிரடிப்படையினர் வீதி ரோந்து நடவடிக்கை

முப்படை மற்றும் பொலிஸார் இணைந்து விசேட அதிரடிப்படையினர் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதுடன் பரிசோதனை செயற்பாட்டினையும் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுத்துள்ளனர்.



இதற்கமைய திங்கட்கிழமை (25) அம்பாறை மாவட்டத்தில் மருதமுனை பெரிய நீலாவணை கல்முனை சம்மாந்துறை சவளக்கடை மத்திய முகாம் உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு ரோந்து நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துள்ள குற்றச்செயல்களை கட்டுப்படுத்த இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் ஒரு கட்டமாக திடீர் சோதனைகளை விசேட அதிரடிப்பழ்யினர் முப்படையினர் உள்ளிட்ட பொலிஸார் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.

இத் திடீர் சோதனையில் சந்தேகத்திற்கிடமானவர்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு ஆலோசனைகள் இஎச்சரிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# யாழ்ப்பாணத்தில் இருந்து 5 குடும்பங்களை சேர்ந்த 15 பேர் அகதிகளாக தனுஷ்கோடியை சென்றடைந்தனர்

## இலங்கையில் இருந்து இதுவரை 75 பேர் அகதிகளாக இந்தியாவில் தஞ்சம்



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அங்கு வசிக்கும் மக்கள் உணவு, அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

இதனால் இலங்கையில் இருந்து 60 இலங்கை தமிழர்கள் தமிழகத்திற்கு அகதிகளாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள நிலையில் திங்கட்கிழமை (25) அதிகாலை 9 மாத கை குழந்தை உட்பட 5 குடும்பத்தை சேர்ந்த மேலும் 15 பேர் அகதிகளாக தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் தனுஷ்கோடி இலங்கைக்கு அருகே உள்ளதால் இலங்கை ஏற்பட்ட இறுதிக்கட்ட போரின் போது இலங்கை தமிழர்கள் தங்கள் உயிர்களை காப்பாற்றி கொள்ள அகதிகளாக தனுஷ்கோடி வழியாக தமிழகத்திற்கு வந்து இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ளனர்.

அதேபோல் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் உணவுப் பஞ்சம் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தில் இலங்கை தமிழர்கள் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லையில் உள்ள தீவிர கண்காணிப்பையும் மீறி படகுகளில் தனு'கோடிக்கு அகதிகளாக தஞ்சம் அடைந்து வருகின்றனர்.



இந் நிலையில் ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்கரையில் இருந்து ஒரு படகுகளில் யாழ்ப்பாணம் ஆணைக்கோட்டம் மற்றும் காக்கா தீவை சேர்ந்த யோகன், மாலா, கதிரமலை, ஜெயராம், பேபி ஷாலினி என 9 மாத கை குழந்தை உட்பட 5 குடும்பத்தை சேர்ந்த 15 இலங்கை தமிழர்கள் திங்கட்கிழமை அதிகாலை 3 மணி அளவில் தனுஷ்கோடி அடுத்த கோதண்டராமர் கோவில் கடற்கரையில் இறங்கினர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற ராமேஸ்வரம் மரைன் போலீசார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக தற்போது அத்தியாவசிய பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை, விலை கடுமையாக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ பச்சை மிளகாய் ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்வதால் எப்படி வாங்கி சாப்பிட முடியும் எனவும், மருத்துவ பொருட்களுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனையில் போதிய மருந்துகள் இல்லை தனியார் மருத்துவமனைகளுக்கு சென்றால் காய்ச்சல் தலை வலிக்கு 4 ஆயிரம் வரை வசூல் செய்கிறார்கள்.

இதே நிலை நீடித்தால் இலங்கையில் பட்னி சாவு ஏற்பட்டு அனைவரும் உயிரிழக்க நேரிடும் எனவே உயிரை காப்பாற்றி கொள்ள தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாக இலங்கை தமிழர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைக்குப் பின் இந்த 15 இலங்கைத் தமிழர்கள் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கபட்டார்கள்.

மேலும் இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ம் தேதி முதல் இன்று வரை 75 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# Ontario Government Builds New Schools in Scarborough

# ஒன்றாரியோ மாகாண அரசு ஸ்காபுறோவில் புதிய பாடசாலைக் கட்டங்களை நிர்மாணிக்கின்றது






கனடா ஸ்காபுறோ நகரில் இரண்டு பாடசாலைகளில் மேலதிக கட்டடங்களை நிர்மாணிக்கும் வகையில் அறிவிப்பை சில நாட்களுக்கு முன்னர் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டிபன் லெச்சே அவர்கள் விடுத்துள்ளார்.

இந்த அறிவிப்பை விடுக்கும் நிகழ்வில் மாகாண அரசின் உறுப்பினர்கள் சிலரும் கலந்து சிறப்பித்தார்கள். ஸ்காபுறோவில் அமைந்துள்ள எலிசபெத் சிம்கோ ஆரம்பப் பாடசாலைக்கு நிரந்தரமான கட்டடமொன்றை மேலதிகமாக கட்டுவதற்கும், போப்லர் ரோடு கனிஸ்ட பாடசாலைக்கு மற்றுமொரு கட்டடத்தையும் கட்டுவதற்கான அறிவிப்புக்களை அன்றைய தினம் கல்வி அமைச்சர் விடுத்தார்

றொறன்றொ மாநகரில் உள்ள உழைக்கும் குடும்பங்களுக்கு உதவும் வகையில், றொறன்ரோ மாவட்ட கல்விச் சபையும் ஒன்ராறியோ அரசாங்கமும் இணைந்து கிட்டத்தட்ட $16 மில்லியன் முதலீடு செய்கிறனு. ஒன்ராறியோ இளைஞர்களுக்கான அதிநவீன தொழில் நுட்ப வசதிகளைக் கொண்ட பாடசாலைகளை உருவாக்குவதற்காக மாகாணத்தின் முதல்வர் டக் போர்ட் அவர்களின் தலைமையிலானஅரசாங்கத்தின் உறுதியான கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாக 387 மாணவர்கள் மற்றும் 88 உடற்பாதிப்புள்ள குழந்தை பராமரிப்பு இடங்களை உருவாக்க கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெட்சே அவர்களால் விடுக்கப்பெற்ற அறிவிப்புக்கள் உதவும் என கல்விச் சபையின் அதிகாரி ஒருவர் கனடா உதயன் பத்திரிகையின் ஆசிரிய பீடத்திற்கு தெரிவித்தார்.

சமீபத்தில் அமைச்சர் லெட்சே அவர்களால் அறிவிக்கப்பட்ட புதிய பாடசாலைகள் மற்றும் குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களை மேலும் வலுப்படுத்துவதற்காக கிட்டத்தட்ட $500 மில்லியன் மாகாண அளவிலான முதலீட்டின் ஒரு பகுதியாக இந்தத் திட்டங்கள் அமைகின்றன என்றும் . ஒட்டுமொத்த முதலீடு 23 குழந்தை பராமரிப்பு நிலையங்களை உள்ளடக்கிய 37 பாடசாலைகள் தொடர்பான திட்டங்களை உருவாக்க உதவும். என்றும் இந்த நிதியானது ஒன்ராறியோ முழுவதும் உள்ள பள்ளிகளில் கிட்டத்தட்ட 15,700 புதிய மாணவர்களுக்கான இட வசதியையும் 1,500 அரச அனுமதி பெற்ற குழந்தை பராமரிப்பு நிலையங்களையும் உள்ளடக்கின்றன என்று றொறன்ரொ கல்விச் சபையின் அதிகாரி தெரிவித்தார்.

“ஒன்றாரியோ மாகாணத்தில் நாங்கள் புதிய பாடசாலைகளை கட்டுகிறோம், மேலும் குறைந்த கட்டணத்தில் குழந்தை பராமரிப்பு நிலையங்களை உருவாக்குகிறோம், மேலும் ஒன்ராறியோ மாணவர்கள் மிகவும் பாதுகாப்பான வகுப்பறைகளில் கற்பதை நாம் உறுதி செய்வதால், அவர்களுக்கு நம்பிக்கையையும் வாய்ப்பையும் உருவாக்குகிறோம்” என்று மாகாண கல்வி அமைச்சர் லெட்சே அவர்கள் தெரிவித்தார்.

மேலும், நவீன காற்றோட்ட அமைப்புகளுடன் கூடிய அதிநவீன வசதிகளைஏற்படுத்துவதன் மூலம். மாணவர்கள் நேரில் கற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம், அதனால்தான் எங்கள் அரசாங்கம் கட்டுமானத்தை துரிதப்படுத்தும் ஒரு பெரிய முதலீட்டை வழங்குகிறது. பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் சமூகங்கள் இந்த விடயத்தை நன்கு உணர்ந்துள்ளார்கள்.” என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

இங்கு காணப்படும் படங்கள் ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள போப்லர் ரோடு கனிஸ்ட பாடசாலைக்கு மற்றுமொரு கட்டடத்தையும் கட்டுவதற்கான அறிவிப்புக்களை அன்றைய தினம் கல்வி அமைச்சர் விடுத்தபோது எடுக்கப்பட்டவையாகும்.

*(படங்கள் மற்றும் செய்தி: **ARJUNE L.J.I)***

தமிழ்ப்பூங்காவின்

-----------------------------------

பாடுங்குயில் – 2022

தமிழ்பூங்காவின் பாடுங்குயில் 2022 இற்கான
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
வயது 4 முதல் 12 வரை உள்ளவர்கள்
விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:
May (வைகாசி) 31, 2022

விபரங்களுக்கு: (647) 706-6123

3001 Markham Road #21 Scarborough, ONM1X 1L6

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

கனடிய செய்திகள்
Canadian News

# Ontario NDP Leader Horwath releases NDP platform: 'Strong. Ready. Working for you.'

# வலிமையாக, தயாராக, உங்களின் பணியில்: NDP தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ள தலைவி ஹோர்வத்

ONTARIO NDP NPD

சுகாதார சேவையை சரிசெய்தல், விரிவுபடுத்துதல், வாழ்க்கைச் செலவைக் குறைத்தல் போன்றவற்றில் NDP திட்டம் கவனம் செலுத்துகிறது.

NDP ஒரு விரிவான தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது, இது மக்களுக்கு மிகவும் முக்கியமான விடயங்களைச் சரிசெய்வதற்கான திட்டத்தை வகுத்துள்ளது - OHIP-ஐ விரிவுபடுத்துவது உட்பட, இதன் மூலம் மக்களுக்கு சொந்த செலவில்லாமல் OHIP அட்டை மூலம் மனநலப் பாதுகாப்பு, பல் பராமரிப்பு, மருந்துச் சீட்டுகள் ஆகியவற்றை பெறலாம்.

இந்த அறிக்கையில் ஒன்ராரியோ என்டிபி கட்சியின் தலைவி அன்றியா ஹார்வத் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"கடந்த சில வருடங்கள் கடினமாக இருந்தன. நமது சுகாதாரத்துறை கட்டமைப்பு சீர்குலைந்துள்ளதால் மக்கள் வேதனையுடன் காத்திருக்கின்றனர். மேலும் மக்கள் முன்னெப்போதையும் விட கடினமாக உழைக்கிறார்கள், அதே நேரத்தில் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவும் வீட்டு விலைகளும் அவர்கள் முன்னேறுவதை சாத்தியமற்றதாக்குகின்றன," என ஹோர்வத் குறிப்பிட்டுள்ளார்.

"ஆனால் இது இவ்வாறு இருந்திருக்க வேண்டியதில்லை. ஒன்டாரியோ உலகில் வாழ்வதற்கு மிகச்சிறந்த இடமாகும், நாம் ஒன்றாக இணைந்து சீர்குலைந்து போன, மக்களுக்கு அன்றாட வாழ்வில் தேவைப்படும் விடயங்களை சரிசெய்ய ஆரம்பிக்கலாம்".

அனைவருக்குமான மனநலப் பாதுகாப்பு, மற்றும் கனடாவின் முதல் உண்மையான பொது மருந்தகத் திட்டம் ஆகியவற்றுக்கு NDP தேர்தல் அறிக்கை உறுதியளிக்கிறது. இது உள்வரும் கூட்டாட்சி பல் பராமரிப்பு திட்டத்தையும் மேம்படுத்துகிறது. இத்தகைய திட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் குடும்பங்களுக்கு ஆயிரக்கணக்கான டொலர்களை சேமிக்கும், மற்றும் ஒன்டாரியோவின் அவசர சிகிச்சை அறைகளின் நெருக்கடியை குறைக்கும்.

இது சிறந்த ஊதியம் மற்றும் பணி நிலைமைகளுடன் சுகாதாரப் பணியாளர்களை இணைக்கவும், பணியில் தக்கவைக்கவும் மீள அழைத்துக்கொள்ளவும் உதவும். NDP 10,000 தனிப்பட்ட ஆதரவு பணியாளர்கள், 30,000 செவிலியர்கள் அடங்கலாக இன்னும் பலரை பணியில் அமர்த்தும். மேலும் 20,000 ஆசிரியர்கள் மற்றும் கல்விப் பணியாளர்களை பணியில் அமர்த்தி வகுப்பு அளவைக் குறைப்பதற்கும், ஒவ்வொரு குழந்தைக்கும் அதிக ஆதரவையும் வாய்ப்பையும் வழங்குவதற்கும் ஹோர்வத் இணங்கியுள்ளார்.

ஒன்டாரியர்களின் அன்றாட வாழ்க்கைச் செலவை குறைப்பதாக NDP தேர்தல் அறிக்கை உறுதியளிக்கிறது. குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு வருமான வரி முடக்கத்தை இது உறுதி செய்கிறது. இது குடியிருப்பாளர்களுக்கு வாடகைக் கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டுவரும், வீட்டு ஊக வணிகர்களை ஒடுக்கும், விலைவாசி உயர்வைத் தடுக்க எரிவாயு விலைகளை ஒழுங்குபடுத்தும், சுகாதாரப் பாதுகாப்பில் பயனர் கட்டணத்தைத் தடை செய்யும், நீர் கட்டணங்களின் விலையைச் சமாளிக்கும். அதற்கு பதிலாக, வரி சட்ட ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் பல மில்லியனர்கள் மற்றும் பாரிய நிறுவனங்கள் தங்கள் நியாயமான பங்கைச் செலுத்துவார்கள்.

"டக் ∴போர்டின் செலவு வெட்டுக்கள் விடயங்களை சரிசெய்யாது. அவர் தனது நண்பர்களுக்கு அவர்கள் விரும்பும் எதையும் கொடுத்துக் கொண்டே இருப்பார், அது ஏனையவர்கள் மீது எத்தகைய தாக்கத்தை செலுத்தும் என்பது பற்றி கருத்திற் கொள்ள மாட்டார். தாங்கள் சீர்குலைய உதவியவற்றை ஸ்டீவன் டெல் டுகாவின் லிபரல்கள் சரி செய்வார்கள் என மக்கள் நம்பவில்லை. அவர்களுக்கு அவற்றை சரிசெய்ய 15 வருடங்கள் வாய்ப்புக் கிடைத்திருந்த போதும் செய்யாதிருந்தனர். அவர்கள் சுகாதார சேவையில் வெட்டுக்களை செய்து 1,600 செவிலியர்களை பணி நீக்கம் செய்தனர். Hydro One திட்டத்தை விற்றனர். வாழ்க்கைச் செலவை அதிகரிக்கச் செய்தனர். அவர்களின் செயற்பாடுகளுக்கான பலனை மக்கள் எதிர்கொண்டுள்ளார்கள்," என ஹோர்வத் குறிப்பிட்டுள்ளார்.

"ஆனால் நாங்கள் அவற்றை மாற்றியமைக்க முடியும். இந்த அறிக்கை, அதை உருவாக்கிய சமூகம் ஆகியவை குறித்து நான் பெருமைப்படுகிறேன். யதார்த்தமற்ற திட்டங்களுக்கு நாங்கள் உறுதியளிக்கவில்லை. நாங்கள் உங்களுக்காக பணியாற்றுவதாகவே உறுதியளிக்கிறோம். நாங்கள் ஒன்று சேர்ந்தால், டக் ∴போர்டை தோற்கடித்து, குடும்பங்களின் அன்றாட வாழ்வை உறுதியான நிலைக்கு கொண்டு வர முடியும். இது நடைமுறைச் சாத்தியமான, செய்யக்கூடிய திட்டம் என்பதால், நம்பிக்கை தென்படுகிறது".

## சிறப்பம்சங்கள்:

### சுகாதார சேவையை சரி செய்தலும் விரிவு படுத்துதலும்

- அனைவருக்குமான, பொது நிதியுதவி மனநலப் பாதுகாப்பு. சிகிச்சை சேவைகளை OHIP-க்குள் கொண்டு வருவதன் மூலம் NDP மாகாணம் முழுவதும் ஆலோசனை மற்றும் சிகிச்சை சேவைகளுக்கான அணுகலை விரிவுபடுத்தும்.
- பொது மருந்தகம். ஒன்டாரியர்களுக்கான அனைத்தும் உட்பட மருந்தகத்திற்கான பணியை NDP உடனடியாக ஆரம்பிக்கும்.
- சுகாதாரப் பணியாளர்களை இணைத்தல், தக்க வைத்தல், மீள அழைத்தல், ஆதரவளித்தல். சுகாதாரப் பணியாளர்களை மதித்து, அவர்களின் ஊதியத்தையும் பணி நிலைமைகளையும் மேம்படுத்தல் உள்ளடங்கலாக விரிவான உத்தியுடன்:
- 10,000 தனிப்பட்ட சுகாதார உதவிகளை வழங்கும் தொழிலாளர்கள் நியமித்தல்
- 30,000 செவிலியர்களை நியமித்தல்
- சர்வதேச பயிற்சி பெற்ற 15,000 செவிலியர்களின் நற்சான்றிதழ்களை விரைவாக அங்கீகரித்தல்
- அனுபவம் உள்ள மற்றும் சமீபத்தில் ஓய்வு பெற்ற செவிலியர்களுக்கு அவர்கள் தொடர்ந்து வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வை செய்யும் வகையில் பணியாற்ற கூடிய புதிய வேலைகளை உருவாக்குதல்
- குறிப்பாக வடக்கு ஒன்டாரியோவிற்கு 300 மருத்துவர்களையும் 100 நிபுணர்களையும் நியமித்தல்



### குறைவான விலையில் வீடுகள், வாழ்க்கைச் செலவுகள்

- நடுத்தர வருமானங்களுக்கு வரி முடக்கம். NDP குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நான்கு வருட வருமான வரி முடக்கத்தை வழங்குவதாக உறுதியளிக்கிறது.
- கடைசி குடியிருப்பாளர் செலுத்திய வாடகையை செலுத்தவும். ஒரு NDP அரசாங்கம் அனைத்து அடுக்குமாடி குடியிருப்புகளுக்கும் உண்மையான வாடகைக் கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டுவரும், வாடகையை உயர்த்தி குடியிருப்பாளர்களை வெளியேற்றும் நில உரிமையாளர்களுக்களின் நிதி ஊக்கத்தை நீக்கும். காலியிடக் கட்டுப்பாட்டை நீக்குவதன் மூலம் கடைசி குடியிருப்பாளர் செலுத்தியதை நீங்கள் செலுத்துவதையும் நாங்கள் உறுதி செய்வோம்.
- ஊகங்களை முறியடித்தல். வசிக்காத வீடுகளை வைத்திருக்கும் ஊக வணிகர்கள் மீது வருடாந்த ஊகங்கள் மற்றும் காலியிட வரியை ஹோர்வத் அறிமுகப்படுத்துவார். இந்த விகிதம் மதிப்பிடப்பட்ட பெறுமதியில் இரண்டு சதவீதமாக இருக்கும், மேலும் இரண்டு ஆண்டுகளில் செயற்படுத்தப்படும். பணக்கார முதலீட்டாளர்களை வெளியேற்ற அனுமதிக்கும் சட்ட ஓட்டைகளையும் மூடுவோம்.
- எரிபொருள் நிலையங்களில் ஏற்படும் விலை அதிகரிப்பினை நிறுத்த, எரிபொருள் ஒழுங்குபடுத்தலை நடைமுறைப்படுத்தல். பெரிய எண்ணெய் நிறுவனங்கள் ஒன்டாரியர்களின் பணத்தை அபகரிப்பதைத் தடுக்க, எரிபொருளின் சில்லறை விலை மற்றும் மொத்த விற்பனைக் குறிப்பை ஒழுங்குபடுத்த ஒன்டாரியோ எரிசக்தி வாரியத்தை ஹே வழிநடத்தும்.
- பயனர் கட்டணத்தை முடிவுறுத்தல். சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பின் ஒவ்வொரு பகுதியிலும் நோயாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மீதான நியாயமற்ற பயனர் கட்டணங்களை அகற்ற சுகாதாரத் துறை பங்காளிகளுடன் NDP இணைந்து செயற்படும்.
- நீர் கட்டணங்களை சமாளித்தல். NDP நீர் கொள்திறனை விரிவுபடுத்தும், காற்று மற்றும் சூரிய சக்தி உட்பட மலிவு விலையில் புதுப்பிக்கத்தக்கவைகளை அதிகரிக்கும் - பெரிய அளவிலான மின் சேமிப்பகத்தை மேம்படுத்தும், செலவு குறைந்த மின்சார இறக்குமதியை செயல்படுத்த கியூபெக் மற்றும் மனிடோபாவுடன் பெரிய மின் (பசனை) இணைப்புகளை உருவாக்கும். நாங்கள் தனியார் மயமாக்கல் மற்றும் விலையுயர்ந்த தனியார் மின் ஒப்பந்தங்களை இரத்து செய்து, பொது உரிமையை மீட்டெடுப்பதற்கும், நம்பகத்தன்மையைப் பேணுவதற்கும், மறுபடியும் நீர் கட்டணங்களை குறைந்த விலைக்கு கொண்டு செல்வதற்கும் சிறந்த வழிகளைக் காண்போம்.

BRAMPTON
Media Release

உடனடி வெளியீட்டுக்காக

**மூத்த குடிமக்களுக்கு ஆதரவளிக்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் புதிய ஒரு ஆன்லைன் டைரக்ட்டரியை அறிமுகம் செய்கிறது**

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 21, 2022) – ப்ராம்ப்ட்டன் நகர மக்களின் வயதிற்கு ஏற்றபடியான தொலைநோக்குப்பார்வைக்கு மேலும் உதவும் வகையிலும், மற்றும் சமுதாயத்தினருடனான உறவுகளை வலுப்படுத்தவும் புதிய ஒரு ஆன்லைன் ஆதார வளத்தினை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் துவக்கியது. இந்த மூத்த குடிமக்களுக்கான புதிய ஆன்லைன் அகரவரிசை பெயர்ப்புத்தகமானது (சுருக்கமாக கோர்வைப் புத்தகம்), மூத்த குடிமக்களுக்கான ஆதரவு தேடும் வகையிலான அகரவரிசை பெயர்ப் புத்தகமானது, மூத்த குடிமக்கள் மற்றும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்குக் கிடைக்கும் ஆதாரவளங்கள் மற்றும் சேவைகள் என்னென்னவென எளிதில் தெரிந்து கொள்வதற்கான ஒரு ஆன்லைன் கருவியாகும்.

இந்த அகரவரிசைப் பெயர்ப் புத்தகத்தில் கிடைக்கும் சில விஷயங்கள்:

- வீடு மற்றும் சமூகத்திற்கான ஆதரவுகள்
- போக்குவரத்து
- ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு
- நிதி மற்றும் அதை அடைவதற்கான வழிகள்
- மன நலம்
- புதிதாக வருவோர்க்கான ஆதரவுகள்

மார்ச் 2021 இல், ப்ராம்ப்ட்டன் நகரமானது, அவரவர் வயதுக்கு ஏற்ற விதமான "நகரங்கள் மற்றும் சமூகங்களுக்கான உலக சுகாதார அமைப்பின் (WHO) உலகளாவிய நெட்வொர்க்கில்" உறுப்பினரானது. நெட்வொர்க்கின் உறுப்பினர்கள் WHO அமைப்பின் வயதுக்கு ஏற்ற விதமான அணுகுமுறையின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள் மற்றும் அதனை மற்றவர்களும் புரிந்து கொள்ள உதவுகிறார்கள்; அவரவர் வயதுக்கு ஏற்ற சூழல்களை உருவாக்க உறுதியளிக்கிறார்கள் மற்றும் நெட்வொர்க்கில் தீவிரமாக பங்கேற்க ஒப்புக்கொள்கிறார்கள்.

இந்த முதியோர்களுக்கான ஆதாரவளக் கோர்வைப் புத்தகம், சமூகப் பங்கேற்பை ஊக்குவித்தல், சமூகத் தனிமைப்படுத்தலை இனம் கண்டு, அதற்கான தகவல் மற்றும் தகவல்தொடர்புக்கான ஆதாரங்களை வழங்குவதன் மூலம் ப்ராம்ப்ட்டனின் மூத்த குடிமக்களுக்கு ஆதரவளிக்க உதவுகிறது;

The Corporation of The City of Brampton
2 Wellington Street West, Brampton, ON L6Y 4R2 311 TTY: 905.874.2130

இந்தியா செய்திகள்
India News




# இந்தியா சீனர்களுக்கு வழங்கிய சுற்றுலா விசாவை ரத்து செய்தது

சீனர்களுக்கு சுற்றுலா விசா அளிப்பதை இந்தியா தற்காலிகமாக நிறுத்தி கொண்டதாக சர்வதேச விமான போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது. இந்தியா எடுத்துள்ள நடவடிக்கை குறித்து சர்வதேச விமான போக்குவரத்து கூட்டமைப்பு (IATA) சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதன்படி, சீன நாட்டினருக்கு வழங்கிய சுற்றுலா விசாக்கள் இனிமேல் செல்லுபடியாகாது என தெரிவித்து உள்ளது.

பூடான், மாலத்தீவுகள், நேபாளம் ஆகிய நாடுகளை சேர்ந்த பயணிகள் மட்டுமே இந்தியாவிற்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்திய குடியிருப்பு அனுமதி அட்டை, இந்தியா வழங்கிய விசா மற்றும் இ - விசா, வெளிநாடு வாழ் இந்தியர் அட்டை, இந்திய வம்சாவளி அட்டை, தூதரக கடப்பிதழ் ஆகியவற்றை வைத்துள்ள பயணிகள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று, 10 ஆண்டுகள் செல்லுபடியாக கூடிய சுற்றுலா விசாக்களும் இனி செல்லுபடியாகாது என தெரிவித்து உள்ளது. சீனப் பல்கலைக்கழகங்களில் படித்துவரும் கிட்டத்தட்ட 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்திய மாணவர்கள், அங்கு திரும்பி சென்று படிக்க முடியாமல் தவித்து வருகின்றனர். சீனாவிற்கு செல்ல அனுமதி அளிக்கும்படி மத்திய அரசு சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், சீனா அனுமதி வழங்காமல் காலம் தாழ்த்திவருகிறது. இதற்கு பதிலடியாக இந்தியா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.


# கோவை தனியார் கல்லூரி விடுதியில் மருத்துவ மாணவியின் சடலம் – விசாரணையில் வெளியான "திடுக்" தகவல்



கோவை பி.எஸ்.ஜி மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மாணவி தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. சென்னை வானுவம்பேட் பகுதியைச் சேர்ந்தவர் வெங்கட்வர்தன். இவரது மகள் நந்தினி (வயது 22). கோவை அவிநாசி சாலையில் உள்ள பி.எஸ்.ஜி மருத்துவக் கல்லூரியில் பயிற்சி மாணவியாக நான்காம் ஆண்டு பயின்று வருகிறார்.

கல்லூரியின் விடுதியில் தங்கி பயின்று வரும் நந்தினி தனது அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. இது குறித்து போலீசார் தரப்பில் கூறுகையில், "அறுவைசிகிச்சை செய்யும் கத்தியை பயன்படுத்திக் கொண்டு மணிகட்டு நரம்புகளை அறுத்த பின்னர் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். மாணவியின் மரணம் குறித்து பெற்றோர்களுக்கு தகவல் அளிக்கப்பட்ட நிலையில் விமானம் மூலம் மாணவியின் பெற்றோர்கள் கோவை வருகின்றனர். அவர்கள் வந்த பிறகு மாணவியின் உடல் உடற்கூறு ஆய்விற்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது" என்றனர். தற்கொலைக்கான முழு காரணம் இன்னும் தெரியவில்லை என்ற சூழலில் போலீசார் இது குறித்து விசாரணை நடத்துகின்றனர்.

# "தமிழகத்திலயும் குஜராத் போல மாநில அரசே துணைவேந்தரை நியமிக்கலாமே" கேள்வி எழுப்பும் முக ஸ்டாலின்



பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரை நியமிக்கும் அதிகாரம் தொடர்பான சர்ச்சைகள் வலுத்துள்ளது. மாநில பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை மாநில அரசே நியமிக்க வழிவகுக்கும் சட்டமசோதா இன்று தமிழக தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதாவை சட்டப்பேரவையில் உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தாக்கல் செய்ததை அடுத்து, மசோதா தமிழக சட்டசபையில் இன்று நிறைவேறியது. இதனால் தமிழக ஆளுநரின் அதிகாரம் பறிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளதாக பல்வேறு விமர்சனங்கள் வந்துள்ளன. சட்டத்திருத்தம் குறித்து பேசிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், துணைவேந்தர்களை நியமிக்க மாநில அரசுக்கு அதிகாரம் இல்லாததால் உயர்கல்வி பாதிக்கப்படுகிறது என்று தெரிவித்தார். தமிழகப் பல்கலைக் கழகச் சட்டங்களில் திருத்தம் செய்வதற்கான சட்டத்திருத்தம் அறிமுகம் செய்யப்பட்டதும், மாநில, மத்திய மற்றும் தனியார் பல்கலைக்கழக துணைவேந்தர்கள் மாநாட்டை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி நடத்துகிறார் என்பது நிலைமையின் தீவிரத்தை உணர்த்துகிறது.

இந்த சட்டத்தின் அவசியத்தை வலியுறுத்திய தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின், துணைவேந்தர்களை நியமிக்க மாநில அரசுக்கு அதிகாரம் இல்லாததால் மாநிலத்தில் உயர்கல்வி பாதிக்கப்படுகிறது என்றார். பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தில், துணை வேந்தர் நியமன உரிமை மாநில அரசிடம் இருப்பதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுட்டிக்காட்டினார். முன்னாள் தலைமை நீதிபதி மதன் மோகன் புஞ்சி தலைமையிலான மத்திய-மாநில உறவுகள் ஆணையத்தின் அறிக்கையையும் திரு ஸ்டாலின் சுட்டிக்காட்டினார். இந்த ஆணையம், 2010 ஆம் ஆண்டில் தாக்கல் செய்த அறிக்கையி, பல்கலைக்கழகங்களின் வேந்தர் பதவியில் இருந்து ஆளுநரை நீக்க பரிந்துரைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. சட்டத்திருத்தம் குறித்து பேசிய செயல்தலைவர் ஸ்டாலின், "மாநில அரசுடன் கலந்தாலோசித்து துணைவேந்தர்களை ஆளுநர் நியமனம் செய்கிறார். இந்த நடைமுறை "தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை அவமதிக்கிறது" என்றும் "மக்கள் ஆட்சியின் தத்துவத்திற்கு எதிரானது" என்றும் சுட்டிகாட்டினார். இந்த சட்டத்திற்கு அதிமுக, பாஜக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. ஆனால், எதிர்ப்புக்கு வலுவான எதிர்வினையை பதிவு செய்த தமிழக முதலமைச்சர், தெலுங்கானா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களிலும் இதே முறை பின்பற்றப்படுவதாக தெரிவித்தார். அதேபோல மகாரார'டிராவில் முதல்வர் உத்தவ் தாக்கரே தலைமையிலான கூட்டணி அரசு, கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே இதேபோன்ற நடவடிக்கையைத் தொடங்கியது என்னும் நிலையில், தமிழக அரசின் நடவடிக்கைக்கு அதிமுகவும் பாஜகவும் எதிர்ப்பு தெரிவிப்பது ஆச்சரியமாக இருப்பதாக தெரிவித்தார்.

கடந்த கால அரசியலை எண்ணி கவலை கொள்ளும் கல்வியாளர்கள், கடந்த சில ஆண்டுகளில், பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிகளுக்கான தேடல் குழுவின் பரிந்துரைகளை தமிழக ஆளுநர் நிராகரித்த சம்பவங்களை சுட்டிக்காட்டுகின்றனர். மாநிலத்துக்கு கூடுதல் சுயாட்சி வழங்க வலியுறுத்துவதன் அடிப்படையில் முன்வைக்கப்படும் இந்த மசோதாவை, குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டியது தமிழக ஆளுநர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே நேநுவு நுழைவு தேர்வுக்கு தமிழக அரசுக்கு விலக்கு அளிப்பதற்கான சட்டமசோதா உட்பட சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட குறைந்தது 10 மசோதாக்கள் ஆளுநரிடம் நிலுவையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விவகாரங்களின் அண்மை நிகழ்வாக, குடியரசு தலைவருக்கு அனுப்பாமல் மசோதாக்களை நிலைவையில் வைத்திருக்கும் ஆளுநர் ரவியை புறக்கணிக்கும் வகையில் ஆளுநர் அளித்த தேநீர் அழைப்பை மாநில அரசு புறக்கணித்தது குறிப்பிடத்தக்கது. தற்போது ஆளுநருக்கும் மாநில அரசுக்கும் இடையிலான மோதல் உச்சகட்டத்தை அடைந்துள்ள நிலையில், துணைவேந்தர் நியமன மசோதா, குடியரசுத் தலைவருக்கு உடனடியாக அனுப்பப்படுமா அல்லது அதும் கிடப்பில் போடப்படுமா என்பது தமிழக அரசியலில் பிரதான கேள்வியாக இருக்கிறது.

# உண்மையை மறைத்துப் பொய் பேசும் பிரதமர்".. மோடியின் பேச்சுக்கு மாநில முதல்வர்கள் கடும் கண்டனம்



இந்தியாவில் பா.ஜ.க ஆட்சி வந்ததிலிருந்தே விலைவாசி உயர்வு, வேலையின்மையும் அதிகரித்துள்ளது. மேலும் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் மக்களின் தினசரி வாழ்க்கையே திண்டாட்டமாக மாறியுள்ளது. இதுபோதாது என்று தினந்தோறும் பெட்ரோல், டீசல் விலை விண்ணை முட்டும் அளவு உயர்ந்து வருகிறது. மேலும் சுங்க கட்டணம், சமையல் எரிவாயு சிலிண்டர் என எதையும் விட்டுவைக்காமல் ஒன்றிய அரசு விலையை உயர்த்தி வருகிறது.

கடந்த ஆண்டு பெட்ரோல் விலை ரூ.100ஐ கடந்து விற்பனை செய்தபோது, விலையைக் குறைக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் அழுத்தம் கொடுத்தன. பிறகு தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் வாட்வரி குறைக்கப்பட்டதால் பெட்ரோல் விலை ரூ.100க்கு கீழ் குறைந்தது.

தற்போது மீண்டும் பெட்ரோல், டீசல் விலை ரூ.110ஐ கடந்து பல்வேறு மாநிலங்களில் விற்பனையாகிறது. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமமடைந்து வருகின்றனர். இந்நிலையில் மீண்டும் பெட்ரோல், டீசல் விலையைக் குறைக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன. ஆனால் ஒன்றிய பா.ஜ.க அரசு மவுனம் காத்து வருகிறது.

இந்நிலையில், நேற்று அனைத்து மாநில முதல்வர்களுடன் காணொலியில் பேசிய பிரதமர் நரேந்திரமோடி "மாநில அரசுகள் எரிபொருள் மீதான வாட் வரியை குறைக்க வேண்டும். பா.ஜ.க ஆளும் மாநிலங்களில் குறைக்கப்படுகிறது. ஆனால் எதிர்க்கட்சி ஆட்சியில் இருக்கும் மாநிலங்களிலும் குறைக்க வேண்டும்" என கூறியுள்ளார்.

உண்மையை மறைத்து மாநில அரசுகளைப் பிரதமர் மோடி குறை சொல்கிறார்" என மாநில முதல்வர்கள் பிரதமர் மோடியின் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "பெட்ரோல்-டீசல் விலை தொடர்பான பிரதமரின் பேச்சு முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல் உள்ளது" என விமர்சித்துள்ளார். மேலும் "ஒன்றிய அரசு குறைப்பதற்கு முன்பாகவே, பெட்ரோல் மீது விதிக்கப்படும் மாநில வரியைக் குறைத்தது தமிழ்நாடு அரசுதான் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும்" என்றும் தெரிவித்துள்ளார்.

இதையடுத்து மகாரார'டிரா முதல்வர் உத்தவ் தாக்ரேவும் பிரதமரின் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாகப் பேசிய முதல்வர் உத்தவ் தாக்ரே, "மாநில அரசால் பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துள்ளது என்பது உண்மையில்லை. மகாரார'டிரா அரசு ஏற்கனவே எரிவாயு மீதான வரியில் விலக்கு அளித்துள்ளது. மேலும் எரிவாயு பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், மதிப்புக்கூட்டு வரி 13.5%லிருந்து 3% குறைக்கப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார். இப்படி பிரதமர் நரேந்திர மோடியின் பேச்சுக்கு மாநில முதல்வர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். "முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறார் பிரதமர் மோடி" என்று பேரவையில் புட்டுப்புட்டு வைத்த முதலமைச்சர்.

இந்தியா செய்திகள் India News

# அலுவலகத்தின் தரைத்தளம் முழுவதிலும் கட்டுக்கட்டாக பணத்தை மறைத்து வைத்த மும்பை தொழிலதிபர்



மும்பை கல்பாதேவி பகுதியில் செயல்பட்டு வரும் வைர மார்க்கெட்டில் தினமும் கோடிக்கணக்கில் வியாபாரம் நடைபெறுகிறது. மிகவும் சிறிய அலுவலகமாக இருந்தாலும் அதிலும் கோடிக்கணக்கான மதிப்புடைய வைரம் இருக்கும். கல்பாதேவியில் செயல்பட்டு வரும் சாமுண்டா புல்லியன் என்ற கம்பெனியின் வியாபாரம் கடந்த 3 ஆண்டில் ரூ.23 லட்சத்தில் இருந்து ரூ.1,764 கோடிக்கு அதிகரித்தது. இதனால் அக்கம்பெனியின் செயல்பாட்டில் சந்தேகம் அடைந்த மாநில பொருள் மற்றும் சேவை வரித்துறை அதிகாரிகள், அக்கம்பெனியின் மூன்று அலுவலத்தில் சோதனை நடத்தினர். கல்பாதேவியில் உள்ள வெறும் 35 சதுர அடி அலுவலகத்தில் சோதனை செய்த போது ஆரம்பத்தில் எதுவும் தென் படவில்லை. ஆனால் அலுவலகத்தின் ஓரத்தில் தரையில் இருந்த தரை ஓடு லேசாக ஆட்டம் கண்ட நிலையில் இருந்தது.

உடனே அந்த தரை ஓடை எடுத்து பார்த்த போது, உள்ளே ஒரு சாக்குமூட்டை இருந்தது. அந்த மூட்டையை சோதனை செய்து பார்த்ததில் கட்டுக்கட்டாக ரூபாய் நோட்டுக்கள் இருந்தது. உடனே அதிகாரிகள் வருமான வரித்துறையினருக்கு தகவல் கொடுத்து வரவழைத்தனர். அலுவலகம் முழுக்க இரு துறையினரும் சேர்ந்து சோதனை செய்து பார்த்ததில் அலுவலகத்தின் சுவரிலும் சிறிய அறை அமைத்து அதிலும் பணத்தை பதுக்கி வைத்திருந்தது தெரிய வந்தது. இது தவிர 19 கிலோ வெள்ளியும் இருந்தது. இப்பணம் குறித்து கம்பெனி உரிமையாளர்களிடம் விசாரித்த போது தங்களுக்கும் இப்பணத்திற்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்று தெரிவித்தனர். பறிமுதல் செய்யப்பட்ட பணத்தை எண்ணி முடிக்கவே 6 மணி நேரம் எடுத்துக்கொண்டது. தொழிலதிபர் கணக்கில் வராத கறுப்பு பணத்தை மறைத்து வைத்திருந்ததாக தெரிகிறது. பறிமுதல் செய்தவற்றை வருமான வரித்துறை அதிகாரிகள் எடுத்துச்சென்றனர்.

# வாங்கிய ஒரே நாளில் மின்சார வாகனத்தின் பேட்டரி வெடித்து வாலிபர் சாவு; மனைவி, குழந்தைகள் காயம்

## மின்சார வாகங்களை தயாரிக்கும் நிறுவனங்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கி உள்ளது.

வாங்கிய ஒரே நாளில் மின்சார வாகனத்தின் பேட்டரி வெடித்து விபத்து ஏற்பட்டது. இந்த தீ விபத்தில் வாலிபர் இறந்தார். அவரது மனைவி மற்றும் அவர்களுடைய இரு குழந்தைகளும் தீக்காயம் அடைந்தனர்.

ஆந்திரபிரதேச மாநிலம் விஜயவாடாவில் மின்சார இருசக்கர வாகனத்தின் பேட்டரி வெடித்து சிதறியதில் ஒருவர் உயிரிழந்தார் மற்றும் மூவர் காயமடைந்தனர்.

மின்சார வாகனத்தை வாங்கி ஒரு நாள் கூட முழுமையாக நிறைவடையாத நிலையில், இப்படி வெடித்து விபத்து ஏற்பட்டிருப்பது, இதுபோன்ற மின்சார வாகங்களை தயாரிக்கும் நிறுவனங்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கி உள்ளது.

சிவகுமார் (40 வயது) என்ற அந்த நபர் முன்தினம் ஒரு மின்சார ஸ்கூட்டரை வாங்கியதாக கூறப்படுகிறது. இந்த நிலையில், அதிகாலை அந்த நபர் படுக்கையறையில் பேட்டரியை சார்ஜிங்கில் வைத்திருந்த போது சம்பவம் நடந்துள்ளது.

முன்தினம் இரவு வீட்டின் முன் அறையில் வாகனம் சார்ஜ் போடப்பட்டு இருந்தது. அதன், பின்பக்க அறையில் சிவகுமார் குடும்பத்தினர் தூங்கினார்கள். திடீரென அதிகாலை 3 மணியளவில் பேட்டரி வெடித்தது.

வெடிவிபத்தை தொடர்ந்து வீட்டின் மின் வயர்கள் எரிந்து புகை வெளியேறியது. அதில் விழித்துக்கொண்ட அவர்கள், அவசர அவசரமாக என்ன செய்வதென்று தெரியாமல், சமையலறைக்கு சென்றனர். அங்கு வாசல் இல்லாததால் அவர்கள் வெளியேற வழியில்லாமல் தவித்தனர்.

இந்த தீ விபத்தில் சிவகுமார், அவரது மனைவி (30 வயது) மற்றும் அவர்களுடைய ஆறாம் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு படிக்கும் இரு குழந்தைகளும் தீக்காயம் அடைந்தனர். அவர்களின் அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் ஓடி வந்து அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு அவரது மனைவி ஆபத்தான நிலையில் இருந்த நிலையில் உள்ளார். ஆனால், சிவகுமார் பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் தொடர்பாக, போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதனால் அவர்களுடைய உறவினர்கள் மற்றும் அக்கம்பக்கத்தினர் என அனைவரும் சோகத்தில் மூழ்கியுள்ளனர்.

பெட்ரோல் டீசல் விலை உயர்வால், எலக்ட்ரிக் வாகனங்கள் வாங்கி பயன்படுத்தலாம் என்று பொதுமக்கள் எண்ணுகின்றனர். ஆனால், இதுபோன்று அடிக்கடி ஏற்படும் துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள், மின்சார வாகனங்களை வாங்கும் எண்ணத்தை கேள்விக்குறியாக்கி உள்ளன.

கடந்த ஒரு வாரத்திற்குள், தெலுங்கானா மற்றும் ஆந்திராவில் இதுபோன்று இரண்டாவது முறையாக மின்சார வாகனம் வெடிவிபத்து சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடந்த ஏப்ரல் 19ஆம் தேதி, மின்சார இரு சக்கர வாகனத்தின் பேட்டரி வெடித்து சிதறியதில் தெலுங்கானா மாநிலம் நிஜாமாபாத் மாவட்டத்தில் 80 வயது முதியவர் உயிரிழந்தார். மேலும் இருவர் தீக்காயம் அடைந்தனர். முழுவதும் அண்மை மாதங்களில் நடைபெற்ற வெவ்வேறு இதுபோன்ற சம்பவங்களில், மேலும் சில உற்பத்தி நிறுவனங்களின் எலக்ட்ரிக் ஸ்கூட்டர்கள் மற்றும் மின்சார வாகனங்கள் வெடித்து விபத்து ஏற்பட்டிருப்பது, இதுபோன்ற மின்சார வாகங்களை தயாரிக்கும் நிறுவனங்களின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கி உள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை பார்வையிட்ட அமெரிக்க தூதுவர்!!!



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க தூதுவர் 26ம் திகதி செவ்வாய் காலை முகமாலை பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க தூதுவர் ஜூலி சுங் 26ம் திகதி செவ்வாய் காலை 7.45 மணியளவில் முகமாலை பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

அமெரிக்க கொடையாளர்களின் நிதி உதவியில் முகமாலை பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டுள்ளார்.

டாஸ் நிறுவனத்தினால் குறித்த பகுதியில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அவருக்கு குறித்த மனிதநேய பணி தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து குறித்த பகுதியில் மேற்கொள்ளப்படுவரும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் சென்று பார்வையிட்டதுடன், கள ஆய்வினையும் மேற்கொண்டு அங்கு கடமையில் ஈடுபட்டுள்ள மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியாளர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

தொடர்ந்து குறித்த பகுதியில் அகற்றப்பட்ட ஆபத்தமிக்க வெடி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு தூதுவருக்கு விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்தும் குறித்த பகுதியில் கண்ணிவெடிகள் காணப்படுகின்றமை தொடர்பிலும், அவற்றை அகற்றவேண்டிய தேவைகள் தொடர்பிலும் அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள டாஸ் நிறுவனத்தின் பணியாளர்களுடன் புகைப்படம் எடுக்கப்பட்டது. குறித்த விஜயத்தின்போது அமெரிக்க தூதரக அதிகாரிகள், டாஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது குறித்த மனிதநேயம் மிக்க பணியை முன்னெடுத்துவரும் ஊழியர்களை தூதுவர் பாராட்டியதுடன். தொடர்ந்தும் பணிகளை முன்னெடுக்குமாறும் அவர் கூறியிருந்தார். அங்கு பணிபுரியும் பெண்களுடன் தனியாக புகைப்படம் ஒன்றினையும் அவர் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# ராஜபக்ஷ குடும்பத்தினருக்கிடையில் இடம்பெற்ற இரகசியக் கலந்துரையாடல்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ராஜபக்ஷ குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று திங்கட்கிழமை (25) இரவு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கலந்துரையாடலில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

நாட்டில் நிலவும் பாரிய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசாங் கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகவும் இந்தக் கலந்துரையாடல் நேற்று நள்ளிரவு வரை நீடித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மன்னாரில் பட்டப்பகலில் பெண் ஒருவரின் நகை கழுத்திலிருந்து அறுக்கெடுக்கப்பட்டது

மன்னார் இலங்கை வங்கிக்கு அருகாமையில் பெண் ஒருவரின் சங்கிலி இனம் தெரியாத நபர்களால் அறுக்கப்பட்ட சம்பவம் ஒன்று 26-04-2022 அன்று இடம் பெற்றுள்ளது.

உப்புக்குளம் பகுதியை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரை பின் தொடர்ந்த இருவர் திடீரென சங்கிலியை அறுத்த நிலையில் சந்தேக நபர்கள் தப்பி சென்றுள்ளார். இந்த நிலையில் சம்மந்தப்பட்ட பெண் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொண்டுள்ள நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அண்மைக் காலமாக மன்னார் நகர் பகுதிகளில் வீடுகள் உடைக்கப்படும் சம்பவங்களும் திருட்டு சம்பவங்களும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடதக்கது.

**- மன்னார் நிருபர்**



## Grand Opening Ceremony of the Provincial Eelection Campaign Office for MARKHAM-THORNHILL PC Candidate LOGAN KANAPATHY

# MARKHAM-THORNHILL மாகாண தேர்தல் தொகுதியில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் சார்பில் போட்டியிடும் லோகன் கணபதி அவர்களுக்கு ஆதரவாகத் திரண்ட பல்லின மக்கள் கூட்டம்





23ம் திகதி சனிக்கிழமையன்று Markham - Thornhill தொகுதியில் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் சார்பில் போட்டியிடும் லோகன் கணபதி அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலகம் திறந்து வைக்கப்பெற்றது.

இந்தி திறப்பு விழாவில் பகுதியான ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் சமூகமளித்து தங்கள் ஆதரவை அவருக்கு வுழங்கினர்.

பல்லின மக்கள் அதிகமாக வாழும் இந்தத் தொகுதியில் வாழும் அனைத்து இன மக்கள் சார்பாகவும் மக்கள் திரண்டு வந்த அவரது வெற்றியை உறுதிப்படுத்தினர்.

அங்கு உரையாற்றிய வேட்பாளர் லோகன் கணபதி அவர்கள் ஒன்றாரியோ மாகாண மக்களுக்கு அதிக சேவைகளை வழங்கிய மாகாண கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் முதல்வர் டக் போர்ட் அவர்கள் தலைமையில் மீண்டும் Markham - Thornhill தொகுதி மக்களுக்கு சேவையாற்ற சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் மீண்டும் தேர்தலிலு; போட்டியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன் என்றார்










A C TOUR

ALL COUNTRIES TOUR SERVICES

கனடா வெஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் இரண்டாவது கிழமையில் ரொறன்ரோவில் இருந்து புறப்பட்டு மூன்றாவது கிழமையில் திரும்பி வருதல்.

British Colombia, Alberta ஆகிய 2 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களைப் பார்வையிடலாம். Vancouver-Rockies-Banff-Lake Louise-Icefield-Vicoria-Chemainus-Whistler and More...

| 7 Days | 8 Days | 9 Days | 10 Days | 11 Days | 12 Days | 13 Days | 14 Days | 15 Days |
|---|---|---|---|---|---|---|---|---|
| Reg. Price C$ 2500.00 | Reg. Price C$ 3000.00 | Reg. Price C$ 3500.00 | Reg. Price C$ 4000.00 | Reg. Price C$ 4500.00 | Reg. Price C$ 5000.00 | Reg. Price C$ 5500.00 | Reg. Price C$ 6000.00 | Reg. Price C$ 6500.00 |
| Sale Price C$ 2250.00 | Sale Price C$ 2500.00 | Sale Price C$ 2750.00 | Sale Price C$ 3000.00 | Sale Price C$ 3250.00 | Sale Price C$ 3500.00 | Sale Price C$ 3750.00 | Sale Price C$ 4000.00 | Sale Price C$ 4250.00 |

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு இந்த விலை *3 to 4 Star Hotel or Motel *Including All Admission

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.

விமான சீட்டு | தங்குமிட வசதி | பேருந்து சேவை | காலை உணவு | மதிய உணவு | இரவு உணவு

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078, TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR MR. RATHA FRANCISXAVIER

Email: a1actour.com@gmail.com

facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007

CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# Ontario budget offers big boost to home care to keep seniors at their homes

## நேற்றைய ஒன்றாரியோ மாகாண வரவு செலவுத் திட்ட உரையில் முதியோர்களுக்கு மேலும் சலுகைகளை வழங்கும் அறிவிப்புக்களை விடுத்த நிதி அமைச்சர்



நேற்று வியாழக்கிழமை கனடாவின் ஒன்றாரியோ மாகாண வரவு செலவுத் திட்ட உரையை மாகாணத்தின் நிதி அமைச்சர் பீற்றர் பெத்தலன்பவி ஆற்றிய போது மாகாணத்தில் உள்ள முதியோர்களுக்கு மேலும் சலுகைகளை வழங்கும் அறிவிப்புக்களையும் அறிவித்தார்.

இந்த அறிவிப்பின் பிரகாரம். நிதி அமைச்சர். அவர்கள் மாகாணத்தில் வாழும் அதிகமான முதியவர்களை வீட்டில் அதிக நேரம் தங்க வைத்திருக்கவும், அதன் மூலம். மாகாணத்தின் வைத்தியசாலைகள் மற்றும் முதியோர் இல்லங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சுமைகளை எளிதாக்கவும், வரவு செலவுத் திட்டம் வழி செய்யும் என்றார்.
அவர் குயின்பார்க் என்னும் மாகாணப் பாராளுமன்றத்தில் தொடர்ந்து வரவு செலவுத் திட்ட உரையை ஆற்றுகையில். மாகாணத்தின் முதல்வர் அவர்கள் தலைமையில் ஆராயப்பெற்று வியாழக்கிழமையன்று சமர்ப்பிக்கப்படும் இந்த திட்டத்தை தேர்தலுக்கு முன்னைய வரவு செலவுத் திட்டமாகப் பார்க்கக் கூடாது என்றும் தெரிவித்தார்.
மாகாணத்தின் தேர்தலுக்கு முந்தைய வரவு செலவுத்திட்டத்தில் , மூன்று ஆண்டுகளில் வீட்டுப் பராமரிப்புச் செலவை $1 பில்லியனாக உயர்த்துவதாகவும், குறைந்த வருமானம் கொண்ட மூத்தவர்களுக்கு புதிய வரிச் சலுகை வழங்குவதையும் உறுதிப்படுத்துகிறது என்றும் தெரிவித்தார்.

இந்த சலுகைத் திட்டத்தின் பிரகாரம். ஒன்றாரியோவில். 70 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய முதியோர்களுக்கான "முதியோர்கள் வீட்டில் கவனிப்பு" வரிச்சலுகை வழங்கப்பெறும் என்றும் மேலும் அவர்களின் பணத்தில் 25 சதவீதத்தை அதிகபட்சமாக கூ6,000 வரை திரும்பப் பெற அனுமதிக்கும், என்றும் வரி செலுத்தும் அவசியம் ஒன்றாரியோவின் முதியோர்களுக்கு இருக்காது என்றும் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் அடங்குபவர்களாக கருதப்படுகின்றவர்களான தகுதியுடைய குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உடைய முதியவர்கள் தனியார் பராமரிப்பாளர்கள், பாதுகாப்பு சீரமைப்புகள், சக்கர நாற்காலிகள் மற்றும் மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகள், வாக்கர்ஸ், மற்றும் , டயப்பர்கள், போன்ற முதியோர்களுக்கான பொருட்கள் மலிவான விலைகளுக்கு பெறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பெறும் என்றும் இதன் மூலம் முதியோர்கள் ஏனைய அவசியமான பொருட்கள் உட்பட, மற்ற செலவுகளுக்குப் பணம் போதிய அளவிற்கு வைத்திருப்பதற்கும் இந்த திட்டம் வழி செய்கின்றது என்றும் தெரிவித்தார்



நேற்று வியாழன் அன்று நிதியமைச்சர் பீட்டர் பெத்லென்.ஃ.பால்வி தனது வரவு செலவுத் திட்ட உரையில், "நீண்ட கால பராமரிப்பு நிலையங்களில் உள்ள படுக்கைகளும் வசதிகளும் மட்டுமே எமது மாகாணத்தில் உள்ள அன்பான மூத்தவர்களுக்கு கவனிப்பு தேவைப்படும் ஒரே வசதியாக இருக்கக்கூடாது" என்றும் அவர்கள் தங்கள் வீடுகளிலேயே அனைத்தையும் பெற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பெறும் என்றும் கூறினார்.

**The Progressive Conservative government has budgeted $110 million for the income tax credit it estimates will help about 200,000 seniors with family net incomes below $65,000.**

இவ்வாறு பார்க்கையில் ஒன்றாரியோவின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் அரசானது, இவ்வருடத்தின் வரவு செலவுத்திட்ட அறிவிப்பின் பிரகாரம் மாகாணத்தில் உள்ள சுமார் இரண்டு இலட்சம் முதியவர்களுக்கு வரிச் சலுகை வழங்கும் வகையில் சுமார் 110 மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது என்றும் அறியப்படுகின்றது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பான மேலதிக அறிக்கையை சமர்ப்பிக்க கால அவகாசம் கோரப்பட்டுள்ளது



மன்னார் மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட எச்சங்கள் மற்றும் சான்றுப் பொருட்கள் தொடர்பான மேலதிக அறிக்கையை சமர்ப்பிக்க நீதிமன்றத்தில் மூன்று வார கால அவகாசம் கோரப்பட்டுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரி மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவ ஆகியோர் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியை மேற்கொள்ள தேவையான காலம் தொடர்பிலும், ஏற்கனவே மீட்கப்பட்ட எச்சங்களை பிரித்தெடுத்து அறிக்கை தயார் செய்வதற்கான காலம் தொடர்பிலும் இன்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கமைய, இந்த விடயம் தொடர்பான மேலதிக அறிக்கைகளை தயார் செய்ய மூன்று வாரங்கள் அவசியம் என மன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கைக்கு அமைய, மனிதப் புதைகுழி வழக்கை எதிர்வரும் மே மாதம் 20 ஆம் திகதி வரை மன்னார் நீதவான் ஒத்திவைத்துள்ளார்.

இதனிடையே, மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் வழக்கு விசாரணை தொடர்பான முன்னேற்ற அறிக்கை வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, வவுனியா மேல் நீதிமன்றத்தில், மன்னார் மனிதப் புதைகுழி வழக்கு நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளது.

**- மன்னார் நிருபர்**

## காலி முகத்திடலில் வைக்கப்பட்டிருந்த பதாதைகள் வீசியெறியப்பட்டன!



இலங்கையில் கடந்த காலங்களில் அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் உள்ளாகி கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி காலி முகத்திடலில் ஜனாதிபதி செயலகத்தின் முன் வைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர்களின் புகைப்படங்களை தாங்கிய பதாதைகள் வீசியெறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவில் உடையில் பொதுமக்கள் குழுவொன்று ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக நேற்றைய தினம் இதனை அகற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரங்களாக தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் பாரிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பிரதமர் மகிந்த ராஜபக்ச மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரி, கொழும்பு ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் இளைஞர்கள் மற்றும் பலர் தொடர்ச்சியாக இன்றும் 20ஆவது நாளாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

## குருந்தூர்மலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் விஜயம்!

குருந்தூர்மலை பிரதேசத்தின் கீழ் உள்ள தண்ணிமுறிப்பு கிராமத்தைச் சேர்ந்த மக்களின் பூர்வீக காணிகள் மீள் குடியேற்றத்தின் பின்பு சில வருடங்களாக வனவள திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது.



பூர்விக காணிகளிலே தமது வாழ்வாதாரம் தங்கி இருப்பதாகவும் தமது பூர்வீக காணிகளை வன வள திணைக்களத்தினரிடம் இருந்து மீட்டுத் தருமாறும் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கவனத்திற்கு இம் மக்கள் கொண்டுவந்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் இது தொடர்பாக பாராளுமன்றத்தில் தனது கோரிக்கையை முன் வைத்திருந்தார்.

அதன் பிரகாரம் புதன்கிழமை (27) குருந்தூர் மலை பிரதேசத்திற்கு பாராளுமன்ற உறுப்பினர்,வனவள திணைக்களத்தினர், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக உதவிஅரசாங்க அதிபர் தலைமையிலான குழுவினர் மற்றும் பொதுமக்கள் என பலரும் வருகை தந்து இந்த காணி விடுவிப்பு தொடர்பான தற்போதைய நிலமை தொடர்பாகவும் கலந்துரையாடினார்கள்.

கையகப்படுத்தப்பட்டுள்ள இக் காணிகள் சட்டங்களுக்கு அமைவாக விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் வனவள திணைக்களத்தினர் இதன்போது தெரிவித்தனர்.

காணிகளை விடுவிப்பதற்கு உரிய அனைத்து விதமான நடவடிக்கைகளையும் நான் தொடர்ந்து முன்னெடுத்து வருவேன் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர்**


வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE PRESENTS...
சமூக உளவளம் பேணும் தொடர் - 38
Psychosocial Educational Series - 38
VASANTHAM TAMIL WELLNESS CENTRE

கனடாவில் தமிழ் இளைஞர்களும் தற்கொலைகளும்
Suicides among Tamil Youth in Canada

02 May 2022 (Monday)
Canada EST: 7:00 - 9:00 pm U.K: 11:00 - 1:00 am
Sri Lanka: 4:30 a.m - 6:30 am (Tuesday)

Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588

Dr. THAMOTHARAMPILLAI UMAHARAN
MBBS, Diploma in Clinical Psychiatry, MD (Psychiatry), MSc (Affective Neuroscience)
Senior Registrar, Mental Health Unit, Jaffna Teaching Hospital & Tellippalai Base Hospital, Sri Lanka
Visiting Lecturer, Faculty of Medicine & Faculty of Allied Health Science, University of Jaffna, Sri Lanka
Clinical Fellow in Psychiatry CAMH



Join us via zoom: CLICK HERE or go to link below in the Email
Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!

(647) 374-4685
VASANTHAM.CA
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
HOSTED BY DR.PARVATHY KANTHASAMY
CONTACT: (416) 847-4172

# புத்தரையும் மற்றும் அவரது போதனைகளையும் இழிவு படுத்தும் பவுத்த தேரர்கள்

**- அசோக செனிவிரத்ன**

நேற்று மகிந்த இராசபக்சவை சந்திப்பதற்கு வணக்கத்திற்குரிய சோபிதா தலைமையில் பவுத்த தேரர்கள் குழுவொன்று அதி சொகுசு கார்களில் செல்வதை நான் பார்த்துக்கொண்டிருந்தேன். பல பவுத்த துறவிகள் ஆடம்பர மெர்சிடிஸ் பென்ஸ்ஸில் சாரதி சகிதம் அதிகார தரகர்களாக மாறுவதைப் பார்ப்பது வழமையான காட்சியாகும். காவி அங்கி அணிந்த ஒரு குண்டர், ஞானசாரர், இனவாதத்தைப் பரப்புவதற்காக தேசத்தின் சனாதிபதியின் ஆதரவுடன் ஆடம்பரமாகச் சுற்றித்திரிகிறார், அதைவிட மோசமானது எம்மால் சபிக்கப்படும் முட்டாள் சனாதிபதி, தேசத்துக்காக ”நீதியான சட்டங்களை” உருவாக்க அவரை நியமிக்கிறார்! அவரது மிகப்பெரிய தகுதி இனங்களுக்கு இடையே பிளவை ஏற்படுத்தி வெறுப்பை உபதேசித்ததாகும்!



மீண்டும், பவுத்த தேரர்கள் பொது இடங்களில் மோசமான மற்றும் ஆபாசமான வார்த்தைகளைப் பயன்படுத்துவதைப் பார்ப்பது இப்போது வழக்கமான காட்சியாகிவிவிட்டது. அவர்கள் பயன்படுத்தும் சில சொற்கள் அருவருப்பான கெட்ட சொற்களாகும்.

“பவுத்த பிக்குகள் ஆடம்பரமாகப் பயணம் செய்து கொண்டு அரசியலுக்கு வருவதில் என்ன தவறு?” என்று ஒருவர் கேட்கலாம். அது ஏன் என்பதற்கான காரணம் இருக்கிறது.

ஏறக்குறைய 2600 ஆண்டுகளுக்கு முன்பு, புத்தபெருமானின் குறிக்கோளானது இந்தப் பூமியில் நமது இருப்புப் பற்றிய இறுதி உண்மையைத் தேடுவதாகும். மக்கள் ஏன் துன்பப்படுகிறார்கள்? நோய்வாய்ப்படுகிறார்கள்? இறக்கிறார்கள்? என்பதற்கான விடைகளைத் தேடிக்கொண்டிருந்தார். துன்பத்திற்கு ஒரு பொதுவான அம்சம் உள்ளதா? மேலும் அவர் புத்தர் நிலையை அடைந்த பின்னர், உயர்ந்த விழிப்புணர்வு கொண்டவராக இருந்து, துன்பத்திற்கான காரணம் ”தன்ஹா” அல்லது ”தாகம்” என்று போதித்தார். ஒருவர் துன்பத்தை நீக்க வேண்டுமானால் அவர் ஆசையை ஒழிக்க வேண்டும் என்று உபதேசித்தார். பின்னர் அவர் கர்மா, வாழ்க்கை சுழற்சி, இறப்பு மற்றும் மறுபிறப்பு ஆகியவற்றை தர்க்கரீதியாக விளக்கினார். இத்தகைய போதனைகளை நாம் பொதுவாக புத்த தர்மம் என்று அழைக்கிறோம், இது உண்மையில் கிமு முதல் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஓலைச் சுவடிகளில்



இலங்கை நாட்டில் எழுதப்பட்டது, ஆறாம் நூற்றாண்டிலிருந்து பவுத்தம் எழுத்தில் எழுதப்படும் வரை, புத்தரின் கதையும் அவரது உபதேசங்களும் சற்றே சிதைந்து, கடவுள்களை வணங்குவது மற்றும் அவர்களின் தெய்வீக தலையீட்டிற்காக பிரார்த்தனை செய்வது ஆகியவை புத்தரின் உபதேசங்களில் கலந்தன. புத்தர் ஒருவரின் முக்தி முற்றிலும் அந்த நபரைப் பொறுத்தது என்றும் எந்தக் கண்ணுக்குத் தெரியாத சக்திகளும் உதவ முடியாது என்றும் உபதேசித்தார்.

ஆசையை நீக்குவதே பவுத்தத்தின் சாரம் என்றால், பவுத்தத்தின் தூதர்களாக இருக்க வேண்டிய நமது தேரர்கள் சிலரின் ஆடம்பரத்தையும் அதிகாரத்தையும் தேடும் வாழ்க்கையை எவ்வாறு விளக்குவது?

இந்த உயர்ந்த பவுத்த இலட்சியங்களை நிலைநிறுத்துவதற்கும், புத்தரின் வார்த்தையைப் பரப்பும் உன்னதப் பணியைச் செய்வதற்கும், நாங்கள் அவர்களை வணங்குகிறோம், அவர்களுக்கு உணவு, தங்குமிடம், பணம் போன்றவற்றை வழங்குகிறோம். கொல்லாமை, திருடாமை, பொய் சொல்லாமை, கள்ளாமை போன்ற புத்தரின் ஒழுக்க விழுமியங்களை மக்களுக்கு உபதேசிப்பதில் பவுத்த துறவிகளின் பங்கு



மறுக்க முடியாதது. புத்தர் பவுத்த தேரர்களுக்கான தார்மீக நெறிமுறைகளையும் கோடிட்டுக் காட்டிச் சென்றிருக்கிறார்.

எந்த மதமாக இருந்தாலும், ஒரு சமூகத்திற்கு ஒரு தார்மீக திசைகாட்டி தேவை, அல்லாவிட்டால் எங்களை நாம் எளிதாக விலங்கு உலகிற்கு இழுத்து விட நேரிடும்.

பவுத்த தேரர்களுக்கு மக்கள் அளிக்கும் மரியாதைகள் புத்தரின் போதனைகளின்படி அவர்களின் ஒழுக்க நடத்தையுடன் நேரடியாக தொடர்புடையது.

தந்திரமான மற்றும் அதிகார வெறி கொண்ட அரசியல்வாதிகள் பவுத்த தேரர்கள் மற்றும் மற்றும் விகாரைகளைப் பயன்படுத்தி பொதுமக்களை ஏமாற்றுவதை அடிக்கடி மேற்கொள்கின்றனர். சில அரசியல்வாதிகள் இனப் பிளவுகளுடன் இணைந்து வாக்குகளைப் பெறுவதைப் போல, ஒரு தேரருடன் அல்லது கோவிலில் இருப்பதன் மூலம் இலட்சக்கணக்கான இதயங்களையும் அதன் மூலம் வாக்குகளையும் வெல்ல முடியும் என்பதை அவர்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். கோட்டாபய என்ற நபர்



சிங்கள பவுத்த உணர்வுகளைப் பயன்படுத்தி 6.9 இலட்சம் வாக்குகளால் வென்றது நினைவிருக்கிறதா? சில நாட்களுக்கு முன்னர் சஜித் பிரேமதாச, கொழும்புக்கான நீண்ட போராட்ட நடைபயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர் கண்டி தலதாமாளிகைக்குச் சென்று பவுத்தமதா பீடாதிகளிடம ஆசி மற்றும் வழிகாட்டல்களைப் பெற்றுக் கொண்டார். பிரசித்தி பெற்ற கங்கராமய விகாரைத் **(Gangaramaya Temple in Colombo)** தலைமைத் தேரரும் சஜித் அவர்களின் தந்தையின் காலத்தில் உயர்மட்ட அதிகாரத் தரகராக இருந்ததை நான் நினைவில் கொள்கிறேன்.

இராசபக்ச குடும்பத்தினர் அடிக்கடி கோவில்களுக்குச் சென்று பெரிய அளவில் பூசை வாத்தியங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினர். இவை அனைத்தும் மக்களின் பணத்தில் வழங்கப்பட்டன. ஜே.ஆர்.ஜே, இரணில், எம்.ஆர் மற்றும் பல உயர்மட்டத் தலைவர்கள் பவுத்த விகாரையைப் பயன்படுத்தித் தம்மை ”நல்ல பவுத்தர்கள்” எனச் சித்தரித்து பொதுமக்களை முட்டாளாக்கினர். மறுபுறம் நம் தேசத்தை கொள்ளையடித்து, நம் நாட்டை வறுமையில் தள்ளினார்கள்.

வெட்கமற்ற அதிகாரப் பசி காரணமாக சிறிலங்கா பொதுசன பெரமுனையில் இருந்து ஓடிப்போன விமல் மற்றும் கம்மன்பில கூட அண்மையில் ஒரு செல்வாக்குப் படைத்த பவுத்த தேரர் ஒருவரைச் சந்தித்தனர். இராசபக்சவை ஆட்சிக்குக் கொண்டுவருவதிலும் ஆபத்தான 20 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள வைப்பதிலும் அவர்கள் பங்குபற்றவில்லையா? ஸ்ரீலங்கா பொதுசன பெரமுனவில் இருந்தும் இராசபக்சாக்கள் மூழ்கும் கப்பல் அதில் ஒன்றும் இல்லை என்பதால் அவர்கள் அதிலிருந்து குதிக்கவில்லையா?



எனவே ஒரு தேசமாக, 95% அரசியல் தலைவர்களாலும் பல பவுத்த தேரர்களாலும் ஏமாற்றப் பட்டதில் நாம் குற்றவாளிகள் அல்லவா? எளிமையாகச் சொன்னால், நவீன உலகில், பவுத்த தேரர்கள் அரசியலில் ஈடுபடுவது ஒருபுறமிருக்க, அரச பதவியையும் தேடுகிறார்கள்.

அவர்கள் வணக்கத்திற்குரிய மஞ்சள் அங்கியைப் பயன்படுத்தி அதிகாரபலத்தைத் தேடுகிறார்கள். அதே நேரத்தில் சும்மா இருந்து கொண்டு இலவசங்களைப் பெற்று வாழ்க்கையிலிருந்து பயனடைகிறார்கள். ஆம், அவர்கள் அதிகாரபலத்தைத் தேடி அரசியலில் ஈடுபடுவது மிகவும் வரவேற்கத்தக்கது. ஆனால் முதலில் அந்த காவி அங்கியை வெளியே வீசியெறியுங்கள். அதன் பின் உழைத்து அவர்கள் அரசியல் நுழைந்து விரும்பியதைச் செய்யட்டும்.

(மூலம் **https://www.colombotelegraph.com/index.php/shaming-buddha-his-teachings/.** -***தமிழாக்கம் நக்கீரன்***)


## Canada Summer Job Program

Job Posting 1: Project Accountant Job Posting 2: Computer Trainer

The Senior Tamil Society of Peel (STSP) is a registered non-profit organization supporting Tamil seniors and others primarily in Mississauga. With an active membership of over 600 members, STSP thrives to support seniors to lead an active and healthy lifestyle by organizing weekly activities and health seminars.
The Project Accountant and Computer Trainer will report to the STSP Secretary.

**Project Accountant** will work on:

Ensuring the funds received for each project are spent to activities specified in the submitted proposals and within the approved amount.
Working with the STSP treasurer in maintaining all financial transactions and creating monthly financial report for all current projects.

**Computer Trainer** will work on:

Maintaining and updating the STSP web page periodically and helping seniors to solve basic computer issues.
Organizing and conducting hand-on basic computer training for seniors
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages

**Required Qualification / Experience**

Project Accountant:

At least a Diploma in Accounting with a minimum of two years of work experience in a computerized accounting environment or three years of work experience in a computerized accounting field.
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages

Computer Trainer

Basic computer skills with proficiency in Word, Excel and Power point.
Experience on designing, updating troubleshooting websites.
Ability to work with teams of seniors
Fluency in Tamil and English languages
Negotiable and according to the experience

**Salary & benefits:** Minimum wage according to the Government Summer Job Program
**Duration of engagement:** Three months **Deadline for application**: April 25, 2022

Please forward your application with your updated resume by email to:

**info@peeltamilseniors.ca**

Nadarajah Moorthy Cell: 416 473 5380
Secretary nmoorthy10@gmail.com



# கோட்டா கோ கமவும் மே பதினெட்டும்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்

**கோ**ட்டா கோகம கிராமத்தில் யுத்த வெற்றி வீரர்களுக்கும் ஒரு குடில் ஒதுக்கப்பட்டது தொடர்பாக நான் தெரிவித்த கருத்துக்கு எனது நண்பர் ஒருவர் பதிலளித்தார். அரசியல் சிவில் சமூக செயற்பாட்டாளர் ஆகிய அவர் அண்மையில் கோட்டாகோகம கிராமத்திற்கு விஜயம் செய்திருந்தார். அவர் தரும் தகவல்களின்படி ரணவிரு குடிலில் அமர்ந்திருக்கும் படைவீரர்கள் போராட்டம் தொடங்கிய காலத்திலிருந்து அதில் இணைந்து செயற்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் யுத்த வெற்றியை ஒரு அரசியல் முதலீடாக முன்னெடுக்கும் ராஜபக்சக்களின் யுத்த வெற்றிவாதத்தை ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்றும் அவர்களை யுத்த வெற்றி வாதத்திற்கூடாகப் பார்க்கத் தேவையில்லை என்றும் நண்பர் கூறினார்.

எனினும், ரணவிரு குடிலை அக்கிராமத்தில் உருவாக்க காரணம் அரசாங்கம் முன்னெடுக்ககூடிய முறியடிப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கும்தான் என்ற ஒரு விளக்கம் உண்டு. எவ்வாறெனில் இலங்கை தீவு ஏற்கனவே மூன்று தடவைகள் தன் சொந்த இளையோரின் ரத்தத்தில் குளித்த ஒரு நாடு. ஜே.வி.பியின் இரண்டு ஆயுதப் போராட்டங்கள், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் என்று கடந்த ஒரு நூற்றாண்டுக்குள் இலங்கைத்தீவு மூன்று தடவைகள் தனது சொந்த மக்களின் ரத்தத்தில் குளித்த ஒரு நாடு. எனவே இப்பொழுது நடந்துகொண்டிருக்கும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களையும் குறிப்பாக பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இழந்த இளைய தலைமுறையின் ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு நசுக்காது என்று நூறுவீதம் நிச்சயமாகக் கூற முடியாது.

ஆனால், அவ்வாறு நசுக்குவது என்றால் அதை தொடக்கத்திலேயே செய்திருந்திருக்க வேண்டும். இப்பொழுது அது உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் ஒன்றாக மாறியிருக்கும் பின்னணியில், குறிப்பாக கொழும்பின் மையத்தில், தூதரகங்களின் மத்தியில் அக்கிராமம் அமைந்திருப்பதனால் அதனை இனி இரும்புக்கரம் கொண்டு நசுக்குவது கடினமானதாக இருக்கும் என்றும் ஒரு விளக்கம் உண்டு.

எனினும் அரசாங்கத்தின் முறியடிப்பு நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு ஒரு தற்காப்பு ஏற்பாடாக கிராமத்தில் குடியிருப்பவர்கள் ரணவிரு குடிலை அங்கு அமைத்திருக்கலாம் என்றும் கருதலாம். தாங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு எதிரானவர்கள் அல்ல தமது போராட்டம் தேசத்துரோகமானது அல்ல என்பதனை அவர்கள் நிரூபிக்க முற்படுகிறார்கள். அவர்கள் கைகளில் சிங்கக் கொடிகளை ஏந்தி வைத்திருப்பதும் அவ்வாறான ஒரு தற்காப்பு உள்நோக்கத்தை கொண்டதா என்ற சந்தேகம் தமிழ் தரப்பில் உண்டு.

இவ்வாறானதொரு பின்னணியில் கோட்டா கோகம கிராமத்தில் ரணவிரு குடில் உருவாக்கப்பட்ட பின் அங்கே மனித உரிமை செயற்பாட்டாளர்களால் காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான ஒரு குடிலும் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ரணவிரு கிராமத்தை சமன் செய்யும் ஒரு நடவடிக்கையாகவும் பார்க்கப்படுகிறது.

எதுவாயினும் இப்படிப்பட்ட எல்லா விமர்சனங்களுக்கும் அப்பால் கோட்டா கோகம கிராமத்தில் கூடியிருப்பவர்களோடு தமிழ்த் தரப்பு உரையாட வேண்டும். இப்பொழுது நொந்து போயிருக்கும் படித்த சிங்கள நடுத்தர வர்க்கத்தின் மனசாட்சியை உலுப்பும் விதத்தில் தமிழ்த் தரப்பு விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதன் மூலம் சிங்களப் பொது உளவியலைக் கூட்டுக் குற்ற உணர்ச்சிக்கு உள்ளாக்க வேண்டும். அவ்வாறு சிங்களப் பொது உளவியலின் கூட்டுக் குற்ற உணர்ச்சியைத் தூண்டவில்லை என்றால் இலங்கைத் தீவுக்குள் இரண்டு இனங்களும் எந்த ஒரு இணக்கத்துக்கும் போக முடியாது. எனவே கோட்டா கோ கம கிராமத்தோடு தமிழ்த் தரப்பு உரையாட வேண்டும். அதன் பொருள் மெய் மறந்து இணைந்து போராட வேண்டும் என்பதல்ல. முதலில் உரையாட வேண்டும்.

குறிப்பாக இன்னும் ஒரு வாரத்தில் மே மாதம் தொடங்குகிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அது நினைவு கூருதலுக்கான மாதம். கடந்த சில ஆண்டுகளாக தமிழ் மக்களின் நினைவுகூரும் கூட்டுரிமை மறக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக தென்னிலங்கையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களின் நிலைப்பாடு என்ன?

இப்போதுள்ள நிலைமைகளின்படி ஜனாதிபதி வீட்டுக்குப் போகக்கூடிய நிலைமை இன்னமும் தோன்றவில்லை. அதேசமயம் பௌத்த மகா நாயக்கர்களின் வேண்டுகோளை ஏற்று ஜனாதிபதி உருவாக்கக்கூடிய இடைக்கால ஏற்பாட்டில் எதிர்க்கட்சிகள் இணையுமா என்பதும் சந்தேகமே. இந்நிலையில் ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டு காலிமுகத்திடலில் கூடியிருப்பவர்கள் மே மாதம் வருவதற்கு இடையில் வீட்டுக்கு போகக்கூடிய விதத்தில் திருப்திகரமான மாற்றங்கள் ஏற்படுமா என்பது சந்தேகமே. அவ்வாறு அக்கிராமம் மே 18 ஆம் திகதியும் அங்கே இருக்குமாக இருந்தால் நினைவு கூர்தல் தொடர்பாக அக்கிராமத்தில் இருப்பவர்கள் தமது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டியிருக்கும்.

கோட்டா கோ கம கிராமத்தில் நினைவு கூருவதற்கு இடம் இருக்குமா? அல்லது நினைவுகூர்தல் தொடர்பாக கோட்டா கோ கம கிராமத்தில் இருப்பவர்களின் கருத்து என்ன? அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கும் எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

கடந்த ஆண்டு சஜித் பிரேமதாச நினைவு கூர்தல் தொடர்பாக தமிழ் மக்களுக்கு சாதகமாகக் கருத்துத் தெரிவித்திருந்தார். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மக்கள் துப்பாக்கியின் நிழலில்தான் நினைவுகூர முடிகிறது. கடந்த ஆண்டு மட்டக்களப்பில் நினைவு கூர்தலை அனுஷ்டித்தவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு, கடந்த திங்கட்கிழமைதான் விடுவிக்கப்பட்டார்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

எனவே நினைவுகூர்தல் தொடர்பில் கோட்டா கோ கம கிராமத்தில் இருப்பவர்களின் தார்மீக நிலைப்பாடு என்ன என்பதனை அறிவது அவசியம். கோட்டா கோகம கிராமத்தில் இருப்பவர்கள், மற்றும் அக்கிராமத்தை எதிர்ப்பின் மையமாக கருதுபவர்கள் அனைவரும் தமிழ் மக்களின் நினைவு கூருதலுக்கான கூட்டுரிமை தொடர்பாக ஒரு நிலைப்பாட்டுக்கு வர வேண்டியிருக்கிறது. இந்த நிலைப்பாடு தமிழ் மக்களை அக்கிராமத்தை நோக்கி போவதா இல்லையா என்ற முடிவை எடுக்க உதவக்கூடும். தென்னிலங்கையில் நிகழும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் விலகி நின்று சாட்சிகளாகக் காணப்படும் தமிழ் மக்களின் மனதை மாற்ற அது உதவக்கூடும்.

இதுவிடயத்தில் தமிழ் தரப்பிலிருந்து யாராவது கோட்டா கோகம கிராமத்தோடு உரையாடினால் என்ன?

இலங்கைத் தீவில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துவது என்றால் அதற்கு தமிழ் சிங்கள முஸ்லிம் ஆகிய மூன்று தரப்புக்களும் இணைந்தால்தான் உண்டு. அதை தனியே சிங்கள மக்களால் செய்ய முடியாது என்பதைத்தான் 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் உணர்த்தியது. எனவே மூன்று இனங்களும் இணைந்தால் மட்டும்தான் இச்சிறிய தீவில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

ஆனால் அரசாங்கத்துக்கு எதிராக போராடும் பெரும்பாலானவர்கள் ஒரு குடும்பத்தை ஆட்சியில் இருந்து அகற்றினால் எல்லாம் சரியாகிவிடும் என்று கருதுவதாக தெரிகிறது. அவர்கள் தமது எதிர்ப்பு முழுவதையும் ஒரு குடும்பத்தின் மீதே குவிக்கிறார்கள். அதிலும் குறிப்பாக பசில் ராஜபக்ஷவின் மீது முழு வெறுப்பையும் காட்டுகிறார்கள். பசில் ராஜபக்சவை ஒரு காகமாக உருவகித்து அவர் மீது தொடர்ச்சியாக தனிப்பட்ட முறையில் தாக்கி வருகிறார்கள். கடந்த செவ்வாய்க்கிழமை எதிர்க்கட்சிகள் ஒழுங்குபடுத்திய பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டத்தில் ஒரு பிரம்மாண்டமான காகச் சிலையை செய்து அதன் கழுத்தில் குரக்கன் சால்வையைக் கட்டி ஊர்வலமாக எடுத்துச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது. பெரியவர்கள் தொடக்கம் சிறுகுழந்தைகள் வரையிலும் காகம் என்றால் பஸில் என்று நக்கலடிக்க காணலாம்.

ஆனால் இங்கு பிரச்சினை ஒரு பசில் ராஜபக்ஷ மட்டுமல்ல. அவர் பத்து வீதம் கொமிஷன் பெற்றதால் மட்டும் நாடு கெட்டுப் போகவில்லை. அல்லது ஏனைய ராஜபக்சக்கள் கொள்ளை அடித்ததால் மட்டும் நாடு கெட்டுப் போகவில்லை. இந்த எல்லா ராஜபக்சக்களும் எப்படி ஒரேயடியாக நாடாளுமன்றத்துக்குள் வந்தார்கள்? என்ற கேள்வியை சிங்கள மக்கள் தங்களைத் தாங்களே கேட்கவேண்டும். யுத்தவெற்றிதான் அதற்கு அடிப்படைக் காரணம். தமிழ் மக்களுக்கு எதிராக பெற்ற வெற்றிதான். அதாவது இனவாதம். இனவாதத்தை முதலீடு செய்துதான் ஒரு குடும்பம் ஆட்சியைக் கைப்பற்றியது. இந்த குடும்பம் மட்டுமல்ல இதற்கு முன்னரும் கொழும்பை யார் ஆட்சி செய்வது என்பதனை இனவாதம்தான் பெருமளவுக்கு தீர்மானித்திருக்கிறது. அதுதான் இலங்கைத்தீவின் சிங்கள-பௌத்த அரசுக் கட்டமைப்பின் அடிப்படை பண்பு. அதை மாற்ற வேண்டும். அதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் தயாரா? எதிர்க்கட்சிகள் தயாரா?

தமிழ் மக்கள் கேட்கும் மாற்றம் என்பது நாடாளுமன்றத்தில் இப்பொழுது நடப்பது போன்ற அரசியல் சங்கீதக் கதிரை விளையாட்டு அல்ல. அரசாங்கம் அதைத்தான் செய்து கொண்டிருக்கிறது. பௌத்த மகா நாயக்கர்களின் எச்சரிக்கையையடுத்து ஜனாதிபதி மீண்டும் அவ்வாறான ஒரு சங்கீதக் கதிரை விளையாட்டுக்கு தயாராகி வருகிறார். அதை இன்னும் திருத்தமான வார்த்தைகளில் சொன்னால் இப்போது இருக்கும் யாப்புக்குள், இப்போதுள்ள நாடாளுமன்றத்துக்குள், என்னதான் மாற்றத்தைச் செய்ய முற்பட்டாலும் அது ஒரு சங்கீதக் கதிரை விளையாட்டாகத்தான் முடியும். எனவே ஆர்ப்பாட்டக்காரர்கள் கேட்க வேண்டியது அடிப்படையான கட்டமைப்பு மாற்றத்தை. அதுதான் அவர்களுக்கும் நிரந்தர மீட்சியைக் கொடுக்கும். அதைத்தான் தமிழ் மக்களும் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக கேட்டு வருகிறார்கள்.

கோட்டா கோகம கிராமத்தில் தேசிய கீதம் தமிழில் இசைக்கப்பட்டது. ஒரு நல்ல சகுனம்தான். எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டது ஒரு நல்ல சகுனம்தான். ஆனால் தமிழ் மக்களை இது போன்ற சீர்திருத்தங்களால் மட்டும் திருப்திப்படுத்த முடியாது. ஏனெனில் தமிழ் மக்களின் சந்தேகங்கள் நூற்றாண்டு காலத்துக்கு உரியவை. காயங்கள் ஆழமானவை, இப்பொழுதும் ஆறாதவை.

தமிழ் மக்கள் வாகனத் தகட்டு இலக்கங்களில் பொறிக்கப்பட்ட சிங்கள ஸ்ரீ எழுத்து, சிங்கக்கொடி, தேசிய கீதம் எல்லாவற்றுக்கும் எதிராகப் போராடினார்கள். ஆனால் இப்பொழுது போராடுவது இனப்படுகொலைக்கு எதிரான நீதியை கேட்டு. சின்னச்சின்ன சீர்திருத்தங்களைக் கேட்டு அல்ல.

சிங்கள பௌத்த மேலாண்மையை பாதுகாக்கும் ஒற்றையாட்சி கட்டமைப்பை உடைத்து பல்லினத்தன்மைமிக்க ஒரு தீவைக் கட்டியெழுப்புவதே தமிழ் மக்கள் கேட்கும் கட்டமைப்பு மாற்றம் ஆகும். காகச் சிலையை தெருத்தெருவாக இழுத்துச் செல்லும் சிங்களமக்கள் இந்த அடிப்படை மாற்றத்தை ஏற்றுக் கொள்வார்களா?

அண்மையில் மட்டக்களப்பில் அன்னை பூபதி நினைவு தினம் வந்தது.அந்த நினைவு நாளை அனுஷ்டிக்கக் கூடியவர்கள் என்று அரசாங்கம் இனங்கண்ட ஒரு தொகுதி அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக தடை உத்தரவுகள் விநியோகிக்கப்பட்டன. அதேசமயம் கடந்த ஆண்டு நினைவு கூர்தலை அனுஷ்டித்த பத்துபேர் கைது செய்யப்பட்டு நான்கு மாதங்களின் பின் இந்த வாரம் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். தென்னிலங்கை குழம்பிப் போயிருக்கும் ஒரு பின்னணியில் இம்முறை மே 18ஐ நினைவு கூர்வது தொடர்பில் அரசாங்கம் எப்படிப்பட்ட ஒரு முடிவை எடுக்கும்? ஆனால் அதைவிட முக்கியமானது இப்பொழுது அரசுக்கு எதிராக போராடிக் கொண்டிருக்கும் சிங்களமக்கள் அது தொடர்பாக என்ன முடிவெடுப்பார்கள் என்பதுதான்.






# கிளிநொச்சி மக்களுக்கு இடர் கால உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி மற்றும் ஜெயபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மற்றும் பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்களுக்கான இடர் கால உலர் உணவுப் பொதிகள் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் புதன்கிழமை (27) மதியம் வழங்கி வைக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வைபவ ரீதியாக வழங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தெரிவுசெய்யப்பட்ட ஜெயபுரம் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி மக்களுக்கு ஜெயபுரம் பொது மண்டபத்தில் அத்தியாவசிய உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

சுமார்3350 ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொதிகள் தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

இதன் போது கிராம சேவையாளர்கள், சமூக பணியாளர்களுடன் இணைந்து அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது.

நாட்டில் தற்போது நிலவி வருகின்ற உணவு தட்டுப்பாடு, உணவுப் பொருட்களுக்கான விலை ஏற்றம் காரணமாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பாரியளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனை கருத்தில் கொண்டு மன்னார், வவுனியா, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களுக்கு நிவாரண பணிகள் நடைபெற்று வரும் நேரத்தில் தீவக மக்களின் நலனை கருத்தில் கொண்டு நிவாரண பணிகள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்களும் குறித்த பகுதிகளில் கிராம சேவையாளர் களும் கலந்து கொண்டார்கள்.

- மன்னார் நிருபர்







# அரசாங்கத்திற்கு எதிராக போராட்டங்களை முன்னெடுக்க இரா.சாணக்கியனுக்கு நீதிமன்றம் தடை!!!



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுவதை தடுக்கும் வகையிலான நீதிமன்ற உத்தரவு பொலிஸாரினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

களவாஞ்சி பொலிஸாரினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள குறித்த நீதிமன்ற உத்தரவு வியாழக்கிழமை (28) இரா.சாணக்கியனிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தனக்கு எதிரான நீதிமன்ற தடை உத்தரவு குறித்து இரா. சாணக்கியன் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்தார், “களவாஞ்சிக்குடி பொலிஸ ாரினால் எனக்கு எதிராகவும், நான் சார்ந்தவர்கள் என்ற அடிப்படையில், என் சார்ந்தவர்கள் யார் என தெரியவில்லை. இலங்கையில் வாழும் அனைவருமே நான் சார்ந்தவர்கள்தான்.

அவ்வாறு இருக்கும்போது, 14 நாட்களுக்கு எந்தவிதமான விடயங்களும் வீதியை மறித்தோ பொதுசொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தும் வகையிலோ எந்தவொரு விடயமும் செய்யக்கூடாது என நீதிமன்றத்தினால் ஒரு தடை உத்தரவி வழங்கியுள்ளனர்.

இதான் இன்று நாட்டில் அராஜகமான நிலை, ஏன் என்றால் இன்று இலங்கையின் அனைத்து பிரதேசங்களிலுமே மக்கள் வீதியிலேயே போராடும் போது, இன்று களவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மாத்திரம் ஒரு நீதிமன்ற தடை உத்தரவினை எடுத்திருக்கின்றார் என் என்று சொன்னால், இந்த நாட்டில் ஒரு நாடு ஒரு சட்டம் இல்லாவிட்டால் இந்த நாட்டில் தமிழர்களுக்கு இன்னுமொரு சட்டமா என்பதுதான் நீண்டகாலமாக எங்களுக்கு இருக்கின்ற கேள்வி.

அதனை மீண்டும் ஒருமுறை உறுதி செய்திருக்கின்றார் களவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி. ஏன் என்றால் இலங்கையில் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடைபெறாத இடங்கள் இல்லை. அவ்வாறு நடக்கும்போது, களவாஞ்சிக்குடியில் மாத்திரம் இவ்வாறு தடை உத்தரவினை பெற்றுக்கொண்டுள்ளமையினை ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறான விடயங்கள் ஊடாக மக்களை கட்டுப்படுத்த அரசாங்கம் முனையும் போது, மக்கள் இதனையும் விட உத்வேகமாக போராட முனைவார்கள். நான் இன்று வரை போராட்டங்களை செய்ய வேண்டும் என நினைக்கவில்லை. ஆனால் இந்த தடை உத்தரவு கிடைத்ததற்கு பின்னர் போராட்டம் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தினை தருகின்றது.

கோட்டா கே கோம் என்ற விடயம் நடைபெறும் வரை, அதாவது கோட்டாபய ராஜபக்ஷ வீடு செல்லும் வரை இந்த போராட்டங்கள் தொடர வேண்டும். அதிலே என்னுடை பங்களிப்பும் நிச்சம் இருக்கும்.” எனத் தெரிவித்துள்ளார்.

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS C R PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077




No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

இலங்கை செய்திகள் Sri Lanka News

# அம்பாறையிலும் பல அரச தனியார் துறை தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பு



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு உரிய தீர்வுகளை விரைவாக பெற்றுத்தருமாறு அரசை வலியுறுத்தி நாடு பூராகவும் பல அரச தனியார் துறை தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பினை மேற்கொண்டுள்ளன.

இதற்கமைய வியாழக்கிழமை (28) அம்பாறை மாவட்டத்தின் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், நிந்தவூர், அம்பாறை நகர் பகுதி, நாவிதன்வெளி, அக்கரைப்பற்று, பகுதிகளில் பணிப்பகிஷ்கரிப்புகள் பல தரப்பினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



குறிப்பாக அரச நிறுவனங்களான பிரதேச செயலகங்கள் திணைக்களங்களில் ஊழியர்களின் வரவு வீதம் வழமையை விட குறைந்த அளவில் காணப்படுகின்றது. அத்துடன் இங்குள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் மாணவர்களின் வருகை மந்த கதியில் உள்ளதுடன் பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

சில இடங்களில் உள்ள தனியார் நிறுவனங்கள் வங்கிகளில் இரு மணித்தியாலங்கள் வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு இப்போராட்டத்திற்கு ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளனர்.

இது தவிர அம்பாறை மாவட்டத்தில் பொதுமக்களின் நடமாட்டமானது வழமையை விட குறைந்த அளவில் உள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

பாதுகாப்பு தரப்பினர் பாதுகாப்பு கடமையில் ஆங்காங்கே ஈடுபட்டுள்ளனர். மேலும் இங்குள்ள வைத்தியசாலைகளில் உள்ள தாதிகள் வைத்தியர்கள் ஊழியர்கள் இணைந்து அரசின் செயற்பாட்டை கண்டித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

இதே வேளை பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக்குழுவின் தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர்களும் அரசாங்கத்தின் செயற்பாட்டை கண்டித்து ஒரு நாள் அடையாள பணிப்பகிஷ்கரிப்பினை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையிலிருந்து மேலும் இரண்டு பேர் அகதிகளாக தமிழகம் சென்றனர்

## பாதுகாப்பு அதிகாரிகள் தீவிர விசாரணை





இலங்கையில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி, உணவு பற்றாக்குறை, கடுமையான விலைவாசி உயர்வு உள்ளிட்ட காரணங்களால் இலங்கையில் உயிர் வாழ முடியாத இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் நோக்கி வந்த வண்ணம் உள்ளனர்.

இந்த நிலையில் 28-04-2022 அன்று ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியை அடுத்த புதுக்குடி கடற்கரையில் இலங்கையில் இருந்து படகு மூலம் இரண்டு பேர் வந்து இருப்பதாக கிடைத்த தகவலையடுத்து மரைன் போலீசார் அங்கு சென்று பார்த்தபோது யாழ்ப்பாணம் மாவட்டம் குருநகர் பகுதியை சேர்ந்த சீலன், மற்றும் அருள்ராஜ் என இருவர் அகதிகளாக வந்திருப்பது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து அவர்கள் இருவரையும் மரைன் போலீசார் தொண்டி மரைன் காவல் நிலையத்துக்கு அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவர்களிடம் உடைமைகள் எதுவும் இல்லாததால் இவர்கள் அகதிகளாக வந்தார்களா அல்லது வேறு கடத்தல் சம்பவங்களில் தொடர்புடையவர்களா என்பது குறித்து பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுவரை இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் 22ஆம் தேதி முதல் இன்று வரை 77 பேர் அகதிகளாக வந்துள்ளனர். இவர்கள் அனைவரும் விசாரணைக்கு பின் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

- மன்னார் நிருபர்

# மன்னார் மறைமாவட்ட மறைந்த ஓய்வு நிலை ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகையின் கனவு நிறைவேறியது

## மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார்



மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் நீண்ட நாள் கனவு இன்று நிறைவேறி உள்ளது என மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் தெரிவித்தார்.

முசலி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள முள்ளிக்குளம் கிராமத்தில் மிசறியோ நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட 20 வீடுகள் வியாழக்கிழமை (28) மதியம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் மிசறியோ நிறுவனத்தின் இலங்கைக்கான திட்ட பணிப்பாளர் கெசுமா சாடட், இலங்கைக்கான பரிந்துரை இணைப்பாளர், இலங்கை செ டெக் நிறுவனத்தின் தேசிய இயக்குனர் அருட்தந்தை மகேந்திரா குணதிலக்க, வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை அன்ரன் அடிகளார், மன்னார் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை விக்டர் சோசை அடிகளார் மற்றும் முசலி பிரதேசச் செயலாளர் ரஜீவ் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த வீடுகளை வைபவ ரீதியாக கையளித்தனர்.

இதன் போது கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முள்ளிக்குளம் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 20 வீடுகளை திறந்து வைத்துள்ளோம். விசேட விதமாக மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் அயராத முயற்சியின் காரணமாகவே குறித்த வீடுகள் அமைக்கப்பட்டுள்ளது.

மறைந்த மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் பல வருடங்களுக்கு முன் கண்ட கனவு இன்று நிறைவேறி இருக்கிறது.

முள்ளிக்குளம் கிராமத்தில் இருந்து இடம் பெயர்ந்து சென்ற அனைத்து மக்களும் மீண்டும் தமது இடங்களுக்கு வர வேண்டும். அந்த மக்களை எப்படியாவது தமது சொந்த இடங்களுக்கு கொண்டு வர வேண்டும் என்று ஆயர் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

அதன் விளைவாக மிசறியோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் முள்ளிக்குளம் கிராமத்தில் 20 வீடுகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த வீடுகளை கட்டி முடிக்க உதவி செய்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

- மன்னார் நிருபர்







# காலி முகத்திடலில் போராட்டம் 20 வது நாளாக தொடர்கின்றது – மன்னாரை சேர்ந்த இளைஞர்களும் ஆதரவு





கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பு ஆரம்பமான அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்ட பேரணி காலி முகத்திடலை அடைந்துள்ள நிலையில் குறித்த பேரணியில் மன்னாரை சேர்ந்த பல இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளனர்.

காலிமுகத்திடலில் போராட்டம் இன்று 20 வது நாளாகவும் முன்னெடுக்கப்படுகிறது.

இதற்கு ஆதரவாக அலரிமாளிகைக்கு முன்பாக முன்னெடுக்கப்படும் போராட்டமும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

# துருவப்பட்ட போராட்டமும் தமிழகத்தை நோக்கிய படையெடுப்பும்

**- சிவா பரமேஸ்வரன் & நடராசா லோகதயாளன்**




**ரா**ஜபக்சக்களை வீட்டிற்கு அனுப்பும் போராட்டம் மேலும் மேலும் தீவிரமடைந்து வருகிறது. வயது சமூக, பொருளாதார, கல்வி மற்றும் வசிப்பிடம், ஜாதி, மதம் என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு "ஆட்சி மாற்றத்தை" கோரி காலிமுகத் திடலில் மக்களின் போராட்டம் தொடருகிறது. இந்தப் போராட்டம் இப்போது மலையகப் பகுதிகளுக்கும் பரவி அங்கும் சூடுபிடித்து வருகிறது.

இதனிடையே எதிர்க்கட்சிகள் கண்டி முதல் கொழும்பு வரையிலான யாத்திரைக்கும் மக்கள் ஆதரவு பெருகுவதைக் காணக்கூடியதாக உள்ளது. அதேநேரம் ஆட்சியிலிருந்து விலகும் எண்ணம் ஏதும் தங்களுக்கு இல்லை என்று ராஜபக்ச சகோதரர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். "என்னை ஜனாதிபதி பதவி விலகும்படி கோரவில்லை மேலும் நாங்கள் எம்மை பெரும்பான்மையாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் எம்மை பதவி விலகும்படி கோரவில்லை, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லையென்றால் பதவி விலகுவதற்குத் தயார்" என்று மஹிந்த ராஜபக்ச திருவாய் மலந்துர்ள்ளார்.

ஆனால் இந்தப் போராட்டங்களில் முக்கியமானதொரு ஒரு விஷயத்தையும் அவதானிக்க முடிந்தது. தலைநகர் கொழும்பு, சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பல மாவட்டங்கள், மலையகப்பகுதி ஆகிய இடங்களில் போராட்டங்கள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், தமிழர் தாயகப் பகுதியில், இந்த போராட்டங்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்கிற மனநிலை காணப்படுகிறது. எரிவாயு, மண்ணெண்ணெய், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடு ஆகியவை நாடு முழுவதும் நிலவுகின்ற நிலையில், வடக்கு கிழக்கு மக்களின் நிலைப்பாடு சற்று துணுக்குறச் செய்கிறது.

இந்நிலையில், நாட்டில் நிலவும் நெருக்கடி காரணமாக தமிழர் தாயகத்தில் இருந்து தமிழ் மக்கள் தமிழகத்திற்குப் படையெடுக்கும் அவலம் அதிகரிக்கின்றது.

1983ஆம் ஆண்டில் இருந்து தமிழகத்திற்கு சென்ற 2 லட்சம் தமிழ் மக்கள் இன்றும் தமிழ் நாட்டில் தமக்கான தேவைகள், வேலை வாய்ப்புக்கள் மற்றும். சுதந்திரமான நடமாட்டங்கள் இன்றி அதற்காகக் குரல் எழுப்பும் நிலைமையில் தற்போது மீண்டும் தமிழ் மக்கள் தமிழகத்திற்குச் செல்கின்றனர். ஆனால் இலங்கையில் இடம்பெற்ற இனப் பிரச்சனை காரணமாகத் தமிழ் நாட்டிற்கு தப்பிச் சென்ற 2 லட்சம் மக்களையும் தாயகம் திரும்புமாறு போர் முடிவுற்ற பின்னர் வந்த மகிந்த மற்றும் மைத்திரி ஆட்சியில் பல தடவை அழைப்பு விடுத்ததோடு சகல வசதி வாய்ப்பும் ஏற்படுத்தித் தருவதாகவும் வாக்குறுதி வழங்கப்பட்டது. இதன் பெயரில் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் மக்கள் நாடு திரும்பினர்.



இவ்வாறு 2016ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து தாயகம் திரும்பியவர்களிற்கு ஒரு வீட்டு வசதியேனும் வழங்கப்படாத நிலைமையில் இனியும் நெருக்கடியை எதிர்கொள்ள முடியாமலேயே இரண்டாவது தடவையும் தமிழகம் சென்றோம் என நீர்வேலியில் இருந்து கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி தமிழகம் சென்றவர்கள் கூறுகின்றனர்.

இறுதி யுத்த காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்து 2016ஆம் ஆண்டு நாடு திரும்பி வவுனியாவில் இருந்த போதும் அவர்களுக்கு வீடு வழங்கப்படவில்லை. கோப்பாய் வந்தபோதும் வீட்டு வசதி ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை. 2020ஆம் ஆண்டு வரையில் அவர்களிற்கென ஓர் நிரந்தரக் காணியும் இருந்திருக்கவில்லை. இதனால் காணியை ஏற்படுத்தி வீட்டுத்திட்டத்தை கோரியபோது அரசு வழங்கியது ஓர் கழிப்பறை வசதி மட்டும்தான் அதுவும் 2022ஆம் ஆண்டு இவர்கள் தமிழகத்திற்கு புலம்பெயரும் வரையில் கழுப்பறையின் கட்டுவேலையும் நிறைவுபெறவில்லை. இந்தக் காலத்தில் நாட்டில மீண்டும் உச்சபட்ச பொருளாதார நெருக்கடி இத்தனை நெருக்கடிகளிற்கும் முகம்கொடுப்பதனைவிட ஒருநாள் உயிரைப் பணயம் வைப்பது சுலபமாகக் கண்டு படகு பயணத்தின் மூலம் மீண்டும் தமிழ்நாட்டை அடைந்துள்ளனர்.

இதேநேரம் மன்னாரில் இருந்து பயணித்த 4 மாத கர்ப்பவதியின் கணவர் கருத்துரைக்கும் போது "நாட்டில் பல வைத்தியசாலைகளில் மருந்து இன்மையால் சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்படுகின்றன. சிறுவர் வைத்தியசாலை பகிரங்க உதவி கோருகின்றது. இந்த சூழலில் குழந்தைகளிற்கான பால்மா கடந்த ஆண்டு 400 ரூபா இந்த ஆண்டு ஆயிரம் ரூபாவாகிவிட்டது இன்னும் ஆறு மாதம் கழித்து என்ன விலையை எட்டுமோ என்ற ஏக்கத்துடன் அப்போது மருந்துகள் கிடைக்குமா என ஐயம் கொள்வதிலும் நியாயம் உண்டு ஏனெனில் இன்று அரச மருத்துவமனைகளில் மட்டுமல்ல தனியார் மருத்துவமனைகளில்கூட பல மருந்துகள் இல்லை. இதன் உச்ச வெளிப்பாடாக பனடோலே இல்லை என்பதே உண்மையாகும். மறுபுறத்தில் 1260 ரூபா விறபனை செய்த எரிவாயு சிலிண்டர் இனி 5,170 ரூபா என கட்டியம் கூறப்படுகின்றது. 65 ரூபா விற்பனை செய்த பாண் 160 ரூபாவாகிவிட்டது" என்று உதயனிடம் தெரிவித்தார்.

இவை இவ்வாறிருக்க சாதாரண கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாய கூலியாட்கள் மட்டுமல்ல அரச வருமானம் பெறுபவர்கள்கூட இலங்கையில் வாழமுடியாத நிலைமையே ஏற்பட்டுள்ளது என்பதனையும் இந்த தமிழ் நாட்டிற்கான படையெடுப்பு எடுத்தியம்பியுள்ளது என்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். அதற்கு உதாரணமாகவே மாதம் 60 ஆயிரம் ரூபா சம்பளம் பெறும் ஓர் பொலிஸ் உத்தியோகத்தர் அந்த வேலையினை விட்டு குடும்பத்துடன் தமிழ்நாட்டிறகு புலம்பெயர்ந்தமை நிரூபணம் செய்கின்றது.



இவை தொடர்பில் வலி. கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராயா நிரேசைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, "மீள்குடியேற்ற கொள்கை இன்மையால் வீட்டுத்திட்டம் பலருக்கு கிடைக்கவில்லை, விவசாய கிராமங்களில் இருந்தும் தற்போது மக்கள் இந்தியா செல்கின்றனர் என்றால் அரசின் திட்டமில்லாத விவசாயக் கொள்கையும் இந்த பாதிப்புக்கு காரணம். அதாவது விவசாயிகள் மற்றும் விவசாயக் கூலிகள் பெரும் பாதிப்பை சந்திக்கின்றனர். உரத்தை தடைசெய்தமையால் ஏற்பட்ட விளைவு. இதேபோன்று சீரான எரிபொருள் விநியோகம் இன்மையால் மீனவர்கள் தொழிலிற்குச் செல்ல முடியவில்லை. இதனால் 500 ரூபாவிற்கு வாங்கிய மீன் ஆயிரத்து 500 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. மறுபுறத்தில் பொருட்களின் விலை 100 வீதம் 150 வீதம் அதிகரித்துள்ளது. இவையே நெருக்கடியின் உச்சமாக மாறி நாட்டை விட்டு தப்பிச் செல்வதனை தவிர வேறு வழியில்லை என்ற மனோநிலையை உருவாக்குகின்றது" என்று மக்களின் நெருக்கடியை எடுத்துரைத்தார்.

தெற்கில் இருக்கும் கொதி நிலைமை வடக்கு கிழக்கில் இல்லை என்ற கருத்தும் கூறினாலும் தமிழ் மக்கள் வறுமை, விலையேற்றம், ஏன் மரணம் வரை கண்ட மக்கள் இதனை பாரிய விடயமாக கருதாமல் இயல் அளவை கொண்டு செயல்படுகின்றனர். கடலிலே ஒரு வாரம் கடற்படை நிற்காது என அறிவித்தால் வடக்கு கிழக்கு மக்களை தமிழ்நாட்டில் தேடும் நிலைமை ஏற்பட்டாலும் ஆச்சரியம் ஒன்றும் இல்லை என்று நாம் பேசிய பலர் ஒரே குரலில் கூறினர்.



இவை அனைத்திற்கும் போர், எமக்கு இடம்பெற்ற அநீதி, எதற்குமே நீதி இன்மை போன்றவையே இந்த சலிப்பிற்கு காரணம் என்றும் உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் பகிர்ந்துகொள்கின்றனர். இதேநேரம் இவ்வாறு தமிழ் மக்கள் மீண்டும் அகதிகளாகச் செல்வது தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான தர்மலிங்கம் சித்தார்த்தனை உதயன் சாரில் தொடர்பு கொண்டு கேட்டோம்.

"இன்று இலங்கையின் பொருளாதாரம் முழுமையாக பாதாளத்தை நோக்கிச் செல்வதனால் இலங்கையில் வாழ முடியுமா என்ற அச்சம அனைத்து தரப்பு மக்களிடமும் எழுந்துள்ளது. இதன் காரணமாக தம்மை அரவணைக்க உள்ள ஒரே இடமாக தமிழகத்தை கருதுகின்றனர். ஏனெனில் 1983ஆம் ஆண்டு முதல் பல கட்டங்களில் அவலம் ஏற்பட்டபோது எமது மக்களை தமிழகமே பாதுகாத்த அனுபவம் எமது மக்களிடம் உண்டு".

இதற்கும் அப்பால கடல் மூலம் பயணித்து விமானம் மூலம் அல்லது கடல் வழியாக தாயகம் திரும்பியவர்களிற்கு பாதைகள் தொடர்பிலும் பரிச்சயம் உள்ளவர்கள் முதல் கட்டமாகச் செல்கின்றனர். இலங்கையின் பொருளாதாரம் ஓர் சீரான நிலைமைக்கு வருவதற்கான அறிகுறிகளும் காணப்படவில்லை இதனால் மக்களிற்கும் மாற்றுவழி தெரியவில்லை என்று சித்தார்த்தன் கூறுகிறார்.

"தாயக வாழ்வைவிட்டு அகதி வாழ்விற்கு மக்கள் செல்லும் அவல நிலை இன்று நாட்டில் காணப்படுகிறது. நாட்டில் நிலை மேலும் நெருக்கடியானால் தமிழர்கள் மட்டுமின்றி தென்னிலங்கை மக்களும் தமிழ்நாட்டிற்கு படையெடுக்கும் அகதிகளாக செல்லும் அவலம் ஏற்படும்" என்றார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன்.

சித்தார்த்தனின் அதே கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சிவஞானம் சிறிதரன் பகிர்ந்து கொண்டார். "இலங்கையில் தமிழரகளிற்கு உயிர்வாழ உத்தரவாதம் இல்லை என்ற நம்பிக்கையீனம், பஞ்சம் போன பின்பு சிங்களம் மீண்டும் மகா வம்சக் கொள்கைக்குள் மூழ்கும் என்ற ஐயம், தமிழர்களிற்கு என்ற தனித்துவம் இல்லை போன்ற காரணங்களால் உயிரையாவது பாதுகாப்போம் என்ற எண்ணம், முன்பு போனது துப்பாக்கிகளிற்கும் குண்டுக்கும் அஞ்சி ஓடினார்கள் ஆனால் தற்போது ஒரு மாறுபட்ட சூழலிலும் தொப்புள்கொடி உறவுகளை நம்பி பயணிக்கின்றனர்" என்றார்.



தமிழ் மக்கள் அரசியல்வாதிகள் மீது நம்பிக்கையிழந்து வருவதையும் பலருடன் உரையடிய போது காண முடிந்தது. தமிழ் மக்களின் இருப்பில் இன்றுவரை நிரந்தர தீர்வை எட்ட எந்த தமிழ் தரப்பும் ஆக்கபூரவமாக செயல்படவில்லை எனவும் இனிமேலும் எந்தவொரு தரப்பும் அவ்வாறு செய்யப்டும் என்ற நம்பிக்கையீனமே நாட்டை விட்டு வெளியேறும் மன நிலைக்கு முக்கிய காரணம் என்கிற குரல் ஓங்கி ஒலிக்கிறது. இதையே கடந்தவாரம் தமிழ்நாடு செல்ல முற்பட்டு கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மீண்டும் சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட 39 வயதுப் பெண்மணி தெரிவித்தார்.

இலங்கையில் உள்ளவர்கள் இவ்வாறு கூறினாலும் இம்மாதம் முல்லைத்தீவில் இருந்து குடும்பமாக தமிழகம் சென்று மண்டபம் அகதி முகாமில் வசிக்கும் சுப்பிரமணியம் கோணேஸ்வரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, தமிழகம் வந்த நாள் முதல் எந்தப் பொருளும் எந்த விலை என்பதே எமக்குத் தெரியாது. ஏனெனில் மூன்று நேரமும் தயார் செய்யப்பட்ட உணவே வழங்கப்படுகின்றது. தேநீராக இருப்பினும் அந்த நேரத்திற்கு கிடைக்கும் மருந்து வகைகளும் கிடைக்கின்றன. இனி மாணவர்களின் கலவி தொடர்பிலேயே சிந்திக்க வேண்டும் என்கின்றார்.

எனினும் தொப்புள்கொடி உறவுகள், தாய்த் தமிழகம் என்றெல்லாம் கூறினாலும் இந்தியாவிற்குச் சென்றவர்களால் இன்றுவரை எந்த நாட்டிற்கும் செல்லும் அனுமதியோ, உயர் கல்வி வாய்ப்புக்களோ, மருத்துவமோ அல்லது அரச தொழில் வாய்ப்போ இன்றி இரண்டாந்தர பிரஜைகளாகவே நடாத்தப்படுகின்றனர் என்ற யதார்த்த நிலையும் உள்ளது. இதேநேரம் ஈழத் தமிழர்கள் என்பதற்கு அப்பால் அகதிகள் என்னும் அடைமொழியில் ஓர் காட்சிப் பொருளாகவே அவர்கள் பார்க்கப்படுகின்றனர் என்பது முகாம் வாசிகளுடன் உரையாடிய போது தெரிய வந்தது.

தமிழ் மக்களின் பார்வையில் தென்னிலங்கை போராட்டம் சிங்கள மக்களின் பிரச்சனைக்காக அவர்கள் போராடுகின்றனர் என்கிற எண்ணப்பாடே உள்ளது. இலங்கையில் இன ரீதியான இன்னும் மக்கள் பிளவுபட்டே நிற்கின்றனர் என்பதே யதார்த்தம்.


Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்
Dr. Pushpa.V & Associates
Dentist
New Patients Welcome
Open 7 Days a week
Sunday by Appointment only
சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்
Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187
Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900


HELPING HANDS
SENIOR CARE
VILLA KARUNA
விலா கருணா
முதியோர் இல்லம்
சந்தியாராகம்
Santhiyaragam
20 ஆவது ஆண்டு
சந்தியாராகம் – 2022
ஏப்பிரல் 30, 2022 திகதிக்கு
முன்னர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
இம்முறை கனடாவிலும் You Tube ஊடாக உலகமெங்கும்
உள்ள அத்தனை தமிழ் மக்களும் பார்த்து ரசிக்கவுள்ள
அரிய வாய்ப்புடன் சாதனை படைக்க வருகிறது.
Golden
SUPER SINGER
விண்ணப்பக் கட்டணம்: $35
விண்ணப்ப திகதி முடிவு: 30-04-2022
Indrani 416-200-6971
Inthu/Para 416-282-4535
Kiruba 416-564-4366
பங்கு பெறுவோர் எண்ணிக்கை
மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால்
உடனடியாக உங்கள் பெயர்களை
பதிவு செய்யுங்கள்.

NDP NPD
ANDREA
HORWATH

கடந்த சில ஆண்டுகளாக ஒன்டாரியோவில் நாம் பல சிரமங்களை அனுபவித்துள்ளோம்.

## ஆண்ட்ரியாவிடமும் அவரின் NDP கட்சியிடமும் உள்ள திட்டங்கள்:

- மருத்துவ சேவையை சரிசெய்வது
- முதியோர் பராமரிப்பினை சரிசெய்வது
- அதிகரிக்கும் நாளாந்த வாழ்க்கைச் செலவுகளை கட்டுப்படுத்துவது
- செலவுகளை சமாளிக்க கூடிய தொழில் வாய்ப்புகளை உறுதி செய்வது

## சீரழிந்ததை சரிசெய்து, உங்களின் முன்னேற்றத்துக்காக போராடும் நேரம் இது.



**Doly Begum**
Scarborough Southwest



**Veronica Javier**
Scarborough -Guildwood



**Justin Kong**
Scarborough North



**Felicia Samuel**
Scarborough -Rouge Park



**Neethan Shan**
Scarborough Centre



**STRONG. READY. WORKING FOR YOU.**

Authorized by the CFO for the Ontario NDP


GRATEFUL
AWARDS
AND ACHIEVEMENTS!
DIAMOND AWARD 2021
TOP TEAM AWARD 2021
TOP PRODUCER AWARD 2021
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
SHAN THAYAPARAN TEAM
WWW.SHAN123.COM
THANU THAYAPARAN
SALES REPRESENTATIVE
VIKI VELAUTHAN
SALES REPRESENTATIVE
JEY NADARASAH
SALES REPRESENTATIVE
ANITA QUAYE
SALES REPRESENTATIVE
RE/MAX இல் இலிருந்து இந்த மதிப்புமிக்க Diamond Award 2021, Top Team Award 2021, மற்றும் Top Producer Award 2021 அடைய எனக்கு உதவிய எனது Team, loyal clients, Mortgage Brokers, lawyers, family, friends மற்றும் well wishers அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகள்.
வீடு வாங்க / விற்க நினைக்கிறீர்களா?
நாங்கள் Ontario வில் உள்ள அனைத்து வீடுகளையும் விற்கவோ / வாங்கவோ உரிமை பெற்றுள்ளோம்.
எங்களை தொடர்பு கொண்டு எமது சேவைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.
Free Market analysis
Free Staging
Free Home inspection report
Free Home warranty
Free Marketing
Mortgage loans
Shan Thayaparan
Broker
416-567-7675
info@shan123.com
www.teamshan123.com
Real Estate Simplified with Team Shan
TeamShan123
teamshan
shan-thayaparan

நீதி மற்றும் அதற்கான பரிகாரம் ஆகியவற்றைப் பெற போராடும் தமிழ் சமூகத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். உங்கள் போராட்டத்தில் நானும் ஒரு பங்காளியாக இருப்பதில் பெருமை கொள்கிறேன். ஸ்காபுறோவில் தமிழ் சனசமூக நிலையத்தைக் கட்டியெழுப்பவும், தமிழ் இனப்படுகொலைக் கல்விச் சட்டத்தை ஆதரிப்பதற்காகவும் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதில் நானும் மகிழ்ச்சியடைகிறேன்.

அத்துடன் மாகாண அரசாங்கம் சார்ந்த எந்த உதவிக்கும் எனது அலுவலகமும் உங்களுக்காக திறந்தே உள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்..

இங்ஙனம்,

அரிஸ் பாபிகியன், ஒன்றாரியோ மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர்

ஸ்கார்பரோ-அஜின்கோர்ட்

-----------------

My best wishes to the Tamil Community in its struggle to attain justice and redress. I am honoured to be part of your struggle. I am also thrilled to work with you to build the Tamil Community Centre and support the Tamil Genocide Education Act.

My office is also available for any help.

Aris Babikian, MPP

Scarborough-Agincourt



ONTARIO

**Aris Babikian**

MPP / DÉPUTÉ

SCARBOROUGH-AGINCOURT

**Constituency Office:**

207-4002 Sheppard Ave. E. Scarborough, ON M1S 1S6

**Tel:** 416-297-6568 **Email:** aris.babikianco@pc.ola.org



SRI VARASITHTHI VINAYAGAR HINDU TEMPLE OF TORONTO
LET LOVE BIND US ALL TOGETHER
ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்
இணைந்து வழங்கும்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி
16ம் ஆண்டு
சிவத்தமிழ் விழா
மேமாதம் 7 சனிக்கிழமை
மாலை 3 மணிக்கு
அனுமதி இலவசம்
கனடா கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
733 Birchmount Road, Scarborough
பாடல்
காவடி
வேதபாராயணம்
பட்டிமன்றம்
கவிதை
நாடகம்
தேவாரம்
வில்லுப்பாட்டு
நடனம்
கரகம்
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி தமிழ், சமய, பண்ணிசை, வேதபாராயண
ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் முத்தமிழ் கலை விழா
ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி 416.291.7900, 416.291.8500 www.varasiththi.com
மிகவும் சிறப்பாக நடைபெறவிருக்கும் இச் சிவத்தமிழ் விழாவில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.
குறைந்த செலவில் சிறந்த காப்புறுதி
Thana Manickavasagar
416.728.5772
New Dentist in Your Neighbourhood
SANDHURST FAMILY DENTAL CLINIC
Dr. Pavithra Nantheeswarar DDS
416-299-1020
Fashion World Inc
பட்டு உலகின் தனித்துவம்
905 471 2223
7393 Markham Road, Unit 82,83,84, Markham, ON
அம்மா
Amma Pawn Broker
தங்கநகை அடைவு மாடம்
416.757.0034
416.994.3861
Kennedy & Eglington, Scarborough
ஸ்ரீரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & எரிலன்
647.702.2159
TECHSOURCE
Computer & Electronics Liquidator
647-352-2229
416.757.9111
the co-operators
Vel Insurance Services Inc.
சரியான காப்புறுதியை குறைந்த
கட்டணத்தில் பெறுவதன் மூலம்
மனதுக்கு நிம்மதியை பெறுங்கள்
416.396.0707
Senthooran Punithavel
ERAA SUPER MARKET
5930 Finch Ave. E. Scarborough, ON Tel: 416.292.2622
2607 Eglinton Ave. E. Scarborough, ON Tel: 416.269.2622
MULTIMILLION DOLLAR PRODUCER
Abi Amalan
Amal Ganeshamoorthy
416.732.1810
416.829.9993
Great Place • Great Service • Great Food • Great Memories
SCARBOROUGH CONVENTION CENTRE
20 Torham Place, Scarborough, ON M1X 0B3
416-335-6060
கனகாம்பிகை
அடகுமாடம் பழைய வங்கி
தங்க நகை கடன்
2613 Eglinton Ave East, Scarborough, ON M1K 2S2
416.269.7198
Niru நிரு
416 750 1976
416 750 8779
பூஜா ஸ்டோர்ஸ்
POOJA STORES
அனைத்து பூஜைப் பொருட்களையும் மிக
மலிவாகவும், சுத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்
1209 Ellesmere Rd. Scarborough, Ontario
416-752-3112
SHY ENTERPRISE
Retailer of Paper Products
416.602.9714 : 905.205.0011
Disposable Products
Cleaning Supplies
Foam Takeout Box,
Garbage Bags, Paper Towels
Toilet Papers, Napkins
All kind of Plastic Bags

# பதவிகளை தக்கவைக்கவா இடைக்கால அரசாங்கம்?

- திருமலை நவம்

"பிரதமர் மஹிந்த ராஜபக்ச பதவி விலகவேண்டும். சர்வ கட்சிகள் கொண்ட இடைக்கால அரசொன்று அமைப்பதற்கு அவர் வழிவிடவேண்டும். இல்லையேல் போராட்டங்கள் ஓயப்போவதுமில்லை நாட்டின் நெருக்கடிகளுக்கு தீர்வு கிடைக்கப்போவதுமில்லை" என்ற கடும் கருத்துக்களையும் விமர்சனங்களையும் முன்வைத்து அரசாங்கத்துடன் இருந்த முக்கிய அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை விலத்திக்கொண்டிருப்பது நாட்டில் பாரிய அரசியல் நெருக்கடியொன்றை உருவாக்கியிருக்கிறது.

ஜனாதிபதி பதவி விலகவேண்டும் அரசாங்கம் கலையவேண்டும் என்ற கடுமையான கோரிக்கைகளையும் கோஷங்களையும் முன்வைத்து நாடு தழுவிய போராட்டம் தொடர்ந்து இடம்பெற்றுவரும் நிலையில் இலங்கை அரசியலில் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் நடக்கக்கூடும் என்ற பதட்ட நிலையே காணப்படுகிறது. இலங்கை அரசியல் வரலாற்றில் இதுவொரு வித்தியாசமான களமாக மாறிக்கொண்டிருக்கிறது.

பொதுஜனபெரமுன அரசாங்கத்துக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றில் கொண்டுவர எதிர்த்தரப்பினர் தீவிரம் காட்டிவரும் நிலையில் 21 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை கொண்டுவர அரச தரப்பினரின் எத்தனிப்புக்கள் ஒருபுறமாகவும் இடைக்கால அரசாங்கம் ஒன்றை கொண்டுவந்து இலங்கையின் இன்றைய கொந்தளிப்புக்கு அமைதிகாணும் முயற்சிகள் மறுபுறமாகவும் இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னொருபுறம் ஜனாதிபதிக்கெதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை நிறைவேற்றவும் தீவிரம் காட்டப்படுகிறது.

ஜனாதிபதி பதவி விலகவேண்டும் அரசாங்கம் கலைக்கப்படவேண்டும் குறிப்பாக ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் உடனடியாக பதவிவிலகவேண்டும் நாட்டின் பொருளாதாரத்தை மறு சீரமைக்க அரசியல் உறுதிபாட்டை கொண்டுவரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து மக்கள் போராட்டம் கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி முதல் தொடர்ந்து இடம் பெற்றுவரும் நிலையில் நாளுக்க நாள போராட்டமானது உக்கிரம் அடைந்துவரும் நிலையில் தெற்கு அரசியலில் எந்நேரமும் திருப்புமுனை ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பு நீண்டுகொண்டு செல்கிறது. அதே நேரம் 21 ஆவது அரசியல் சீர்திருத்தம், இடைக்கால அரசாங்கம் அமைத்தல் நம்பிக்கையில்லாப்பிரேரணை என்ற முன்னெடுப்புக்களும் முயற்சிகளும் நாட்டின் அரசியலை அலைமோத வைத்துக்கொண்டிருக்கிறது.

இத்தகைய கொதி நிலைகொண்டதாக நாடு இருக்கும்போது தமிழ் மக்களை பிரிதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் அதன் தலைவர்களும் ஆமையைப்போல் தங்கள் நடவடிக்கைகளை மடக்கி மௌனம் காத்துவருகிற நிலையும் காணப்படுகிறது. குறிப்பிட்டு கூறப்போனால் குடா நாட்டிலும், வன்னியிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கிழக்கில் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தலைமையில் பிள்ளையான் மற்றும் வியாழேந்திரனுக்கெதிரான சின்னளவு போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன அம்பாறையிலும் திருகோணமலையிலும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் இடம் பெற்றாலும் வட கிழக்கு தமிழ்ப்பேசும் மக்கள் புதினம் பார்க்கும் மூன்றாந்தரப்பினராகவே நடந்து கொள்கிறார்கள் என்ற விமர்சனம் முன்வைக்கப்படுகிறது.

தமிழ்த் தலைமைகள் சிலர் இப்போராட்டம் தொடர்பில் தமது ஆதங்கமான கருத்துக்களை இடைக்கிடை தெரிவித்தும் வருகிறார்கள் "நாட்டின் ஆட்சியை ஒருவருடத்துக்கு தமிழ்த்தரப்புக்கு வழங்குகங்கள் இந்த நாட்டினை நிமிர்த்தி காட்டுகிறோம்" என்று குளுரைத்துள்ளார் பாராளுமன்ற உறுப்பின் செல்வம் அடைக்கலநாதன். உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில் "தென்னிலங்கையில் போராடுகிறவர்கள் எவரும் எமது மக்களின் உயிர்களுக்காக குரல் கொடுக்கவில்லை. அவர்கள் போர் வெற்றியை கொண்டாடினார்கள். பாற்சோறு வழங்கி நடனமாடினார்கள் அந்த துன்பங்களை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. அதே நேரம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். காலி முகத்திடலுக்கு புறப்படும் இளைஞர்கள் அங்கு செல்வதற்கு முன்னதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்துக்கு ஒன்று திரளுங்கள்" என்று வினயமாக சிறிதரன் கோரிக்கை விடுத்துள்ளார். இன்னும் சில தமிழ்த்தரப்பினர் "எந்த சிங்கள மக்கள் கோத்தபாயவை சிம்மாசனம் ஏற்றினார்களோ அந்த மக்களோ இன்று கோத்தா வீட்டுக்கப்போ! என்று போராட்டம் நடத்துகிறார்கள்" என்றும் தமது கோபத்தை வெளிக்காட்டுகிறார்கள்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் போராட்டம் தொடர்பில் இவ்வாறான கருத்துக்களை தமிழ் மக்கள் வேதனையுடனும் இழப்புக்களுடனும் வெளியிட்டுவரும் நிலையில் பின்வரும் நடவடிக்கைகளின்போது தமிழ்த்தரப்பினர் என்ன முடிவை எடுப்பார்கள் என்பது சகலராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் விடயமாகும்.

19 ஆவது அரசியல் திருத்தம் நல்லாட்சி அரசாங்கத்தில் கொண்டுவரப்பட்டபோது தமிழ்த்தரப்பினர் ஏகோபித்த அளவில் அதற்கு ஆதரவு தெரிவித்திருந்தார்கள். அதற்கு காரணம் நிறைவேற்று அதிகாரமுறை ஒழிக்கப்படவேண்டும் என்பதில் கூட்டமைப்பும் ஏனைய தமிழ்த் தரப்பினரும் திடகாத்திரமான முடிவு கொண்டவர்களாக இருந்தார்கள். நல்லாட்சி அரசாங்கத்தின் நிழல் பிம்பமாக கூட்டமைப்பு அன்று இருந்த காரணத்தினால் அதற்கு ஆதரவு வழங்கவேண்டிய தேவையும் இருந்தது. கோத்தபாய அரசாங்கத்தில் 19 ஆவது திருத்தத்துக்கு சாவுமணி அடித்து 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டபோது தமிழ்த்தரப்பினர் அதை கடுமையாக எதிர்த்தார்கள்.

இன்றைய நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையை சமாளிக்கும் தந்திரோபாயத்துடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ச 21 ஆவது அரசியல் திருத்தத்தை கொண்டுவர கடந்த திங்கட்கிழமை (25.4.2022) அமைச்சரவைக்கு அத்திருத்தத்தை சமர்ப்பித்துள்ளார். அத்திருத்தம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது. இத்திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் நீக்கப்படுகிறது. இன்னொருவகையில் கூறுவதானால் 19 ஆவது திருத்தம் மீண்டும் 21 ஆவது திருத்தம் என்ற வடிவில் மீண்டும் நடை முறைக்குவரவுள்ளது.

21 ஆவது திருத்தம் தொடர்பில் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் ஏலவே ஒரு யோசனையை சபாநாயகரிடம் கையளித்துள்ளார்கள். அதே நேரம் தனித்து இயங்கும் குழுவினர் என்று தம்மை அடையாளப்படுத்திக்கொண்டிருக்கும் சுயாதீனக்குழுவினர் 40 பேர் இது தொடர்பான யோசனையை முன் வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதேபோன்றே ஐக்கிய மக்கள் சக்தி யினர் சபாநாயகரிடம் இத்திருத்தம் தொடர்பான ஒரு யோசனையை கையளித்துள்ளதாகவும் அதன் அடிப்படையிலையே பிரதமர் மஹிந்த தன் யோசனையை முன் மொழிந்திருப்பதாகம் இதற்கு ஆளுந்தரப்பிலுள்ள பெரும்பான்மையினர் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணியும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் சுயாதீன அணியினரால் சமர்ப்பிக்கப்பட்ட 21 ஆவது திருத்தத்தை மையப்படுத்தி அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

எந்த திருத்தத்தை அவசரம் அவசரமாக கொண்டுவந்து தனது நிறைவேற்று அதிகாரத்தை மீள் நிரப்பு செய்தாரோ அவரே இப்பொழுது "20 ஆவது திருத்தத்தை இல்லாது ஒழிப்பதற்கு பாராளுமன்றத்தால் முன்னெடுக்கப்படும் அனைத்து தீர்மானங்களுக்கும் நான் ஒத்துழைப்பு வழங்க தயா-ராக இருக்கிறேன்" என ஜனாதிபதி கூறியிருப்பது போராட்டத்தின் வலிமையை காட்டுகிறதா அல்லது ஜனாதிபதி தனது பிடிவாதத்திலிருந்து இறங்கிவிட்டாரா? என்பது கவனமாக சிந்திக்கவேண்டிய விடயம்.

இத்திருத்தத்தினூடாக நிறைவேற்று அதிகாரமுறை குறைக்கப்பட்டு சட்டவாக்க சபையை பொறுப்பாக்கும் வகையில் 19 ஆவது திருத்தத்தில் காணப்பட்ட சிறந்த விடயங்கள் உள்ளடக்கிய புதிய அரசியல் சீர்திருத்தத்தை காலதாமதமின்றி கொண்டுவர தான் நடவடிக்கை எடுக்கவிருப்பதோடு அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்கு உடன்தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும் என தனது உடன்பாட்டை பௌத்த பீடங்களான மல்வத்து மகாபீடம் அஸ்கிரிய மகாபீடம் அமரபுர மகாபீடம் ராமாஞ்சய மகாபீடம் ஆகியவற்றுக்கு அண்மையில் அறிவித்துள்ளார் ஜனாதிபதி.

"இடைக்கால அரசாங்கமொன்றை அமைக்க தான் தயாராகவுள்ளதுடன் 21 ஆவது திருத்தத்தை கொண்டுவர முயற்சிக்கிறேன" என்ற முடிவை ஜனாதிபதி பௌத்த பீடங்களுக்கு பகிரங்கமாக அறிவித்திருப்பது தற்போதைய அரசியல் நெருக்கடியிலிருந்தும், சவால்களிலுமிருந்தும் மீள்வதற்கான நாடகமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகம் மக்கள் மத்தியிலும் போராட்டக்காரர்கள் மத்தியிலும் ஏற்பட்டிருப்பது ஒரு இயல்பான விடயமே!

பிரதமரால் கொண்டுவரப்படவுள்ள 21 ஆவது அரசியல் சீர்திருத்தத்துக்கு தமிழ்த்தரப்பினர் ஆதரவை நல்கவேண்டுமா? நல்குவார்களா? அன்றி நடப்பது நடக்கட்டும் என்று அமைதி பேணுவார்களா? என்பது கேள்விக்குரிய விடயம். 20 ஆவது திருத்தத்தை இல்லாது ஆக்கி 21 ஆவது திருத்தத்தை கொண்டுவருவதன்மூலம் தமிழ் மக்கள் அல்லது சிறுபான்மை சமூகம் நேரடியாக ஏதாவது நன்மையை அடையமுடியுமா? என்ற வினா இங்கு முக்கியம் கொண்டது.

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட இந்த நிறைவேற்று முறையை இல்லாது ஆக்குவோம் என்று ஆட்சி பீடம் ஏறிய அனைவருமே, நிறைவேற்று அதிகாரத்தை தமிழ் மக்களின் போராட்டத்துக்கு எதிராகவே பாவித்தார்கள். அரசியல் தீர்வுக்காகவோ தமிழ் மக்களின் நீண்ட காலப்பிரச்சனையை தீர்த்து வைப்பதற்காகவோ அது பயன்படுத்தப்படவில்லை என்பதேயுண்மை. நெருக்கடிகள் நிறைந்துபோன இக்காலத்திலும் 21 சீர்திருத்தத்தை தங்கள் மேலாதிக்கத்துக்கு சாதகமாக்கப்பார்க்கிறார்கள் ஆட்சியாளர்கள் என்ற சந்தேகமே தமிழ் மக்கள் மத்தியில் தலை தூக்கி நிக்கிறது. இருந்தபோதிலும் அண்மையில் (24.4.2022) யாழ்ப்பாணத்தில் ஒன்றுகூடிய தமிழ் த்தேசியக்கட்சிகள் மற்றும் வட கிழக்கு சிவில் அமைப்புக்கள் 19 ஆவது திருத்தத்தை இல்லாது ஆக்கி 21 ஆவது திருத்தம் கொண்டுவருவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கவேண்டியது அவசியம் என்ற கருத்தை முன்மொழிந்துள்ளனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை கொண்டுவருவதற்கான அதிவேக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இப்பிரேரணைகள் கொண்டுவரப்படுமாக இருந்தால் தமிழ்த்தரப்பினர் என்ன தீர்மானத்துக்கு வருவார்கள் வரவேண்டும் என்ற விடயம் கால முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம். கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக பாராளுமன்றில் நம்பிக்கையில்லாப்பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சிகள் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும். இப்பிரேரணையை தயாரிப்பதில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆர்வம் காட்டிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால அரசொன்றை அமைக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் செயற்பட்டுவரும் எதிர்த்தரப்பினர் மற்றும் சுயாதீனமாக இயங்கும் குழு உறுப்பினர்களின் கோரிக்கையை ஜனாதிபதி உதாசீனம் செய்வாராக இருந்தால் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணை மற்றும் அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை மீது அவதானம் செலுத்தவேண்டிவரும் என்பதை ஆளும் கட்சி சுயாதீன செயற்பாட்டாளர்கள் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க எச்சரித்துள்ளார். ஆனால் ஆர்ப்பாட்டக்காரர்களோ ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணை ஒன்றை கொண்டுவர முயற்சிப்பதாகவும் அதை தன்னிடம் ஒப்படைத்திருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பத்திரிகை பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார். இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதிக் கெதிரான குற்றவியல் பிரேரணையை தற்போது கொண்டுவருவது நிறைவேற்றுவதும் நடைமுறை சிக்கல்களை உண்டாக்கும் என்பதால் அதில் உள்ள முக்கிய விடயங்களை உள்வாங்கி ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணையை தயாரிக்க முடியுமென்ற ஆலோசனையை தான் கூறியிருப்பதாக அவர்தெரிவித்துள்ளார்.

சுமந்திரன் கருத்துப்படி ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணையொன்று வெற்றி அளிக்கவேண்டுமாயின் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய எந்த அடிப்படையில் குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது என்பது குறித்து உச்ச நீதிமன்றம் விசாரணை நடத்தவேண்டும். குற்றச்சாட்டுக்கள் உண்மையென உச்ச நீத மன்றம் கண்டறிந்தால் அதன் அறிக்கை பாராளுமன்றில் விவாதிக்கப்பட்டு அதன்பின் பதவி நீக்கம் தொடர்பான வாக்கெடுப்பு நடத்தப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவேண்டும் என்ற நடைமுறை இருப்பதால் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணை கொண்டுவருவது சாத்தியமற்றது என்பதை சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

சுமந்திரன் கூறியதுபோல் குற்றப்பிரேரணைக்கு பதிலாக ஜனாதிபதிக்கெதிரான நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவரப்பட்டால் அது ஆகுக்குறைந்தது 113 வாக்குகளால் பாராளுமன்றில் நிறைவேற்றப்படவேண்டும். இப்போதைய நிலையில் நிறைவேற்ற முடியுமென்று கூறப்பட்டாலும் தடம் புரண்டு போகிற சம்பவமும் ஏற்படலாம். தமிழ்த்தரப்பினரும் சிறுபான்மையினரான முஸ்லீம் கட்சிகள் மற்றும் மலையக கட்சிகள் ஆதரவு நல்கின் நம்பிக்கையில்லாப்பிரேரணை வெற்றி பெற வாய்ப்பிருக்கலாம். ஆனால் அது சாத்தியமானதா என பரீட்சித்து பார்ப்பது விஷப்பரீட்சையாகவும் மாறலாமென் எதிர்த்தரப்பினர் பின்வாங்கும் நிலமையும் காணப்படலாம்.

(தொடர்ச்சி _24_ பக்கம்)

# பாஜக ஆட்சியில் இதுவரை பெட்ரோல் மீதான வரி 200% அதிகரிப்பு: பேரவையில் பிடிஆர் சொன்ன ‘கணக்கு’



மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்த ஆட்சிக்கு வந்ததிலிருந்து 8 வருட காலத்தில், தற்போதுவரை பெட்ரோல் மீதான வரி உயர்வு 200 சதவீதத்துக்கும் மேலும், டீசல் விலை 7 மடங்கும் உயர்ந்துள்ளதாக தமிழக நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார்.பெட்ரோல், டீசல் விலை உயர்வு குறித்த பிரதமரின் பேச்சு தொடர்பாக சட்டப்பேரவையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்தார்.

பின்னர் பேசிய நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், மத்திய அரசையும் மாநில அரசையும் ஒப்பிட்டு கணக்கை மட்டும் பார்ப்போம். 2014ல், மத்திய அரசில் இன்றைக்கு இருக்கும் பிரதமர் வரும்போது மொத்த வரி, தமிழக முதல்வர் கூறியபடி, பெட்ரோலில் 9 ரூபாய் நாற்பத்து சொச்சம் பைசா. அதில் பெரும்பான்மையானது மாநிலங்களுக்கு பகிர்ந்து கொடுக்கக் கூடிய excise ஆக இருந்தது. 5 ரூபாயை குறைப்பதற்கு முன்னர், 32 ரூபாய் அப்போது ஏழே வருடத்தில் இப்போது 8 வருடங்கள் ஆகப் போகிறது. அவர்கள் 3 மடங்குக்குமேல் உயர்த்திவிட்டு, அதற்குப் பிறகு 5 சதவீதம் குறைத்திருக்கிறார்கள். அப்போதும் மொத்த உயர்வு, பாஜக ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்று வரை 200 சதவிகிதத்திற்குமேல் உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதேபோல, மத்தியில் பாஜக ஆட்சிக்கு வரும்போது டீசலில் 3 ரூபாய் 47 பைசா, இன்றைக்கு 10 ரூபாய் குறைத்த பிறகுகூட 22 ரூபாய்க்கு மேல் உயர்ந்திருக்கிறது. அப்படியென்றால், 7 மடங்கு அவர்கள் ஆட்சிக்கு வந்தபோதும், இப்போதும் உயர்த்தியது 7 மடங்கு. இதனால், மத்திய அரசாங்கத்தினுடைய மொத்த வருமானம் direct tax-™ வராமல், சதவீதம் குறைந்து indirect regressive tax சாமானியரை பாதிக்கக்கூடிய வகையில்தான் வருகிறது. இதை பலமுறை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். மீண்டும் திருப்பிச் சொல்கிறேன்.

பாஜக ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்று வரை பெட்ரோல் வரியை 1 ரூபாயாக இருந்ததை, 3 ரூபாயாக உயர்த்தி டீசல் வரியை ஒரு ரூபாயாக இருந்ததை, 6 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள்.ஆனால், தமிழகத்தில் என்ன நடந்திருக்கிறது? முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சி 2011ல் முடியும்போது பெட்ரோலில் வரி, 14 ரூபாய் 47 பைசா. தற்போது திமுக 2021ல் ஆட்சிக்கு வரும்போது 26 ரூபாய் 20 பைசா. தமிழக முதல்வர் சொல்லி 3 ரூபாய் குறைத்த பிறகு, மத்திய அரசு 5 ரூபாய் குறைக்கும்போது, அதில் தமிழக அரசு 13 சதவீதம் கூடுதலாக எடுப்பதன் காரணமாக இன்னும் 65 பைசா குறைத்த பிறகு, இன்றைக்கு நம்முடைய மாநிலத்தினுடைய வருமானம் 22 ரூபாய் 54 பைசா. அப்படியென்றால் சுமார் 50 சதவீதம்தான் நம்முடைய வரி இந்த 7 வருடத்தில் அதிகரித்திருக்கிறது.

அவர்களுடையது 300 சதவிகிதம் அதிகரித்து இருக்கிறது. எது நியாயம். இதேபோல் டீசலில் கருணாநிதி ஆட்சி முடியும்போது, 7 ரூபாய் 60 பைசா, தற்போது திமுக ஆட்சிக்கு வரும்போது 19 ரூபாய் 75 பைசா. மத்திய அரசு 10 ரூபாய் குறைத்ததனால் ரூ.1.30 போனதால், இன்றைக்கு 18 ரூபாய் 45 பைசா. மத்திய அரசினுடையது 6 மடங்கு அதிகரித்திருக்கிறது. எனவே எந்த மாநிலமும் பெட்ரோல்,டீசல் விலையை குறைக்கவில்லை என்று சொல்வது தவறு. ஏனென்றால் அவர்கள் குறைப்பதற்கு முன், தேர்தல் வாக்குறுதிக்கேற்ப, தமிழக முதல்வர் சொல்லி நாம் இங்கே குறைத்து விட்டோம் என்று அவர் கூறினார்.முன்னதாக, கரோனா தொற்று மீண்டும் அதிகரிப்பது தொடர்பாக, மாநில முதல்வர்களுடன் நடத்திய ஆலோசனை கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, “மக்கள் மீதான பெட்ரோல், டீசல் விலை உயர்வு சுமையை குறைப்பதற்காக, கடந்த நவம்பர் மாதம் மத்திய அரசு அவற்றின் மீதான உற்பத்தி வரியைக் குறைத்தது. இதேபோன்று, மாநிலங்களும் உள்ளூர் வரியை குறைத்து மக்களுக்கு அந்தப் பலன் போய்ச் சேர உதவ வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டது.

சில மாநிலங்கள் வரியை குறைத்தன. ஆனால், சில மாநிலங்கள் மக்களுக்கு எந்தப் பலனையும் வழங்கவில்லை.இதன் காரணமாக, அந்த மாநிலங்களில் பெட்ரோல், டீசல் விலை தொடர்ந்து அதிகமாக உள்ளது. இது இந்த மாநிலங்களின் மக்களுக்கு செய்கிற அநீதி மட்டுமல்ல, இது மற்ற மாநிலங்களிலும் தீங்கு ஏற்படுத்துகிறது. மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், தெலங்கானா, ஆந்திரா, கேரளா, ஜார்கண்ட், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் சில காரணங்களுக்காகவோ, பிற காரணங்களுக்காகவோ மத்திய அரசு சொன்னதைக் கேட்கவில்லை. எனவே, அந்த மாநிலங்களின் மக்கள் தொடர்ந்து சுமையை அனுபவித்து வருகின்றனர்” என்று கூறியருந்தார்.

# கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு விசாரணை அதிகாரி திடீர் மாற்றம்



கொடநாடு கொலை, கொள்ளை வழக்கை விசாரித்த வந்த தனிப்படையில் இடம்பெற்ற மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் டி.சுரேஷ் பணியிடை மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் உள்ள கொடநாடு தேயிலை தோட்டத்தில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுக்கு சொந்தமான பங்களா உள்ளது. அதில் கடந்த 2017ம் ஆண்டு ஒரு கொலை மற்றும் கொள்ளை சம்பவம் நடைபெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக 10 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கு நீலகிரி மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இந்த வழக்கை விசாரணை நடத்தி வந்த மாவட்ட நீதிபதி சி.சஞ்சய் பாபா இரண்டு நாட்களுக்கு முன்பு தேனி மாவட்ட முதன்மை நீதிபதியாக பணியிடை மாற்றம் செய்யப்பட்டார். அவருக்கு பதில், நீலகிரி மாவட்ட புதிய நீதிபதியாக சென்னையில் உள்ள தொழில்துறை தீர்ப்பாயத்தின் நீதிபதி முருகன் நியமிக்கப்பட்டார். ஏற்கெனவே, கொடநாடு வழக்கை முன்பு விசாரித்த நீதிபதி வடமலை பணியிட மாற்றம் செய்யப்பட்ட நிலையில் மாவட்ட நீதிபதி பணியிடை மாற்றம் செய்யப்பட்டது குழப்பத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில், தற்போது கொடநாடு கொலை, கொள்ளை வழக்கை விசாரித்து வரும் தனிப்படையில் இடம் பெற்றிருந்த துணை கண்காணிப்பாளர் டி.சுரேஷ் தேனி மாவட்டத்துக்கு பணியிடை மாற்றம் செய்யப்பட்டுள்ளார். நீலகிரி மாவட்டம் குன்னூர் துணை கண்காணிப்பாளராக டி.சுரேஷ் இருந்து வந்தார். இவர் கொடநாடு கொலை கொள்ளை வழக்கை விசாரிக்கும் தனிப்படையில் இடம் பெற்றிருந்தார். இந்நிலையில், இவரை குன்னூரிலிருந்து தேனிக்கு இடம் மாற்றம் செய்து காவல்துறை இயக்குநர் சி.சைலேந்திர பாபு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், கொடநாடு வழக்கை விசாரணை அதிகாரி பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், மாவட்ட குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளராக இருந்த சி.சந்திரசேகர் குன்னூர் துணை கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கொடநாடு கொலை, கொள்ளை விசாரணைக்குழுவில் இடம் பெற்றுள்ளார்.கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு பரபரப்பாக உள்ள நிலையில், அதை விசாரக்கும் தனிப்படையில் இடம் பெற்றிருந்த அதிகாரி திடீரென பணியிடை மாற்றம் செய்யப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. காவல்துறை துணை கண்காணிப்பாளர் டி.சுரேஷ் அதிமுக பிரமுகர்களுடன் தொடர்பில் இருந்ததால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# தமிழகத்தின் பொன்னமராவதியில் கிடைத்த தங்க நாணயங்கள்... பாரசீக மொழி பேசும் மேலை நாடுகளுடனான வணிகத் தொடர்பை வெளிப்படுத்துகிறது: தொல்லியல் ஆய்வாளர்கள்

பொன்னமராவதி அருகே கிடைத்த தங்க நாணயங்கள் மூலம், பாரசீக மொழி பேசும் மேலை நாடுகளுடன் இப்பகுதி வணிக தொடர்பில் இருந்தது வெளிப்படுகிறது என தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்

.பொன்னமராவதி அருகே ஏனாதி பகுதியில் வீடு கட்டுவதற்கு அஸ்திவாரம் தோண்டியபோது, ஒரு மண் கலயத்தில் இருந்த 16 தங்க நாணயங்கள் நேற்று முன்தினம் கிடைத்தன. இவற்றை பொன்னமராவதி வட்டாட்சியர் ஜெயபாரதி கைப்பற்றி விசாரணை நடத்தினார். இப்பகுதியில் மிகவும் பழமையான தங்க நாணயங்கள் கிடைத்திருப்பது குறித்து புதுக்கோட்டை தொல்லியல் ஆர்வலர்கள் கூறியது: இந்த நாணயங்கள் 7ம் நூற்றாண்டை சேர்ந்ததாக தெரிகிறது. நாணயங்களில் பாரசீக மொழி எழுதப்பட்டுள்ளது.



பல்லவர் காலத்தில் இப்பகுதியானது மேலை நாடுகளுடன் (பாரசீக மொழி பேசும்) வணிகத் தொடர்பில் இருந்ததை உணர முடிகிறது.இவை, தினார் வகையைச் சேர்ந்த நாணயமாக உள்ளது. கவனத்துக்குரியதாக உள்ள இந்த நாணய கண்டெடுப்பு மூலம் பொன்னமராவதி பகுதி மேலைநாடுகளுடன் வணிக தொடர்பிலிருந்ததை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. மேலும், நாணயங்களில் துளையிடப்பட்டு இருப்பதால் அணிகலன்களாக பயன்படுத்தியதும் தெரிகிறது. இந்த நாணயங்களை பொறுத்தவரை தினசரி பயன்பாட்டில் இருந்ததாக இல்லை.

வெளிநாடுகளைச் சேர்ந்த மன்னர் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. கழஞ்சு என்ற நகை அளவிடும் முறை பின்பற்றப்பட்டதையும் அறிய முடிகிறது. இந்த நாணயங்களை பொன்னமராவதி சார் கருவூலத்திலிருந்து தமிழ்நாடு தொல்லியல் துறை தொடர் ஆய்வுக்கு உட்படுத்தி, இதனுடைய காலம், நாணயத்தை வெளியிட்ட மன்னர் பெயர் உள்ளிட்ட விவரங்களை அறிவித்தால் மட்டுமே இப்பகுதியின் வணிகத் தொடர்பை உலகறியச் செய்ய முடியும்.

இதுகுறித்து தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம். விரைவில் இந்த நாணயம் குறித்த முழு தகவலையும் தொல்லியல் துறை சார்பாக வெளியிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறோம் என்றனர்.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 995



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயில் மட்டக்களப்பு

*"அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவோர் முன்"*

சனாதனதர்மம், சிவசமயம், என்பது தற்காலத்தில் இந்துசமயம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. வைதிக சமயப்பிரிவுகள் அனைத்தையும் ஒன்றுசேர்க்கும் பொதுப் பெயராகவே இந்துசமயம் என்ற சொல் காணப்படுகின்றது. குமரனையும், கணபதியையும், திருமாலையும், சக்தியையும் முறையே தனித்தனி தெய்வம் எனக் கருத்தில் கொண்டு வழிபட்டோர் கௌமாரம், காணபத்தியம், வைணவம், சாக்தம் என்ற வெவ்வேறு மதங்களின் பிரிவால் அழைக்கப்பட்டனர். எனினும் இவ்வாறான கருத்தை மனதில் கொள்ளாது, பரம்பொருளான சிவபெருமானின் வெவ்வேறு தோற்றப் பெயர்களே இவையெனக் கருதி, சிவசமயம் என்ற ஒரே பெயருக்குள் அடக்கி வழிபாடியற்றி வரும் சிறப்பு ஈழநாட்டவர்க்குரிய தனிச்சிறப்பாகக் காணப்படுகின்றது.

கிழக்கிலங்கையிலே பண்டு தொட்டு சைவமும், தமிழும் நிலைத்து வருகின்றது. இக்காரணத்தினால் இங்கு தொன்மைச் சிறப்புடன் கூடிய பல கோயில்கள் காணப்படுகின்றன. இக் கோயில்களில் ஒரு பகுதி, திருப்படைக் கோயில்கள் அல்லது தேசத்துக் கோயில்கள் என வழங்கப்படுகின்றன. திருப்படை என்பது பல்வேறு சாதி மக்களினதும் உரிமையுடையது எனப் பொருள் கொள்ளலாம். தேசம் என்பது மட்டக்களப்புத் தேசமாகும்.

மீன்பாடும் தேன்நாடாக விளங்கும் மட்டக்களப்பில், முருகவழிபாடு மிகத் தொன்மையான வழிபாடாக விளங்குகின்றது. இவ்வாறு தொன்மையும், புகழும் கொண்ட முருகவழிபாட்டுத் தலங்களைத் திருப்படைக் கோவில்கள் என்று அழைப்பர். பண்டைய அரசின் மதிப்பும், மானியமும் இவ்வாறான தேசத்துக் கோயில்கள் என அழைக்கப்பட்ட திருப்படைக் கோவில்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. திருக்கோவிலிலுள்ள சித்திரவேலாயுத சுவாமி கோவிலே மட்டக்களப்பின் முதலாவது திருப்படைக் கோவிலாகக் காணப்படுகின்றது. இக்கோவிலையடுத்து திருப்படைக் கோவிலாகக் கருதப்பட்டவை முறையே, கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம், பெரிய போரதீவு சித்திரவேலாயுத சுவாமி கோயில், மண்டூர் முருகன் கோயில், வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயில் என்பவையாகும். பிற்காலத்தே சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோவிலும் ஒரு திருப்படைக் கோவிலாகக் கணிக்கப்பட்டுள்ளது.

சித்தாண்டி என்னும் கிராமம் மட்டக்களப்பு நகரின் வடக்கே பதின்மூன்று மைல் தொலைவில் உள்ளது. மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியிலிருந்து கால் மைல் தூரத்தில் சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயில் காணப்படுகின்றது. இதன் மேற்குப் பக்கமாக நெல்வயல்களும், ஏரிகளும் சூழ்ந்து இயற்கைச் செழிப்போடு காணப்படுகின்றது. மன்னர்களின் மானியத்தையும், மதிப்பையும் பெற்றவையாகத் திருக்கோயில்கள் விளங்கியபோதிலும், சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோவில் இந்நிலையிலிருந்து மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. ஏனைய திருப்படைக்கோவில்களோடு மன்னர்கள் தொடர்புபட்டுக் காணப்பட்டுள்ளனர். ஆனால், சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி கோயில் இவ்வூர் மக்களால் பேணப்பட்ட கோவிலாகக் காணப்படுகின்றது. இக் கோயில்பற்றிய வரலாற்று ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனாலும், கர்ணபரம்பரைக் கதைகள் மூலம் சித்தாண்டி மக்களால் இம் மாபெரும் ஆலயம் கட்டப்பட்டு, அதற்குரிய நிலங்களை மக்களே மானியமாக வழங்கியுள்ளதை அறிய முடிகின்றது.

இக்கோயிலுக்குப் போகும் வழியிலே அளவிற் சிறியதான மாணிக்கப்பிள்ளையாரின் கோயிலும், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் அழகிய உருவச் சிலையும் காணப்படுகின்றன. ஐந்து ஏக்கர் நிலப்பரப்பினைக் கொண்டதாகக் கோயில் வளாகம் காணப்படுகின்றது. இங்கு வம்மி மரங்களும், மகிழ மரமும் செழித்து வளர்ந்து சோலையாகக் காணப்படுகின்றது.

சித்தாண்டி என்ற பெயர், காரணப்பெயராகக் காணப்படுகின்றது. பல நூற்றாண்டுகளுக்கு முன் சிகண்டி என்னும் முனிவர் இவ்விடம் வந்து, தம்மிடமிருந்த இரும்பு வேலாயுதத்தை சிறு குடிசையில் வைத்துப் பூசித்தாரென்றும், இதை அறிந்த மக்கள் அங்கு சென்று வழிபட்டு, சகல சித்திகளையும் பெற்றனர். சிகண்டி முனிவர் பல அற்புதங்களையும், சித்துக்களையும் செய்தமையால், சித்தர் என்ற பெயரையும், வெண்ணீறு, உருத்திராக்கம் ஆகிய சிவசின்னங்களை அணிந்து காணப்பட்டமையால் ஆண்டி என்றபெயரும் சேர்ந்து (சித்தர் + ஆண்டி) சித்தாண்டி எனக் காரண இடுகுறிப் பெயரால் இக் கிராமம் அழைக்கப்டுகின்றது என்பது ஒரு சாரார் கூற்றாகக் காணப்படுகின்றது. வேறு சிலர் இக்கருத்தை ஏற்காது காணப்படுகின்றனர். பாமர வழக்கிலே இவ்வாறான மொழி மாற்றம் நிகழ வாய்ப்பில்லை என்றும், கோயிலின் தோற்றம் பற்றியும், ஊர்ப்பெயர் ஏற்பட்டமையின் காரணம்பற்றியும் ஆதாரபூர்வமான விளக்கங்கள் கிடைக்காமையினால் புனையப் பெற்ற கதையாகக் காணப்படுவதாக சிகண்டி முனிவரின் கதையைச் சில அறிஞர்கள் மறுத்துரைத்துள்ளனர். சிகண்டி முனிவர் என்ற பெயர் வேறும் பல ஆலயங்களின் வரலாற்றோடு தொடர்புபட்டுக் காணப்படுகின்றமையால் பெயர்க் காரணங்களைத் தெளிவுற வெளிப்படுத்துவது ஆய்வாளர் கடமையாகும்.

சித்தாண்டி சித்திரவேலாயுத கோயிலின் புனர்நிர்மாணப்பணிகள் காலத்திற்குக் காலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. கோயிலின் கிழக்கு வாசலில் கம்பீரமான தோற்றமுடைய இராசகோபுரம் கட்டப்பெற்றுள்ளது. இவ்வாலயத்தின் கோபுரம் மட்டக்களப்பு நாட்டிலேயே வேறுபட்ட சிறப்பம்சங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இக் கோபுரத்திலே ஏழு தளங்கள் அமைந்துள்ளன. இங்கு முருகனுடைய திருவிளையாடல்களை அழகுமிகு சிற்பங்களாகப் பொறித்துள்ளார்கள். அத்தோடு சிவபிரானின் கோலங்களும், அறுபத்து மூவரின் திருமேனிகளும் கோபுரத்தின் நான்கு புறங்களிலும் அழகுற அமைந்துள்ளது. கோபுர வாசலின் கதவு பதினாறடி உயரமும், பத்தடி அகலமுங் கொண்டது. இக் கதவு முதிரைப் பலகைகளினால் சித்திர வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இராச கோபுரத்தின் அருகில், இரு மணிக்கோபுரங்கள் உள்ளன. இவற்றிலுள்ள் வெண்கலக் காண்டா மணிகளுள் ஒவ்வொன்றும் நூற்றைம்பது கிலோ நிறை கொண்டது. இக் கோவிலின் மணியோசை கோயிற் சுற்றாடலில் நான்கு மைல் தூரம்வரை கேட்கும்.

*வளரும்...*

MURALI BUS LTD. 29 years

416.455.3514
56 SEATER COACH BUS WWW.MURALIBUS.CA
Canada & US Anywhere • Aiport Service On Time


T2
Cuba சுற்றுலா *All Inclusive*
குளிர் காலத்தை விட்டு வெப்பமான கால நிலையில் 7 நாட்கள் சுற்றுலா
May 13th (7 Days)
விமானச்சீட்டு Hotel
24மணி நேரமும் உணவு வகைகள் (Bar)
கிராமப்புற சுற்றுலா, புளியமரம், நாவல் மரம்
வாழை இலையில் சாப்பாடு, உடன் ஆட்டிறைச்சி, உடன் மீன், குதிரை வண்டியில் பவனி, இளநீர்
(Home to Home) - உங்கள் வீட்டு வாசலில் இருந்து உங்கள் வீடு வரை (Not Free). உங்கள் சொந்தச் செலவுகளுக்கு நீங்களேபொறுப்பு)
ஒருவருக்கு $1400 மட்டுமே.
*2 people per room

T3
Rajarajeswary Temple & Pitsburg S.V. Temple
May 21 & 22 (2 Days) $260
*Including Hotel - 4 people per room


T4
Montreal Tour and Val Morin Temple
தேர் திருவிழா
July 16 and 17th $225
Saint Joseph Church - Lunch Buffet
Premium Outlet Shopping (4 people in a room)


T5
EAST COAST
* Mont Tremblant
* Longest covered bridge
* Reversing Falls
* Magnetic Hill
* Hopewell Rocks
* Peggy's Cove
* Swiss Airflight Crash Scene
* Maritime Museum
* Parliament Building (Charlottetown)
* Historical Place (Charlottetown)
* Potatoe Farm
* Beach
July 1st - 7th
4 Province Tour
$990 (each person)
*Quebec *Nova Scotia *New Brunswick *Prince Edward Island (P.E.I)
(4 மாகாணங்கள்)


T6 SOON!
New York, Washington DC, Pittsburgh
4 நாட்கள் சுற்றுலா


முன்பதிவு செய்தல் அவசியம். தொடர்புகளுக்கு அழையுங்கள்
Murali 416.455.3514 | muralitaran@outlook.com
Vaccination is mandatory (at least 2 doses)

(_21_ பக்கத் தொடர்ச்சி)

## பதவிகளை தக்கவைக்கவா இடைக்கால அரசாங்கம்?

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் 2018 ஆம் ஆண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு எதிராகவும் தேசிய அரசாங்கத்துக்கு எதிராகவும் (4.4.2018) கூட்டு எதிர்க்கட்சியாலும் அதேயாண்டு வணிக கைத்தொழில் அமைச்சர் ரிஷாட் பதியுதினுக்கு எதிராகவும் 2019 ஆம் ஆண்டு அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப்பிரேரணைகளுக்கு என்ன நடந்தது என்பது நாடறியும்.

பிவிதுரு ஹெலஉறுமய தலைவர் உதய கம்மன்பில கருத்துப்படி நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க 120 உறுப்பினர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் எனவே நம்பிக்கையில்லாப்பிரேரணையை கொண்டுவரும்படி ஐக்கிய மக்கள் சக்தியை வலியுறுத்தியுள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தியைச்சேர்ந்த 65 உறுப்பினர்கள் சுயாதீனமாக இயங்கும் 39 உறுப்பினர்கள் பின்வரிசை ஆசனக்காரர்10 பேர் மற்றும் டலஸ் அழகப்பெரும சரித ஹேரத் உட்பட 120 உறுப்பினர்கள் நம்பிக்கையில்லாப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்க தயாரகவுள்ளனர் என உதய கம்மன்பில கணக்கு காட்டினாலும் பிரதமர் மஹிந்த இதை மறுத்துள்ளதோடு பொதுஜன பெரமுனவின் பொது செயலாளர் சாகர காரியவாசம் நாம் 124 பேர் ஆட்சியாளர்கள் பலத்துடன் இருக்கிறோம் என பிரேரணையை கொண்டுவந்து பாருங்கள் என எதிர்த்தரப்பினர்க்கு சவால் விடுத்துள்ளார்.

அரசுக்கு எதிராகவோ அன்றி ஜனாதிபதிக்கெதிராகவோ நம்பிக்கை இல்லாப்பிரேரணை ஒன்று பாராளுமன்றில் கொண்டுவரப்படுமானால் தமிழ்த்தரப்பினரின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கப்போகிறது என்பது இன்னும் தீர் மானிக்கப்படாத ஒன்றாக இருந்தாலும் ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் இல்லாது ஆக்கப்படவேண்டும் என்பதில் நீண்ட தீர்மானம் கொண்டவர்களாக தமிழ்த்தரப்பினர் காணப்படுவதனால் பிரேரணைக்கு ஆதரவு அளிக்கும் நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்று வைத்துக்கொண்டாலும் புத்தி ஜீவிகள் இவ்விவகாரத்தை எப்படி எடுத்துக்கொள்வார்கள் என்று ஆருடம் கூறமுடியாது.

"தற்போதைய சூழலில் ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நடத்த முடியாது என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் விடயம். மறுபுறம் ஜனாதிபதி பதவி விலகினால் அது அரசியல் ரீதியாக நெருக்கடிகளை உருவாக்கிவிடும் எனவே அரசியல் சாசனத்தில் கூறியபடி தொடர்ந்து பதவியிலிருப்பேன் நான் பதவி விலகப்போவதில்லை" என ஜனாதிபதி திட்டவட்டமாக அறிவித்துள்ளார். ஜனாதிபதிக்கு அல்லது அரசாங்கத்துக்கு எதிராக கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப்பிரச்சனைக்கு ஆதரவு நல்குவதா அன்றி நடு நிலைவகிப்பதா? என்பதை தீர்மானிப்பதில் தமிழ்த்தரப்பினர் தீர்க்கதரிசனத்துடன் நடந்து கொள்ளவேண்டுமென்பது தமிழ் மக்களின் ஆழமான எதிர்பபார்ப்பாக இருக்கப்போகிறது.

நாட்டின் இன்றைய நெருக்கடியை கடினமாக்கிவரும் இன்னொரு விவகாரமாக காணப்படுவது பாராளுமன்றில் அங்கம் பெறும் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கி கலப்பு இடைக்கால அரசாங்கமொன்றை உருவாக்குங்கள் என்ற கோரிக்கை வலுவடைந்து வருவது. இக்கோரிக்கையை கட்சிகள் என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தியினரும் அதேபோன்று இடைக்கால அரசை ஸ்தாபித்து அதனூடாக இன்றைய நெருக்கடிக்கு தீர்வு காணுங்கள் என 11 பங்காளிகட்சியை சேர்ந்தவர்களும் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். இதே விடயத்தை சுயாதீன குழுவினர் 40 பேரும் தொடர்ந்து வலியுறுத்திவருகிறார்கள்.

பிரதமர் மஹிந்த பதவி விலகி சர்வ கட்சி அடங்கிய இடைக்கால அரசு அமைக்க வழிவிடவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறியது கட்சிக்குள் புயலை உருவாக்கியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக பௌத்த பீடங்கள் நான்கை சேர்ந்த மகாநாயக்கர்கள் கூட்டாக கடந்த 4 ஆம் திகதி (4.4.2022) ஜனாதிபதியை நோக்கி பின்வருமாறு ஒரு அறிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலைக்கு தீர்வு காண்பது தொடர்பில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை உள்ளடங்கிய யோசனைகளை அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்தனர். அதில் சகல கட்சிகளும் உள்ளடங்கியவாறு கலப்பு கூட்டரசாங்கம் ஒன்றை உடனடியாக அமைத்து நெருக்கடிக்கு தீர்வு காணுங்கள் என்பது அக்கோரிக்கையின் அர்த்தமாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதேவேளை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதி கோத்தபாய மற்றும் "பிரதமர் பதவி விலகவேண்டும் இடைக்கால அரசாங்க மொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்." என்று கூறி இடைக்கால அரசாங்கத்தின் பிரதமரானவர் பாராளுமன்றின் நம்பிக்கையை பெறக்கூடியவராகவும் மந்திரிசபைக்கு தலைமை தாங்கும் ஆளுமை கொண்டவராகவும் இருக்கவேண்டும் அரசியல் அமைப்பின் 42 பிரிவின்படி அமைச்சரவையில் 12 பேரே நிமிக்கப்படவேண்டும் என்ற தனது ஆலோசனையையும் முன்வைத்துள்ளார்.

இவையெல்லாவற்றையும் நோக்கும்போது இடைக்கால அரசொன்றை உடனடியாக நிறுவுவதன் மூலமே நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு பரிகாரமாக அமையும் என்ற முடிவு சகலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி அவர்கள் பௌத்த பீடங்களின் கோரிக்கையை ஏற்று இடைக்கால அரசொன்றை நிறுவ யான் தயாராகவுள்ளேன் என்ற சாதகமான முடிவுக்கு வந்துள்ளதாக பாராட்டுக்கள் தெரிவிக்கப்படுகிறது.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி தயாராக இருந்தாலும் அது நிறுவப்படுவதிலுள்ள சிக்கல்கள் சவால்கள் அதிகமாக காணப்படலாம் என்பது அரசியில் துறைசார்ந்தோரின் கருத்தாகும். ஏலவே நெருக்கடி தலை தூக்கிய காலத்தில் ஜனாதிபதி புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்க "சகல கட்சிகளை சேர்ந்தவர்களும் வாருங்கள் என்று அழைப்பு விட்டிருந்தபோதும் அதுயாராலும் கவனத்தில் கொள்ளப்படவில்லை இவ்வழைப்பு தொடர்ந்துவிடப்பட்டுவருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் எவை என்பதை தெளிவாக புரிந்து கொள்ளவேண்டும்.

போராட்டக்காரர்கள் ஜனாதிபதியை பதவி விலகுமாறு தொடர்ந்து போராடி வருகிறார்கள். நாளுக்கு நாள் போராட்டம் விஸ்வரூபம் எடுத்துக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதியின் தலைமையை அங்கீகரித்து புதிய அரசாங்கத்தை ஏற்றுக்கொள்வார்களா? போராட்டக்காரரர்களும் மக்களும் என்பதை உறுதிப்படுத்த முடியாது.

இடைக்கால அரசு ஒன்று தாபிக்கப்படவேண்டுமாயின் அது எனது தலைமையில் தாபிக்கப்படவேண்டும் பிறி தொரு தரப்பினரை பிரதமர் ஆக்க பெரும்பான்மையானவர்கள் தயாரில்லை நான் பதவி விலகப்போவதில்லை என பிரதமர் அடம்பிடித்துவருகிறார். இது இவ்வாறு இருக்கு இடைக்கால அரசாங்கத்துக்கு யாரை பிரதமர் ஆக்குவது என்பது இன்னொரு சங்கடமான நிலை உருவாகிவிடும்.

இடைக்கால அரசாங்கத்துக்கான அமைச்சர் நியமனங்களில் எத்தகைய யுக்திகளை கையாளமுடியும் ஏலவே புதிய தலைமுறையினர் நியமனம் தொடர்பில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தமது கடும் ஆட்சேபனையை தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மை சமூகத்தினர் எவ்வாறு உள்வாங்கப்படுவார்கள் கூட்டரசாங்கத்தை உருவாக்கும் கட்சிகளுக்கு பதவிகளை எப்படி பங்கு போட்டுக்கொள்ள முடியுமென்பது இருக்கும்பிரச்சனைகளை இன்னும் தூண்விடக்கூடிய நிலமையும் உருவாகலாம்.

இவ்வாறான சாவால்களும் சங்கடங்களும் கொண்ட ஒரு அரசு நிறுவப்படமுானால் அந்த அரசாங்கம் எத்தனை காலத்துக்கு நீடித்து உயர் வாழ முடியும். இடைக்கால அரசாங்கம் ஒன்று உயிரோட்டம் உள்ளதாக நீடித்த உயிர் கொண்டதாக இருக்கவேண்டுமாயின் பாராளுமன்றில் அங்கம் பெறும் அனைத்து கட்சிகளுடைய மலிவான மற்றும் பலமான ஆதரவு தொடர்ந்து இருக்கவேண்டும் என்பதுடன் அறுதிப்பெரும்பான்மைக்கு மேற்பட்டவர்கள் குறித்த அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் பலம் இருந்து கொண்டேயிருக்கவேண்டும். ஆனால் நடைமுறையில் இவை பலன் அளிக்கக்கூடியதா? என்பது பரீட்சித்துப் பார்க்கும்போதே அனுமானிக்க முடியும் அதுவமன்றி இந்த இடைக்கால அரசாங்கத்துக்கு தமிழ் மக்கள் முஸ்லீம் சமூகம் மலையக கட்சிகள் எவ்வாறு ஆதரவு வழங்கப்போகிறது என்பது யதார்த்தத்தில் நின்று கவனிக்கப்படவேண்டிய விடயம்.

அதுவுமன்றி ஐக்கியமக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளைபொறுத்தவரை தாம் ஆட்சியை கைப்பற்றவேண்டும் என்பதில் கண்கொத்திப்பாம்புபோல் பார்த்துக்கொண்டிருப்பவர்கள் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் பிரதமர் வீடு செல்லவேண்டும் என்பதை தமது தாரக மந்திரமாகக்கொண்டு செயற்பட்டுவரும் மேற்படி இருகட்சிகளும் தொடர்ந்து இடைக்கால அரசுக்கு ஆதரவு நல்கும் நிலை இருக்குமா? என்பதை அறுதியிட்டு கூறமுடியாது. எனவே இடைக்கால அரசாங்கத்தை உரிய காலம் மட்டும் தொடர்ந்து நடத்தி செல்வதில் உள்ள சவால்களை யர்ருமே ஆருடம் கூறிவிடமுடியாது. அதுவுமன்றி தமிழ்த்தரப்பினரின் நீண்டகாலப்போராட்டத்துக்கு பரிகாரம் காண முடியாத எந்தவொரு அரசாங்கத்தையும் அவர்கள் ஆலிங்கனம் செய்ய மக்கள் அங்கீகரிப்பார்களா? என்பது பகற்கனவாகவும் ஆகலாம்.

---

# கடந்தவையும் கடப்பவையும் (29)

**- உமா மோகன் -**

*...வலிக்கிறது,*

**படிப்பதற்கு ஆர்வமுள்ள எத்தனையோ பிள்ளைகள்**
**எடுபிடியாய் இன்னமும் உள்ளனராம் - அங்கு**

**கட்டாயக் கல்விச் சட்டமொன்று இருக்க - இன்னும்**
**எட்டவாம் நிற்கின்றார் பலநூறு பிள்ளைகள்**

**பள்ளிக்கூட வாசலுக்கே போகாமல் - போனாலும்**
**மெள்ளவே விலகுராராம் வறுமையினால் - பள்ளிகளில்**

**இடைவிலகல் நடக்குதாம் பல இடத்தில்**
**பணவசதி இல்லாக் குடும்பச்சுமை காரணமாம் - அதனால்**

**குழந்தைகள் பலர் கூலிகளாய் ஆகுராராம் - போரினால்**
**இழந்தவை பலவென யாருக்கும் தெரியும் - அங்கு**

**போரின் வடுக்களோடும் சுமந்தனராம் - வெடித்து**
**சிதைந்த குண்டுகளின் இரும்புப் பாகங்களை - தெற்கின்**

**இரும்பு வியாபாரிகள் கொடுக்கும் - கூலி**
**வரும்படி கொண்டு குடும்பத்தைக் காக்கவென்று**

**மிதிவெடி அபாய எச்சரிக்கைக் குறிபீடு - அதையும்**
**மதியாது திரும்பத்திரும்பத் தேடியும் போயினராம் - முன்னர்**

**பொம்மை வெளியிலும் சிறுவர்கள் அதிகமாம் - அங்கும்**
**குப்பைக்குள் கிடைப்பதை கிண்டி எடப்பதற்காம் - இப்போ**

**சிரமப்பட்டு பள்ளிக்குப்போகும் பிள்ளைகளை இடைமறித்து**
**அவர் கையில் கொடுக்கிறாராம் போதைச்சுருள் - கன**

**காசை அவர் கையில் காட்டி - படிப்பின்**
**ஆசையையும் கெடுக்கின்றாராம் கொதிக்கின்றார்கள் பெரியவர்கள்**

**அப்படியும் சிலர் இருக்க - இன்னும்**
**இப்படியும் உள்ளனராம் பிள்ளைகள் - போரில்**

**தந்தையை இழந்த தனையன் அவன்**
**தன்னிலும் இழந்துள்ளானாம் ஒருகாலும் ஒருகையும் - ஆனாலும்**

**சிந்தையிலே தான் படிக்கவேனும் எனும்**
**கொள்கையிலே திடமாக இருக்கின்றானாம்**

**படிக்கவேனும் எனும் ஆசையை**
**நிறுத்துவது பெரும் பாவம் - அது**

**காலம் கழிந்த பின்பும் கண்ணீர் தரும் - அந்த**
**கறுப்புக் காந்தியது பேத்தியின் கண்களைப்போல்......**

(தொடரும்)

# ஓராண்டை எட்டிப் பிடிக்கும் "கனடா உதயன்" மற்றும் மலேசிய "தமிழ்க் கல்விச் சமூகம்" இணைந்து நடத்தும் "மலேசிய தமிழ் மாணவர்களின் நாவன்மையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சி"




இந்த உலகை "கொரோனா" என்னும் கொடிதான நோய் கவ்விப் பிடித்துக் கொண்டிருந்த காலத்தில் உலகத் தமிழ்ச் சமூகமானது. அந்த அதிர்ச்சியிலம் ஒய்யாராமாய் எழுந்து நிற்கத் துணிந்தது.

உலகெங்கும் இயங்கிவரும் பல்வேறு துறை சார்ந்த அமைப்புக்களும் கல்வி நிறுவனங்களும் பல்கலைக் கழகங்களும் இணையவழியாக பல அறிவு சார்ந்த விடயங்களை அறிமுகப்படுத்தின. கலை இலககியம் ஆக்க இலக்கியம் மற்றும் தமிழர்களின் மரபுக் கலைகள் என அனைத்தையும் அணைத்த வண்ணம் உலகத் தமிழ் இனம் உயரத்தை அடைந்து விட காரியங்களிலி இறங்கியது.

இந்த வேளையின் போது தான் மலேசியாவிலிருந்து சமூக ஆர்வலரும் பாடகருமான ரவாங் ராஜா கனடா உதயன் ஆசிரிய பீடத்தை நோக்கி அழைப்பொன்றை விடுத்தார்.

அந்த உரையாடலில் அவரது சமூக அக்கறையும் வளர்ந்த வரும் ஆரம்ப பாடசாலை மாணவர்கள் மீது கொண்ட அக்கறையும் தென்பட்டது.

ஆமாம்! மலேசியாவில் உள்ள ஒதுக்குப் புறமாக இயங்கிவரும் தமிழ்ப் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆரம்ப வகுப்புகளில் உள்ள மாணவ மாணவிகளின் நாவன்மைத் திறனை உலகறியச் செய்ய வேண்டும் என்ற தனது எண்ணத்தை கனடா உதயன் ஆசிரிய பீடத்தின் உறுப்பினர்களிடம் சமர்ப்பித்தார்.

அந்த மாதத்தின் கடைசி வாரத்தில் இந்த நிகழ்ச்சியை அவர் கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவோடு ஆரம்பித்தார் ரவாங் ராஜா அவர்கள்.



இந்த அற்புதமான முயற்சிக்கு மலேசியாவில் உள்ள பெற்றோர் சமூகமும் ஆசிரிய சமூகமும் ரவாங் ராஜா அவர்களுக்கு முழுமையான ஆதரவை வழங்கி நின்றன. அந்த மாதத்திலேயே முதல்வாது நிகழ்ச்சி கடைசி வாரத்தில் ஆரம்பமானது.

மலேசியாவின் பல மாநிலங்களிலிருந்தும் மாணவ மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். அனைத்தும் நன்றாகவே நடந்தன. ஆரம்பமே நல்ல அத்திவாரத்தை உறுதியாக அமைத்தது.

தற்போது. ஓராண்டை எட்டிப் பிடிக்கும் கனடா உதயன் - மலேசிய தமிழ்க் கல்விச் சமூகம் இணைந்து நடத்தும் இந்த "மலேசிய தமிழ் மாணவர்களின் நாவன்மையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சி அடுத்த மே மாதத்தில் 29ம் திகதி இணையவழி ஊடாக நடைபெறவுள்ளது. ஓராண்டை பூர்த்தி செய்யும் இந்த நிகழ்வில் சிறப்பான பல அம்சங்கள் இடம்பெறவுள்ளன.

இங்கே காணப்படும் படங்கள் கடந்த 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற "அரங்கம் - 11" இல் பங்கு பற்றிய அனைத்து மாணவ மாணவிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் என அனைவரையும் உங்கள் முன் கொண்டு வருகின்றது.

***நன்றியுடன் - கனடா உதயன் ஆசிரிய பீடம்***




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை. வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

## ஜீவன் முக்தி (பகுதி 581)

# பிரத்யாகார தியானம்

பலன்கள்

*1: 'உள்ளே பார்த்தல்' எனும் புலனைப் புத்துணர்வூட்டும் பிரத்யாகார தியானம்.*

*2: புலன்களின் பேரிரைச்சலால் நீங்கள் பாதிக்கப்படவே மாட்டீர்கள் எனும் நிலையை அடைய உதவும் தியானம்.*

**செயல்முறைக்கான விளக்கம் :**

இதை எங்கும், எப்போதும் செய்யலாம்.

நீங்கள் எங்கிருந்தாலும் சரி, புலன்கள் மூலமாக உங்களுக்குள் வரும் சமிக்ஞைகளைக் கவனியுங்கள். தோட்டத்தில் உள்ள ஒரு மலரை நீங்கள் பார்க்கலாம். பறவைகளின் பாட்டைப் கேட்கலாம். கால்மீது ஏறும் ஓர் எறும்பின் செயலையும் உணரலாம்.

என்ன செய்ய வேண்டும்?

கண்களை மூடிக் கொள்ளுங்கள்.

நீங்கள் கண் பார்வையற்றவராக மாறிவிட்டதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.



பறவையின் பாடலை கேட்க முடியாதவராகவும் எறும்பு ஊர்வதை உணர முடியாதவராகவும் ஆகிவிட்டதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

உறைந்து போய்விட்டதாக நினைத்துக் கொள்ளுங்கள். அசைய முடியாத படி ஆகிவிட்டதாக நினைத்துக் கொள்ளுங்கள். இந்த உணர்வில் ஆழ்ந்து செல்லுங்கள். உங்களால் அது முடியும்!

எப்படி? ஒரு வினாடி நேரம் மூச்சை நிறுத்திப் பாருங்கள். உங்கள் புலன்கள் தாமே மூடிக் கொண்டுவிடும். மூச்சு நின்றுவிடும்போது உணர்வுகளும் நின்று விடுகின்றன.

மூச்சை நிறுத்திவிட்டுக் கவனித்துப் பாருங்கள். உங்கள் தோலில் நமைச்சல் உணர்வு தெரிகிறதா? தூரத்து ஓசை கேட்கிறதா? உங்கள் உடல் முற்றிலும் உறைந்து போய் விட்டது. உங்களால் கையைத் தூக்கக்கூட முடியாது!

நிம்மதியடைவதற்கு இது ஒரு அருமையான யுக்தி. நீங்கள் வெளிநோக்கிப் பாய முடியாதபோது புலன்கள் மூலம் உணர்வுகள் பெற முடியாதபோது நீங்கள் உங்களை நோக்கி உள்ளே வீசி எறியப்படுகிறீர்கள்.

நீங்கள் ஒரு நிசப்தத் தீவாக மாறிவிடுவீர்கள். அந்த நிசப்தத்தில் நீங்கள் உங்களுடைய சொந்த மையத்தைக் கண்டு கொள்வீர்கள்.

அந்த நிலையில் நீங்கள் வெளியே பார்த்தாலும் எதையாவது கேட்டாலும் கூட அவற்றை நீங்கள் உங்களின் சொந்த நிசப்த மையத்திலிருந்தே பார்ப்பீர்கள். ஒரு முறை அந்த இடத்தைக் கண்டுபிடித்த பிறகு எந்தக் காரணம் கொண்டும் புலன்களின் பேரிரைச்சலால் நீங்கள் பாதிக்கப்படவே மாட்டீர்கள்.

உங்களின் மன உறுதியால் நீங்கள் உங்கள் புலன்களை மூடி அடைத்துவிட முடியும். உங்கள் புலன்களின் பார்வையாளராக நீங்கள் ஆகிவிடவும் முடியும்.

## மௌன பிந்து

பலன்கள்:

*1: 'கேட்டல்' எனும் புலனைப் புத்துணர்வூட்டும் மௌன பிந்து தியானம்.*

*2: இந்தத் தியானத்தை செய்யும் ஒவ்வொரு முறையும் உங்கள் உள்வாங்கும் திறன் கூர்மைப்படும், அதிகரிக்கும்.*

**இந்தத் தியானமுறையைப் பற்றி:**

இதுவொரு கேட்கும் தியானம்.

கேட்கும் தியானங்கள் அடக்கமான தியானங்கள். நீங்கள் எதையுமே செய்ய வேண்டியதில்லை. சும்மா கேட்டுக் கொண்டிருந்தால் போதும்.

ஆனால், கேட்பதால் நிறையப் பலன் விளையும்! நாம் வாழ்வது ஒலிகளின் புயல் நடுவே.

எப்போதும் ஒலிகள் வந்து நம்மைத் தாக்கிக் கொண்டே இருக்கின்றன. நம்மை நசுக்குகின்றன. நம்மை விழுங்கி விடுகின்றன.

அந்தப் புயலில் நாம் காணாமல் போய் விடுகிறோம். ஆனால், அந்தப் புயலின் நடுவே, நாம் கேள்விப்பட்டிராத ஒரு மௌனம் இருக்கிறது. அந்த நிசப்தத்தை இந்தத் தியானம் நம்மை உணரச் செய்கிறது.

**செயல்முறைக்கான குறிப்புகள்:**

எங்கு வேண்டுமானாலும் சரி அமர்ந்து கொள்ளுங்கள். அந்த இடத்தில் எவ்வளவு இரைச்சல் அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு நல்லது!

ஓசை தொடர்ந்து கேட்கும் இடமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அது இயற்கை ஓசையாக இருத்தல் நல்லது.

பாய்ந்து செல்லும் ஆறாகவோ அருவியாகவோ இருக்கலாம் அல்லது இரயில் நிலையம் சந்தை கடைவீதியாகக் கூட இருக்கலாம்!

எங்கு வேண்டுமானாலும் சரி அமர்ந்து கொள்ளுங்கள். அந்த இடத்தில் எவ்வளவு இரைச்சல் அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு நல்லது!

ஓசை தொடர்ந்து கேட்கும் இடமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அது இயற்கை ஓசையாக இருத்தல் நல்லது.

பாய்ந்து செல்லும் ஆறாகவோ அருவியாகவோ இருக்கலாம் அல்லது இரயில் நிலையம் சந்தை கடைவீதியாகக் கூட இருக்கலாம்! அமைதியாக இருங்கள். உங்களை நோக்கி பல திசைகளிலிருந்தும் அலைஅலையாக வரும் ஓசைகளை உணருங்கள். எல்லாப் பக்கங்களிலிருந்தும் ஓசைகள் பாய அந்த ஒலிப் பாயலின் நடுவே இருப்பதாக உணருங்கள்.

ஓசைகள் உங்களை நோக்கிப் பாய்கின்றன. உங்களுக்குள்ளே ஆழ்ந்த அமைதியையும் ஓசையே இல்லையென்ற நிசப்தத்தையும் உணருங்கள்!

மையத்தில் ஓசைகள் இருந்தால் உங்களால் வெளி ஓசைகளைக் கேட்க முடியாது. புற ஓசைகள் உங்களுக்குள் புகுந்து ஊடுருவிச் செல்கின்றன. ஆனால் அவை மையத்தை அடையும்போது நின்று விடுகின்றன. உங்களுக்குள் ஓர் இடம் இருக்கிறது.

அங்கே எல்லா ஓசைகளும் நின்றுவிடும். அந்த இடத்திலிருந்துதான் நாம் ஒவ்வொரு ஓசையையும் கேட்கிறோம். அந்த இடத்தைக் கண்டுகொள்ள முயலுங்கள். அது சட்டென உங்களின் விழிப்புணர்வை உள்முகமாகத் திருப்பி விடும். உங்கள் விழிப்புணர்வு வெளியுலகத்திலிருந்து இடம் மாறுகிறது.

எங்கு நிசப்தம் நிலவுகிறதோ. அதுதான் உங்கள் மையம். எந்த ஓசையும் புக முடியாத ஒரு புள்ளி இருக்கிறது. அந்தப் புள்ளி நீங்கள்தான். உலகின் புற ஓசைகள் மையத்தில் உள்ள ஓசையில்லா ஓசை.

இந்த இரண்டையும் கேட்கக் கற்றுக் கொள்ளுங்கள். ஒன்றிலிருந்து இன்னொன்றை நோக்கி நகருங்கள். வெளியிலிருந்து உள்ளே பிறகு மறுபடியும் திரும்பி வரக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு முறையும் உங்கள் உள்வாங்கும் திறன் கூர்மைப்படும் அதிகரிக்கும். அகத்திற்கும் புறத்திற்குமாக எளிதாக நகர்ந்து செல்லக் கற்றுக் கொள்ளுங்கள். அப்போது தெரியும் அந்த விளையாட்டு எப்படிப்பட்டதென்று?!

## செயலை நிறுத்து!

பலன்கள்:

3: நுகர்தல்' எனும் புலனைப் புத்துணர்வூட்டும்செயல் நிறுத்து தியானம்.

2: இந்தத் தியானத்தால் உங்களின் மையத்தை நோக்கி கண நேரத்தில் தூக்கி எறியப்படுவீர்கள். தொடர்ந்து எதையாவது செய்து கொண்டே இருப்பது மனத்தின் சுவாசம். இந்தத் தியானம் சூட்சுமமான உங்களின் சுவாச புலனையும் புத்துணர்வூட்டும். உங்களின் மையத்தோடும் உங்களை இணைக்கும்.

இந்தத் தியானம் எளிமையானது! நீங்கள் எதைச் செய்து கொண்டிருந்தாலும் நடுவில் அதைச் சட்டென நிறுத்தி விட முடியும்! சட்டென நிறுத்தப் போகிறோம் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கக் கூடாது! அதனால் நாள் முழுவதும் உங்களைக் கவனித்துக் கொண்டிருக்கிற யாராவது ஒருவர் உங்களது செயலின் நடுவே குறுக்கிட்டு சட்டென 'நிறுத்து!' என்று உரக்கக்குரல் கொடுக்க வேண்டும் அவர்கள் விரும்பும் இடத்தில்! இது ஒருவகைச் சிலைபோல நின்று விடுதல்.

நீங்கள் நன்றாக ஆழ்ந்திருக்கும் செயலைச் சட்டென நிறுத்துவதால் அதிர்ச்சியும் மௌனமும் பெறுவீர்கள். அந்தக் கணப்பொழுதில்... நீங்கள் உங்களது இருப்புத் தன்மைக்குள் தூக்கி எறியப்படுவீர்கள்.

செயல்முறைக்கான விளக்கம் இந்தத் தியானத்தைத் தனியாகவோ ஒரு குழுவாகச் சேர்ந்தோ செய்யலாம். உத்தரவிட மட்டும் ஒருவர் இருந்தால் போதும்.

ஆனால் அடிக்கடி உத்தரவிடுதல் கூடாது. அப்படிச் செய்தால் உத்தரவு வரும் என்ற எதிர்பார்ப்பு தியானம் செய்பவருக்குள் ஏற்பட்டுவிடும்! நீங்கள் நடக்கும்போதும் பேசும் போதும் வேலை செய்யும்போதும் நடனமாடும் போதும்



'உறைந்து விடு! நிறுத்து!' என்ற குரல் கேட்டதும் சட்டெனச் செயலை நிறுத்திச் சிலைபோல நின்றுவிட வேண்டும். ஒரு கை மேலே உயர்த்தியபடி இருந்தாலும் வாய்திறந்தபடி இருந்தாலும் அப்படியே இருந்துவிட வேண்டியதுதான்.

இதை நேர்மையாகச் செய்யுங்கள். சௌகரியமான நிலைக்கு நகர்ந்து கொள்ள வேண்டாம். ஒரு கணத்தாமதமும் மிகத்தாமதம்தான். இதை உங்களுக்கு நீங்களே விளையாட்டுபோலச் செய்து கொள்ளலாம். ஓடிக் கொண்டிருக்கையில் அல்லது குளிக்கையில் தேநீர் அருந்துகையில் சட்டென உங்களுக்கு நீங்களே உத்தர விட்டுக்கொள்ளுங்கள் 'நிறுத்து!' உடனே நிறுத்திவிடவேண்டும் நிறுத்த முயலக்கூடாது.


ஒரே ஒரு மைசூர்பாக்கை மெல்லத் தின்று அதன் நெய் கலந்த இனிப்பு சுவை உமிழ்நீரிலேயே கரைந்து மறையும் அளவுக்கு சுவைத்துச் சாப்பிட்டால் ஒரு மைசூர்பாக்கைத் தாண்டி இரண்டாவது

வேண்டாம். ஒரு கணத்தாமதமும், மிகத் தாமதம்தான்.

இதை உங்களுக்கு நீங்களே விளையாட்டுபோலச் செய்து கொள்ளலாம். ஓடிக் கொண்டிருக்கையில் அல்லது குளிக்கையில், தேநீர் அருந்துகையில் சட்டென உங்களுக்கு நீங்களே உத்தர விட்டுக் கொள்ளுங்கள். ''நிறுத்து!'' : உடனே நிறுத்திவிட வேண்டும்;நிறுத்த முயலக்கூடாது.

அதை தாண்டி இன்னொன்று இன்னொன்று எனச்சாப்பிடுவது தானாய்த் தவிர்க்கப்படும். இதுவே முழுத் திருப்தியை ஏற்படுத்தும்.

மூன்று நான்கு முறை மென்றவுடன் இனிப்பை விழுங்குவது என்ற பழக்கம் இருந்தால் பத்து மைசூர்பாக்கைச் சாப்பிட்டபிறகும் இன்னொன்று சாப்பிட்டால் பரவாயில்லை என்று தோன்றும். திருப்தி இருக்காது.



ஒரு காரியத்தில், நீங்கள் முற்றிலுமாக ஆழ்ந்திருக்கும்போது, சட்டென நிறுத்தினால், அந்த நிறுத்தமே உங்களை நிலை தடுமாறச் செய்துவிடும்.

உங்கள் மையத்தை நோக்கி, நீங்கள் தூக்கி எறியப்படுவீர்கள். ஒரு கணப் பொழுது தியான அமைதியை, மௌனத்தை நீங்கள் அனுபவிப்பீர்கள்.

## உண்ணுதல் தியானம்

பலன்கள்:

*1: 'நாக்கு' எனும் புலனைப் புத்துணர்வூட்டும் உண்ணுதல் தியானம்.*

*2: உண்ணுதல் தியானத்தால் சாதாரண உணவும் விருந்தாகும். அதுவே நல்ல மருந்தாகும், சக்தியைப் பெருக்கும்.*

**சாப்பிடும்போது சாப்பிடு**

சாப்பிடும்போது வேறு எந்த வேலையும் செய்யாமல், வேறு எதைப் பற்றியும் யோசிக்காமல் முழுமையாகச் 'சாப்பிடுதல்' என்ற செயலை மட்டும் செய்வதால் (தியானிப்பதால்) கிடைக்கும் நன்மைகள்.

1. ஒரே செயலை ஆழமாகச் செய்யும்போது... மனமானது எதிர்காலம் நோக்கிப் பறக்காமல், இறந்தகாலத்தைக் குறித்து நோக்காமல், நிகழ்காலத்திலேயே இருக்கும். நிகழ்காலத்திலேயே இருப்பது ஒரு அற்புதமான தியான நிலை.

2. அதிக நேரம் உணவு வாயிலிருப்பதால்... உணவை முழுமையாக ஜீரணித்து, அதைச் சக்தியாக மாற்றத் தேவையான எல்லா வேதிப்பொருட்களும் உமிழ்நீர் சுரப்பி மூலம் சுரக்கப்படும்.

3.முழுமையாகச் சுவைப்பதால், சுவைத்த திருப்தி கிடைக்கும்.

ஒரு மைசூர்பாக்கை மெல்ல ருசித்து சுவை கரையும் வரை அனுபவித்துச் சாப்பிட்டால் ஒரே ஒரு மைசூர்பாக் பத்து மைசூர்பாக்குளைச் சாப்பிட்ட பிறகும் கிடைக்காத திருப்தியைத் தரும்.

**4.** மெல்ல மெல்ல மென்று வாயிலேயே உணவை கூழாக்குவதால் என்ன நடக்கிறது என்பது பற்றிய ஒரு சமீபத்திய ஆராய்ச்சி இப்படிச் சொல்கிறது...

நன்றாய் மென்று சாப்பிடும்போது குணமாக்கும் வேதிப்பொருட்கள் உமிழ் நீரில் நிறைய சுரக்கிறது. இரைப்பையின் கூழாக்கும் வேலை குறைவதால் அதற்காகச் செலவிடப்படும் இரத்த ஓட்டமும் சக்தியும் மிச்சமாவதால் எப்போதும் வரும் உண்டபின் மயக்கம் வராமல் உற்சாகம் பிறக்கிறது.

உணவைக் கூழாக்க பலமுறை மெல்லுவதால் முகத்தில் இருக்கும் பல முக்கியமான தசைகள் இயக்கம் பெறுவதால் முகத்தில் இறுக்கம் குறைந்து மிருதுத் தன்மை பெருக ஆரம்பிக்கிறது.

சுவைத்துத் திருப்தியடைவதால் தேவைக்கு அதிகமான உணவை நாம் எளிதாகத் தவிர்த்து விடுவோம். உணவை அருந்துவது என்பது 'சாப்பிடும்போது சாப்பிடுதல்' என்ற தியானத்தை நடைமுறைப்படுத்தும்போது மாத்திரமே சாத்தியம். உணவை இரைப்பையில் கொட்டாமல் உணவை அருந்த ஆரம்பித்தால் உணவே மருந்தாக மாறும்.

உணவை அருந்துவது எப்படி என்று தெரியாமல் விருந்தே சாப்பிட்டாலும் திருப்தி முழுமையாகக் கிடைக்காது. விருந்து செரிக்க பல நேரங்களில் மருந்து தேவைப்படும். உணவருந்தக் கற்றுக் கொண்டால் சாதாரண உணவும் விருந்தாகும். அதுவே நல்ல மருந்தாகும்.

## காமஹரணம்

பலன்கள்:

72: தொடு உணர்வின் புலனைப் புத்துணர்வூட்டும் காமஹரண தியானம்.

2: உங்கள் அடிமைப் பழக்கங்களுடன் போராட வேண்டியதில்லை. மாறாக அவற்றிலுள்ள பிரமாணங்களே அற்றுப்போகும்.



இதுவும் ஒரு நிறுத்துதல் உத்திதான். ஓர் அழகான பொருளை நபரை பார்க்கும்போது உங்களுக்குள் விதவிதமான உணர்வுகள் எழலாம். உங்கள் உணர்வை சோதித்துப் பாருங்கள். அந்தக் கணத்தில் உங்களுக்கு என்ன நேர்கிறதென்பதைக் கவனியுங்கள்.

உங்கள் உடல் காய்ச்சல் வந்ததுபோலவோ நடுங்குவதுபோலவோ தோன்றுகிறதா என்பதைக் கவனியுங்கள். உங்கள் நாடித் துடிப்பு அதிகரிக்கிறதா தெளிவாகச் சிந்திக்க முடியவில்லையா என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். அந்த உணர்வு எவ்வாறு உங்களை ஆட்கொண்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். உங்களையோ அந்த விருப்பத்தையோ மதிப்பீடு செய்து பார்க்க வேண்டாம். இது ஒரு மோசமான உணர்வு என்று உங்களுக்குச் சொல்லிக் கொள்ள வேண்டாம்.

நீங்கள் உங்கள் ஆசையை ஒடுக்கவில்லை! ஆசையை ஒடுக்கக் கூடாது. அடக்குதல் மற்றும் ஒடுக்குதலே சகல மனநோய்களுக்கும் மூலகாரணம் எப்படி அதை உதறிவிடுவது என்று யோசிக்கவே வேண்டாம். ஓர் உணர்வோடு எதிர்த்து மோதும்போது ஒரு உணர்வை அடக்கிவைக்கும்போது அந்த உணர்வு சக்தி பெற்றுவிடும்! இதை நன்றாக அறிந்து கொண்டால் அதை விட்டு விடுதல் எளிதாகிவிடும்.

'விட்டுவிடு என்று நீங்கள் சொல்லும் நேரத்தில் நீங்கள் தனியே பிரிந்து விலகி நின்று ஒரு பார்வையாளர் ஆகிவிடுவீர்கள். உங்கள் உடல் ஆசையால் நிறைந்திருப்பதை, உங்கள் மனம் ஆசையால் நிறைந்திருப்பதை நீங்கள் பார்க்கும்போது, அவை நீங்கள் அல்ல என்று ஆகிவிடும்.

அந்தக் கணத்தில் எந்த உணர்வும் நீங்கள் அல்ல என்று உணரும்போது உங்கள் இருப்பிற்குள் தூக்கி எறியப்படுவீர்கள். உங்கள் போதைகளையெல்லாம் தொலைத்து விடுவதற்கு இந்தத் தியானம் மிகச் சிறந்ததாகும்.

சங்கிலித் தொடர்போல் புகை பிடிப்போர் விடா மதுப்பழக்கம் பெண் பித்து போன்றவற்றை ஒருமுறை ஒழித்து விட்டால் அப்புறம் அவை எப்பொழுதும் திரும்பிவராது. அவற்றை ஒழிக்கஅவர்கள் முயற்சி எடுப்பதில்லை. முற்றிலும் ஒழிந்தே விடுகிறார்கள். அவ்வளவுதான்!

இந்தத் தியானத்தின் மூலமாக செயல் மட்டுமல்ல அதற்கான ஆசையே முற்றிலும் ஒழிந்து போகும்! நீங்கள் உங்கள் அடிமைப் பழக்கங்களுடன் போராட வேண்டியதே இல்லை. மாறாக அவற்றிற்கான ஆசைகளே அற்றுப் போகும்.

# ஜனாதிபதி, பிரதமரை பதவியில் இருந்து விரட்ட வேலை நிறுத்தம்



மக்கள் கோரிக்கையை மீறி ஆட்சியில் இருக்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட "மொட்டு" அரசாங்கம் இராஜினாமா செய்யக் கோரி தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொள்ளவும், எதிர்வரும் மே தினத்தை அதற்கென ஒதுக்கிக்கொள்ளவும் தொழிலாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இலங்கை வர்த்தக, கைத்தொழில் மற்றும் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் தலைமையகத்தில் நேற்று (25) கூடிய தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் தலைவர்கள் ஏப்ரல் 28 ஆம் திகதி ஒன்றிணைந்த அடையாள வேலைநிறுத்தத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

அரச மற்றும் தனியார் துறை தொழிற்சங்கங்களின் தலைவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்தத் தினத்தன்று, அதிகாரத்தை விட்டுக்கொடுக்காமல் இருக்க உதவுமாறு ஜனாதிபதி மகாநாயக்கர்களிடம் கோரியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையை உடனடியாகக் கலைத்து, நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு கோரி, ஏப்ரல் 4ஆம் திகதி பிரதம தேரர்களால் அனுப்பப்பட்ட கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் இது அமைந்திருந்தது.


"நீங்கள் கூறியது போல், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக் கூறவேண்டியுள்ளதுடன் தற்காலிக மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதற்கான முறையான அணுகுமுறையை எங்கள் அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ளதால், பலன்களை பெற்றுக்கொள்ள எங்களுக்கு சிறிது கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். எதிர்காலத்திலும் உங்களின் ஆலோசனை மற்றும் அறிவுரைகளை மரியாதையுடன் எதிர்பார்க்கிறேன்." என ஏப்ரல் 21 திகதியிட்ட கடிதத்தில் ஜனாதிபதி கூறினார்.

சுகயீன விடுப்பு அல்லது பணி விடுப்பு என்ற வகையில் தொழிற்சங்கத்தின் விருப்பத்திற்கு அமைய ஏப்ரல் 28 அன்று தொழிற்சங்க நடவடிக்கைக்கு பங்களிக்க முடியும்.

இந்நாளில் மேல்மாகாண தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் கொழும்பு - கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக பேரணியாக சென்று கொம்பனித் தெரு, பித்தளை சந்தி, கொள்ளுப்பிட்டி வழியாக காலி முகத்திடல் போராட்ட மைதானத்தை நோக்கி பேரணியாக செல்ல தீர்மானித்துள்ளன.

ஏனைய மாகாணங்களில் உள்ள தொழிற்சங்க மற்றும் வெகுஜன அமைப்பு தலைவர்களின் உத்தரவின் பேரில் மக்கள் நெரிசல் மிகுந்த நகரங்களில் போராட்டங்கள் மற்றும் பேரணிகள் நடத்தப்படும்.

அடையாள வேலைநிறுத்தத்தின் நோக்கங்கள் மற்றும் நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிகள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் துண்டுப் பிரசுரம் அச்சிட்டு தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளுக்கு விநியோகிக்கவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. மேலும் நாடளாவிய ரீதியில் சுவரொட்டி பிரச்சாரம் முன்னெடுக்கப்படவுள்ளது.



சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மே தினத்தை நடத்த தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளும் தீர்மானம் மேற்கொண்டுள்ளன.

மே தின அணிவகுப்பு ஸ்டன்லி ஜேன்ஸ் மைதானத்தில் ஆரம்பமாகி காலி முகத்திடல் போராட்ட மைதானத்தில் பேரணியாக நிறைவடையும்.

# பூநகரி கௌதாரிமுனையில் சீன கூட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கடல் அட்டைப் பண்ணையை தொடர்ந்தும் பராமரிக்க முடியாமல் முழுமையாக அகற்றப்பட்டது



பூநகரியில் கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் புதிதாக அமைக்கப்பட்ட இந்த கடலட்டைப் பண்ணையானது உள்ளூர் அமைப்புக்களின் அனுமதியோ அல்லது மாவட்ட நீரியல் வளத்தினைத் திணைக்களத்தினதோ அனுமதி இன்றி அமைக்கப்பட்டபோது கடும் விமர்சனம் முன் வைக்கப்பட்டது. இதே நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் கடல் அட்டை குஞ்சு உற்பத்திப் பண்ணை ஒன்றும் உள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்ட பண்ணையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு கேள்வி எழுப்பியிருந்தனர். இதனால பெரும் சர்ச்சையும் உருவானது.

இந்த சர்ச்சையின் மத்தியில் கடந்த ஆண்டு இறுதியில் யாழ்ப்பாணம் வந்த சீனாவின் இலங்கைக்கான தூதுவர் அரியாலையில் உள்ள பண்ணைக்கும் நேரில் பயணித்தார்.

இந்த நிலைமையில் தற்போது இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியினால் எரிபொருளை பெறுவதில் உள்ள சிரமத்தின் காரணமாக இந்த பண்ணையை பராமரிக்க முடியாத காரணத்தினால் பூநகரி கௌதாரிமுனையில் அமைக்கப்பட்டிருந்த கடல் அட்டைப் பண்ணை முழுமையாக அகற்றப்பட்டுள்ளது.

இந்த பண்ணையின் பாராமரிப்பாளர்கள், அவர்களிற்கான உணவு விநியோகம் அனைத்தும் தினமும் அரியாலையில் இருந்தே படகு வழியாக மேற்கொண்டு வந்த நிலைமையில் அதறகான எரிபொருளை பெறுவதில் நெருக்கடி எதிர்நோக்குகின்றனர். இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவும் சீனாவின் பண்ணைக்கே உதவமுடியாமல் இலங்கை தவிக்கின்றதா அல்லது சீனாவிற்கே ஆப்பு வைக்கப்பட்டதா என்பதே கேள்வியாகவுள்ளது.

இந்த கடல் அட்டைப பண்ணையானது உள்ளூர் மீனவ அமைப்பின் ஒப்புதலின் பெயரில் அனுமதி வழங்கப்பட்டதாக கடற்றொழில் அமைச்சின் நெக்டா நிறுவனம் அப்போது பதிலளித்தபோதும் ஒப்புதல் அளித்த மீனவ அமைப்பிடம் ஒப்புக்கொண்ட பணம் வழங்கப்படாதமையினால் அனுமதி நீடிப்பிற்கு மீனவ அமைப்பும் மறுத்து வந்தனர். இந்த நிலமையில் ஓர் ஆண்டு காலம் நீடித்த சீனாவின் கடல் அட்டைப் பண்ணைகள் இரண்டில் ஒன்றின் சர்ச்சை முற்றுப்பெற்றுள்ளது.





(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 53)


# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

இதனால் அருள்மொழியை தனக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று எண்ணி பழையாறை அனுப்பிவைத்தார். இதனாலேயே பொன்னியின் செல்வரும் என்னை வெறுப்புடன் பார்க்கிறார். நான் இன்று செய்த சபதம் தெரிந்தால் அவரும் என்னை மன்னித்து விடுவார். இந்தக் கூரையில் மிதக்கும் நான் எப்படி அவரிடம் செல்வேன் என் சபதத்தைச் சொல்வேன்? அது மட்டுமா தாங்கள் வெறும் யானைப் பாகனாகவே இருந்து என்னையும் தன்னுடன் யானை மீது ஏற்றிக் கொண்டு ஒரு தடவை சென்றால் அதையே சொர்க்கமாக வாழ்வில் கருதுவேன் என்பதை தைரியமாக சொல்வேன். துர்க்கா தேவியே அதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்க நீயே அருள் புரிய வேண்டும் என வேண்டினாள். அப்பொழுது திருநல்லத்து வசந்த மாளிகையின் மகுட கவசம் தெரிகிறதே அதோ ஒரு யானை அதில் யானைப் பாகன் என்ன இந்த யானை வெள்ளத்தின் வேகத்தை வென்று கொண்டு செல்கிறதே யாராக இருக்கலாம் என்றாள் வானதி. யானைப் பாகா! யானைப் பாகா! என்று அழைத்தாள். ஆனால் அந்த யானைப் பாகன் காதில் எதுவும் விழவில்லை அவன் வேகமாக சென்று மறைந்தான். காவேரி வெள்ளத்தில் குதித்த பூங்குழலி படகில் ஏறிக் கொண்டு வானதியைக் காப்பாற்ற வந்தாள். வானதி மிதந்து வந்த குடந்தை சோதிடர் வீட்டுக் கூரை உடைந்ததால் அங்கிருந்த மரக் கிளையில் பிடித்துத் தொங்கினாள் மரக்கிளை முறிந்து விடும் என்று பீதி கொண்டு கீழே பார்த்தாள். அங்கு முதலை ஒன்று வாயைப் பிளந்து கொண்டு நின்றதைக் கண்டு தன் வாழ் நாளின் இறுதி நேரம் எனக் கண்களை மூடிக் கொள்கையில் பூங்குழலி படகில் இருந்து குதித்து தன்னைக் காப்பாற்ற வருவதைக் கண்டு அவளைக் காப்பாற்றுவது எப்படி என்று தெரியாது தான் பிடித்த மரக் கிளையை கீழே வளைத்து பூங்குழலியை மேலே இழுத்துக் கொண்டாள். இருவரையும் முதலை உட் கொள்ள காத்திருந்தது. இருவரும் கண்களை மூடிய கணம் யானையின் தும்பிக்கை இருவரையும் அணைத்து தரையில் விட்டது. இருவரும் கண்களைத் திறந்த போது இளவரசர் யானை மீது இருந்தார்.

அப்பொழுது வானதி யானைப் பாகா எங்களையும் யானை மீது கொண்டு போவாயா? என்றாள். இளவரசர் 'நீ இன்னமும் அதை மறக்கவில்லையா' என்றபடி கீழே இறங்கினார். 'வானதி சமுத்திரக்குமாரி நீங்கள் இருவரும் எப்படி இங்கு வந்தீர்கள்? குந்தவை எங்கே?' என்றார் இளவரசர். வானதி நடந்தவற்றைக் கூறினாள். 'நானும் தங்கள் தமக்கையாரும் தங்களை தஞ்சாவூர் வருவதாகக் கேள்விப்பட்டு தங்களைக் கண்டு தஞ்சாவூர் போவதைத் தடுக்க வந்தோம் தாங்கள் தஞ்சாவூர் வந்தால் பெரும் யுத்தம் மூளும் என்று இளைய பிராட்டி அஞ்சுகிறார். அதற்கு முன்னால் சந்தித்துப் பேச விரும்பினார் வழியில் சோதிடர் வீட்டிற்கு போனோம் அங்கு பெரியபழுவேட்டரையர் திடும் பிரவேசமாக வந்தார். தங்களையும், தங்கள் தந்தையையும், மூத்த இளவரசர் ஆதித்தகரிகாலரையும் ஒரே நாளில் கொன்று விட சதிகாரர்கள் திட்டமிட்டு இருப்பதாகச் சொன்னார். இந்த செய்தியை பாண்டிய சதிகாரர் இரகசியமாக பேசி கொண்டு இருந்ததை ஒட்டுக் கேட்டாராம். மேலும் தங்களுக்கும் சக்கரவர்த்திக்கும் இளையபிராட்டி எச்சரிக்கை செய்ய வேண்டும் என்றும் சொன்னார்.' என்றாள். இதைக் கேட்ட இளவரசர் 'உண்மைதான் என் விடயத்தில் உண்மை என்றாயிற்று இப்பொழுது என் தந்தை ஆபத்தில் இருக்கிறாரா?' என்றார். அப்பொழுது பூங்குழலி 'இளவரசே நானும் ஒரு செய்தி சொல்ல வேண்டும்' என்று தொடங்கினாள். அப்பொழுது இளவரசர் 'பூங்குழலி ஈழராணி எங்கே அவருக்காகவே நான் அவசரமாக புறப்பட்டேன் அவரை யாரோ கட்டியிழுத்து சென்றதாக அறிந்தேன்' என்றார். அதற்கு பூங்குழலி 'ஆமாம் முதல் மந்திரி நல் நோக்கத்துடன் தான் அப்படிச் செய்தார் ஈழத்து ராணி சக்கரவர்த்தியை சந்தித்தார் என் வாழ்வின் மனோரதம் நிறை வேறிவிட்டது ஆனால் என் அத்தை ஊமை ராணி தன் இறுதிக் காலம் நெருங்கி விட்டதாக எண்ணுகிறார். அதனால் ஒரு முறை உங்களைப் பார்க்க விரும்புகிறார் அழைத்துவருமாறு என்னை அனுப்பினார்' என்றாள். இதைக் கேட்டு இளவரசர் கலங்கினார். உடனே 'தஞ்சை புறப்படுகிறேன் இளைய பிராட்டியிடம் மன்னிப்புக் கோர வேண்டும்' என்றார். திருநல்லத்தில் இளவரசரும், வானதியும், பூங்குழலியும் தஞ்சை போவதைப் பற்றி ஆலோசிக்கலாம். இவ்வேளை நாகபட்டனத்தில் புயல் அடித்தமையால் வெளிப்பட்ட இளவரசர் தஞ்சை வருகிறார் என்ற செய்தி கேட்டு தஞ்சை மக்கள் பூரிப்படைந்து அவரைக் கோலாகலமாக வரவேற்று சிங்காசனத்தில் ஏற்றி வைத்து சக்கரவர்த்தியாக முடி சூடும் நோக்குடன் பெரும் ஆரவாரம் செய்தார்கள். இந்த ஆரவாரங்களுக்கு இடையில் தஞ்சையில் இருந்து மேற்கேயும் தென் மேற்கேயும் புறப்பட்டுச் செல்லும் மூன்று பெரிய சாலைகளில் ஒன்று கொடும்பாளூர் வழியாக இராமேசுவரம் போகும் பாதை மற்றொன்று மதுரை வழியாகத் தென்பாண்டிய நாட்டுக்குச் செல்லும் சாலை இன்னொன்று. உறையூர் வழியாக கரூருக்கும் சேர நாட்டுக்குச் செல்லும் சாலை இம் மூன்று வழியாகவும் புலிக் கொடி ஏற்றி படைகள் அணிவகுத்து வந்தன.

இந்த அணிவகுப்பு முடிவு கண்ணிற்கு எட்டாது நீண்டிருந்தது இதற்கு தலைமை தாங்கி வந்தவர் தென் திசைச் சேனாதிபதியான பூதிவிக்கிரமகேசரி. இவர் வானதியின் பெரிய தந்தை. ஈழத்துப் போருக்கு சென்று திரும்பி வந்தவர். இவர் தன் தம்பி சிறிய வேளாரின் மகள் வானதியை பொன்னியின் செல்வருக்கு மணம் செய்து கொடுத்து சோழ சிங்காசனத்தில் ஏற்றி வைக்க விரும்பினார். இதனால் இளவரசர் தஞ்சை நோக்கி வருகிறார் என்ற செய்தி அறிந்து பழுவேட்டரையர்கள் சிறை சென்று வருமாறு ஈழத்திற்கு செய்தி அனுப்பிருந்தார் இளவரசருக்கு இடையீடு ஏற்படாமல் தடுக்க படையுடன் வருகிறார். அத்துடன் வேளர் படைத்தலைவர்கள், கைகோளர் படைத்தலைவர்கள், பாண்டிய மண்டலத் தலைவர்கள், கொங்கு நாட்டுத் தலைவர்கள், ஈழநாட்டுப் போரில் வெற்றி கண்ட சோழர் படைத் தலைவர்கள், விந்தக மகா படைத் தலைவர்கள், அயல் நாடுகளுடன் கப்பல் வணிகம் செய்யும் தனவந்தர்கள், தஞ்சை நகரைச் சேர்ந்த ஐம்பெரும் குழுவினர் என்போர் ஆயத்தின் தலைவர்கள் என்று பல நூறு பேர் கூடியிருந்தனர். இவர்கள் அனைவரோடும் சேர்ந்து சேனாதிபதி பூதிவிக்கிரமகேசரி அமர்ந்திருந்தார். சேனாதிபதி கூறினார் 'நான் அனுப்பிய தூதினை மதித்து இங்கு எல்லோரும் வந்திருக்கிறீர்கள் திருக்கோவலூர் முது கிழவன் மலையமான் மட்டும் வரவில்லை அதற்குச் சரியான காரணம் உண்டு கடம்பூர் மாளிகையில் அவர் பேரன் ஆதித்தகரிகாலன் இருக்கிறார். அவருக்கு எந்த ஆபத்தும் வரலாகாது என்பது அவர் எண்ணம் என்பது எனக்குத் தெரியும் சுந்தர சோழ மன்னனிடம் நான் அனைவரும் பக்தி கொண்டவர்கள் நாம் அவருக்கு எதிராக இங்கு கூடியிருக்கிறோம் என்று பகைவர்கள் சொல்லுவார்கள். சக்கரவர்த்தியின் தேக சுகம் கருதி அவரை யாரையும் பார்க்க அனுமதியில்லை என்று கூறி அவரைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால் நாம் சோழ குலத்திற்கும், சோழ சாம்ராஜ்ஜியத்திற்கும் எவ்விதக் குறையும் ஏற்படக் கூடாது என்று இங்கு கூடியிருக்கிறோம். சக்கரவர்த்திக்கு இரு வீரப் புதல்வர்கள் இருக்கும் போது ஏன் போர்க்களம் கண்டிராத மதுராந்தகருக்கு பட்டம் கட்ட வேண்டும் இது பழுவேட்டரையர்களின் விருப்பம். அதை முதல் மந்திரி அநிருத்தரும் விரும்புகிறாராம். கண்டராதித்தர் தன் மகன் மதுராந்தகருக்கு ராஜ்ஜியம் ஆளும் எண்ணம் வேண்டாம். அவர் மனைவி பெரியபிராட்டியார் செம்பியன் மாதேவியும் அதைத்தான் ஆசைப்படுகிறார். ஈழத்து அரசனை தண்டிக்க என் சதோதரரும் ஈழத்திற்குப் படையெடுத்துப் போனார். அவருக்கு தனாதிகாரி உதவவில்லை அவன் வீர மரணம் அடைந்தான். அந்தக் களங்கத்தைத் துடைக்க நானும், பொன்னியின் செல்வரும் ஈழம் சென்று ஈழப்படைகளை நிர்மூலமாக்கினோம். அனுராத புரத்தைக் கைப்பற்றினோம் மகிந்தனை மலை நாட்டுக்குள் ஓடி ஒளியச் செய்தோம். ஆனால் தனாதிகாரி எங்களுடன் ஒத்துழைக்கவில்லை ஆனால்




இங்கே வந்திருக்கும் மகா ஜனத் தலைவர்கன் எங்களுக்கு உதவினார்கன். நீங்கள் கேளுங்கள் மா வீரராகிய பொன்னியின் செல்வருக்கு அவர் தந்தை அளித்த பரிசு இராஜ்ய துரோகம் என்று அபாண்டமாக பொய் சுமத்தி இளவரசரைச் சிறைப்படுத்தி கொண்டு வருமாறு கட்டளை இட்டதால் இவற்றை எல்லாம் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளவே இங்கு வந்திருக்கிறோம். அதுமட்டுமன்றி இளவரசர் அருள்மொழிவர்மர் தாமாகவே தந்தையின் கட்டளைக்கு கீழ் படிந்து பாத்திபேந்திர பல்லவனுடைய கப்பலில் ஏறி வந்தார். அந்தக் கப்பல் புயலில் சிக்கிக் கொண்டதாம் இளவரசர் கடலில் மூழ்கிவிட்டாராம் என்று சொன்னார்கள் ஆனால் சமுத்திரராஜன் அவரை அபகரித்திருக்க மாட்டான் என்று நம்பினேன். அதன்படி அவர் தப்பி தக்க சமயம் பார்த்து வெளிப்பட்டு தஞ்சை வருகிறார். சோழ நாட்டு மக்கள் அவரை கோலாகலமாக அழைத்து வருகிறார்களாம் அதனால் இங்குள்ள சூழ்ச்சிக்காரர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டக் கூடிய நேரம் எனபதற்காக நாம் இங்கு கூடியிருக்கிறோம். இன்று காலை திருவாரூரில் இருந்து இளவரசர் புறப்பட்டாராம் அவர் யானைக்கு மதம் பிடித்ததாக அறிந்தேன். ஆனால் அவர் போர் முனையில் எத்தனை நிகரில்லாத வீரம் உடையவரோ அப்படியே அறிவாற்றலிலும் நிகரற்றவர் வஞ்சகர்களின் சூழ்ச்சி வலையில் அகப்படமாட்டார் என்று நம்புகிறேன் எங்களை சக்கரவர்த்தியை பார்க்க அனுமதிக்காவிட்டால் கோட்டைக் கதவுகளை திறக்க மறுத்தால் கோட்டையை முற்றுகையிட வேண்டியதுதான் அத்துடன் ஆதித்தகரிகாலருக்கும் ஆள் அனுப்பி அவரையும் இங்கு வருவிக்க வேண்டும்' என்றார். அங்கு கூடியிருந்தவர்கள் ஆமோதித்தனர். பல விதமான ஆலோசனைகளும் சொன்னார்கள் இதன் பின்பு பூதிவிக்கிரமகேசரி அங்கிருந்து குதிரை மேல் தாவி ஏறினார் தஞ்சைக் கோட்டை வடக்கு வாசல் நோக்கி வந்தனர்.

அவ்வேளை ஈழத்துப்பட்ட பராந்தகன் சிறிய வேளாளரின் செல்வப் புதல்வி கொடும்பானார் பெரிய வேளாளர் சேனாதிபதி பூதிவிக்கிரமகேசரியின் வளர்ப்புக் குமாரி பழையாறை இளையபிராட்டி குந்தவை தேவியின் அருமைத் தோழியான வானதி தேவியார் வருகிறார் பராக்! பராக்! வழி விடுங்கள் என்ற குரல் ஒலித்தது. அத்திசையில் ஒரு யானையின் மேல் இரு பெண்கள் வருவதைக் கண்டனர் அந்த யானைப் பாகன் இந்த செய்தியை சொல்லுகிறான் எனக் கண்டு வியந்து நின்றனர். மீண்டும் யானைப்பாகன் ஒரு செய்தி சொன்னான் 'கொடும்பனார் வானதி தேவியார் இளையபிராட்டியிடமிருந்து சக்கரவர்த்திக்கு செய்தி கொண்டு வருகிறாள் பெரியபழுவேட்டரையரிடமிருந்து சின்னப் பழுவேட்டரையர்களுக்கு முக்கிய செய்தி கொண்டு வருகிறார் கோட்டைக் கதவுகளைத் திறவுங்கள் பராக் பராக் என்றது. இதைக் கேட்ட சேனாதிபதி யானை அருகில் நெருங்கினார் யானை மேல் இருப்பது வானதி என்று கண்டு கொண்டு 'வானதி மகளே நான் தஞ்சை கோட்டையை சூழ்ந்திருக்கும் நிலையில் நீ எதற்கு செய்தி கொண்டு வந்தாய்' என்ற கேட்டடார். அதற்கு வானதி 'பெரியப்பா நான் பொன்னியின் செல்வரைப் பற்றி சக்கரவர்த்திக்கு செய்தி கொண்டு வந்தேன் அத்துடன் சின்னப் பழுவேட்டரையருக்கும் செய்தி உண்டு' என்றாள். உடனே பெரும் மகிழ்வு கொண்டு பொன்னியின் செல்வரைப் பற்றியதா அவர் எப்படி இருக்கிறார் எங்கே என்று உனக்குத் தெரியுமா? என்று கேட்டார். அதற்கு 'ஆமாம் அவர் நலமாக இருக்கிறார் ஆனால் எங்கே இருக்கிறார் என்று மட்டும் தங்களுக்கு சொல்லமாட்டேன் ஏன் என்றால் நான் அவரைப் பற்றி சொல்ல மாட்டேன் என்று சத்தியம் வாங்கியிருக்கிறேன்' என்றாள். 'என்ன வானதி எனக்கும் கூட சொல்ல மாட்டாயா?' என்றார் பெரியதந்தை. 'ஆம் பெரியப்பா நான் செய்தி சொன்ன பின்பு உங்களிடம் திரும்பி வருகிறேன் நீங்கள் என்னை கொடும்பானார் அனுப்பிவிடுங்கள் இப்பொழுது தடுக்காத ீர்கள் கோட்டைக் கதவு திறக்காவிட்டால் உங்கள் படை வீரர்களை வைத்து தகர்த்துவிடுங்கள்' என்றாள். இதைக் கேட்டு 'உன்னை யார் தடுக்க முடியும் போய் வா' என்றார். அத்துடன் நீ கோட்டைக்குள் இருக்கும் போது உனக்கு சிறிய தீங்கு நேர்ந்தால் அவனுடைய குலத்தை பூண்டோடு அழித்து விடுவேன் என்று சின்னப் பழுவேட்டரையரிடம் சொல் நாளை பகல் பொழுதிற்குள் சக்கரவர்த்தியை தரிசிக்க வழி செய்யும் படி சொல் இல்லாவிட்டால் நாம் கோட்டையை தாக்குவோம்' என்றார். 'அப்படியே ஆகட்டும் பெரியப்பா' என்றபடி வானதி புறப்பட்டாள்.

சின்னப் பழுவேட்டரையர் பெரும் கலக்கம் கொண்டிருந்தார். தன் தமையனின் யோசனை இன்றி எதுவும் செய்வதில்லை இன்றும் அவர் தஞ்சை வரவில்லை என்ன நடந்தது இந்த இக்கட்டான சூழ்நிலையில் எப்படி முடிவு செய்வது இளவரசர் அருள்மொழிவர்மர் நாகபடடனத்தில் இருந்து வெளிப்பட்டு தஞ்சை வருகிறார் என்று ஒற்றன் சொன்னான். திருக்கோவலூர் மலையமான் பெரும் படை திரட்டுவதாக சம்புவரையர் அனுப்பிய ஆள் சொன்னான். ஆதித்தகரிகாலன் மிக வெறி பிடித்து இருக்கிறான் உடனே பெரிய பழுவேட்டரையரை கடம்பூர் வரச் சொல்லி செய்தி அனுப்பினார் கொடும்பனார் பூதிவிக்கிரமகேசரி மூன்று பெரிய சாலைகளிலும் படைகளை திரட்டி தஞ்சைக் கோட்டையில் நிற்கிறார. இதனால் தான் கோட்டை கதவுகளைச் சாத்தி விட உத்தரவு போட்டுள்ளேன் இவற்றை எல்லாம் எப்படி சக்கரவர்த்திக்கு சொல்வது முதல் மந்திரியிடம் எனக்கு நம்பிக்கையில்லை ஆனால் நான் சக்கரவர்த்தியிடம் சொல்வதை விட அவரிடம் தெரிவித்துவிடுவது நலம். என்று எண்ணியபடி அநிருத்தரிடம் சென்றார். முதல் மந்திரி கலக்கம் கொண்டிருந்தார். குந்தவை தஞ்சையை விட்டு போய் விட்டார் ஈழத்து ராணியையும், பூங்குழலியையும் காணவில்லை இப்பொழுது சின்னப் பழுவேட்டரையர் சொன்ன செய்திகள் மேலும் கலக்கத்தை உண்டு பண்ணிவிட்டது. இவற்றை சக்கரவர்த்தியிடம் சொன்னால் அவர் கவலை கொண்டு உயிருக்கு ஆபத்தை தேடிக் கொள்வார் அதனால் இன்று சொல்ல வேண்டாம் என்று மறுத்து விட்டார். அதனால் சின்னப் பழுவேட்டரையரான காலாந்த கண்டர் 'நான் கோட்டையைப் பாதுகாக்கும் காரியங்களைக் கவனிக்கிறேன் தாங்கள் சமயம் பார்த்து இவ்விடயங்களை சக்கரவர்த்தியிடம் சொல்லுங்கள்' என்று விடை பெற்றார். பின்னர் கொடும்பனார் படைகள் கோட்டைக் கதவை தகர்க்கவும் மதில் மேல் ஏறிக் குதிக்கவும் முடியாதபடி நம்பிக்கையான வீரர்களை நிறுத்தி வைத்தார். இங்கு இருக்கும் சுரங்கப் பாதை வழிகளில் ஒன்று பொக்கிஷ நிலவறை வழி அது மூடியுள்ளது மற்றையது முதல் மந்திரி அரண்மனையில் இருந்து புறப்படுகிறது அது என் கட்டுக்குள் உள்ளது என்று தன் பாதுகாப்பு வேலைகளைப் பலப்படுத்திக் கொண்ட வேளையில், யானையில் இரு பெண்கள் வந்திருப்பதாகவும், அவர்கள் சக்கரவர்த்திக்கும், தங்களுக்கும் செய்தி கொண்டு வந்திருப்பதாகவும் காவலன் செய்தி கொண்டு வந்துள்ளான். அவர் இந்த செய்தியை கொண்டு வந்தவர் வானதி என்றவுடன் கோபம் கொண்டு, 'அவள் பெரியப்பா கோட்டையை முற்றுகையிட வெளியில் நிற்கையில் எப்படி அவள் உள்ளே வரத் துணிந்தாள்' என்றபடி மேல் மாடிக்குச் சென்று நடப்பதைக் கவனித்தார்.

*தொடரும்...)*

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

# 26th YEAR IN PUBLISHING, NEWS, VIEWS AND TAMIL LITERATURE

## கனடா உதயன் 'இலங்கைச் சிறப்பிதழ்' வெளியீடும் பிரதம ஆசிரியரின் 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடகப் பயண விழாவும்

**காலம்:** **Sunday. May 29th, 2022**
**மாலை 5:30**

**இடம்:** **Metropolitan Centre**
**3840 Finch Avenue East**
**Scarborough, ON MIT 3TA**

வரவேற்புபசாரம்... உரைகள்... இசை மற்றும் நடனம்...








விழா பற்றிய விபரங்களுக்கு:

கதிர்: (416) 893-0399
சோதி: (647) 409-8966
வீணைமைந்தன்: (514) 684-3604
சங்கர்: (416) 270-4343
ஸ்ரீ: (416) 720-6811
மரியராசா: (416) 669-6437
சங்கர் சிவா: (647) 891-7725

(குறித்த நேரத்திற்கு விழா ஆரம்பமாகும்)


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
Tasty தமிழா
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)





03

## தாக்குதல் – I

1991. மார்கழி 3. கொழும்பு மருதானை - வாடகை இல்லத்தில் ஒரு கருக்கல் பொழுது. திடீரென நெஞ்சு வலியில் விழித்துக் கொள்ளுகிறேன். என் இதயமே உன்னை யாரோ கசக்கிப் பிழிவதுபோல்... வேர்க்கிறது. நெஞ்சு கனக்கிறது. மூச்சுத் திணறுகிறது. நடு நெஞ்சில் எரிவு. என்னவாய் இருக்கும் என்று யோசிப்பதற்கிடையில் மீண்டும் நெஞ்சு வலி அதை விட கடுமையாய். இதயமே உன்னை பிடுங்குவதுபோல். மீண்டும் வேர்க்கிறது. கால் கைகள் குளிர்ந்து போகின்றன.

என் இதயமே உனக்கு என்ன நடக்கிறது?

என்னைக் கைவிட்டு விடுவாயோ என்று பயப்பிடுகிறேன். இப்போது நான் இறந்து போய் விடுவேனோ என்ற பயம். அங்கு தூங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்ப, கூப்பிடுகிறேன். அவர்கள் வருகிறார்கள். விடயத்தைச் சொல்லி உடனும் மிக அருகில் இருக்கும் தனியார் மருத்துவ நிலையத்தில் சேர்க்கச் சொல்லுகிறேன். ஓர் ஓட்டோவில் தனியார் மருத்துவ நிலையத்துக்கு அழைத்துச் சென்றார்கள். இன்னும் காகம் குருவிகளின் குரல்கள் கேட்கவில்லை. அப்போது விடிகாலை 4.45 ஆகியிருந்தது. அங்கு விடயத்தை விளங்கப்படுத்தி என்னை அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்.



ஆனால் அங்கிருந்தவர்கள் டாக்டர் காலை 8 மணிக்கு வரச் சொல்லுகிறார் என்கிறார்கள். அப்போது நேரம் 5 மணி. ஆனால் நான் வற்புறுத்தி வாட்டில் தங்கினேன். பரிசோதனைகள் பலவும் (ECG, Echocardiogram) செய்யப்பட்டன. விலை கூடிய மருந்து ஒன்று ஏற்ற வேண்டும் என்று சொல்ல அதை செய்யுங்கள் என்று சொன்னேன். காலை 10 மணி அளவில் ஸ்ட்றெப்ரோகைனேஸ் (Streptokinase - Clot Breaking Medicine) எனும் மருந்து எனக்கு ஏற்றப்பட்டது.



கொஞ்ச நேரத்தில் பலமாக வாந்தி எடுத்தேன். வாந்தி எடுக்கும்போது எல்லாக் கொழுப்பும் வெளியேறுவதாக, நோயிலிருந்து சுகப்படுவதாகத்தான் நான் நினைத்தேன். ஆனால் அது ஆபத்தான கட்டம் என்று பின்னால் அறிந்தேன். இதன் பின்னர் வயிற்றுள் வாயுபகவான் தன் அருளை அளவுக்கதிகமாக பரிபாலனம் செய்யத் தொடங்கி வயிறு பெரிய பலூன் போல ஊதத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில் நீண்டதொரு சங்கநாதமாய் வாயுபகவான் வெளியேறத் தொடங்கினார்.

அக்கம் பக்கம் பார்த்தேன். யாரும் இல்லை. அதனால் அதன் பாட்டுக்கே போகட்டும் என்று விட்டுவிட்டேன். மறைப்புத்தட்டியின் மறுபக்கத்தில் இருந்த சிங்களப் பணியாளர் ஒருவர் 'யன்ன யன்ன எஹெம யன்ன எக்க போஹோம ஹொந்தாய்' - போகட்டும் போகட்டும். அப்பிடி போறது மிகவும் நல்லது - என்று சொன்னார். நான் வெட்கப்படவில்லை.

எப்படியோ டாக்டர் அஜித் ஜெயசேகர அவர்களின் கண்காணிப்பில் ஆபத்தான நிலையை நான் கடந்தேன். ஒரு மரணத்தை வென்று விட்டதாக ஆறுதல் அடைந்தேன். சுகம் வந்த பின் ஒரு மரணம் ஒத்தி வைக்கப்படுகிறது என்று சில குறிப்புக்களை எழுதினேன். இதயமே நீ முற்றாக என்னை கைவிடவில்லை என்பதை புரிந்து கொண்டேன்.

*தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற*
*சொற்காத்துச் சோர்விலாள் பெண்.*

என்ற வள்ளுவன் குறளையும் நினைத்துக் கொண்டேன். இதயமே இது உனக்கும் ஒருவகையில் பொருந்தும். ஏனென்றால் நீ உன்னை முதலில் கவனித்து காப்பாற்றினால்தான் முழு உடம்பையும் காப்பாற்றுவாய். தன்னை முதலில் கவனிப்பதுதானே தர்மம். அது சுயநலமில்லை.

ஆனால் இப்போதுள்ள கேள்வி நீ பெண்ணா? இதயங்களே, உங்களுக்கு ஆண் பெண் என்ற பேதமில்லை, உயர்வென்றும் தாழ்வென்றும் இல்லை, சாதிச் சமூகத்தின் மாறாத நீரிழிவுப் புண்களில்லை. இந்து - பௌத்தம் - இஸ்லாம் - கிறிஸ்தவம் என்று இருக்கின்ற மதங்களின் காழ்ப்பு இல்லை.

கறுப்பு - வெள்ளை - சிவப்பு - மஞ்சள் நிற மனிதர்கள் எனக் காணும் அர்த்தங்களில்லை... பெரிதென்றும் சிறிதென்றும் வேறுபாடில்லை. உங்களுக்குள் பிரவகிக்கும் ஊற்று உடலெங்கும் பாய்ந்தோடுவதும், உயிர்ப்பாய் காற்றோடு கலந்து அற்புதங்கள் நிகழ்த்த ஆதாரமாய் இருப்பதும் செங்குருதிச் சிறு துணிக்கைகள் தாமே...

---

04

## யார் தந்தது?

இதயமே, உன் இடர் அறிந்து உன்னை விசாரிக்க மருத்துவ நிலையத்துக்கு நண்பர்கள் பலர் வந்தனர். மருத்துவரின் மருந்தோடு நண்பர்களின் பரிவும், அன்பும், உன் நலனிலான அக்கறையும் உன்னை நம்பிக்கையோடு எழ வைத்தன. ஆனாலும் இப்படி ஏன் நிகழ்ந்தது என்று காரணங்களைக் கண்டுபிடி. என் புத்தி சொன்னது. கடந்தகால இடர்களை எல்லாம் துணிவாகக் கடந்து வந்த இதயம் நீ, என்றாலும் உன்னை அறியாமலே பெருமழையின் துளிகள் சிறுகச் சிறுக ஒரு பாத்திரத்தை நிறைத்தல் போல என் இதயமே, துயரமழைத் துளிகள் உன்னுள் நிரம்பிக் கிடக்கத்தான் செய்யும். புத்தி மீண்டும் அசை போடத் தொடங்கியது.

யுத்த நெருப்பிலிருந்து தப்பிக்க குடும்பமாகப் பட்ட இன்னல்கள்...
உயிரைக் கையிலே பொத்தி வைத்துக் கொண்டு ஓடிய ஓட்டங்கள்...
பொறியிலே அகப்பட்ட எலிகளைப் போல் விடுபட எத்தனித்த எத்தனங்கள்.
யார் எவர் என்றில்லாது வீதிகளில் விசிறிக் கிடந்த உடல்களின் காட்சிகள்.
விடுதலை எனும் பெயரில் விடுதலை அமைப்புகளால்
சமூகத்தில் நிறைக்கப்பட்ட கோரங்கள்...
பெற்றோரை உறவுகளைப் பிரிந்த ஏக்கங்கள்...
அகதியாக இந்தியாவுக்கு படகேறியதிலிருந்து மேலும் காட்சிகள் விரிந்தன...

கடலில் தத்தளித்த கணங்கள். அகதி முகாமின் அவல வாழ்வு, சுகாதாரக் கேடுகள். அதனால் கண்முன்னே நிகழ்ந்த சில மரணங்கள், முகாமை விட்டு வெளியேற இயலாத கட்டுப்பாடுகள். துணையையும் குழந்தைகளையும் தனித்து விட்டுவிட்டு மீண்டும் கொழும்பு வந்த பிரிவும் பிரிவின் நினைவுகளும்.

கல்லுகள் ஒன்றின் மேல் ஒன்றாய் அடுக்கி வைக்கப்பட்டது போல் கட்டி எழுப்பப்பட்ட கவலைக் கோபுரங்களாய்... இதயமே நீ களைத்தே போனாய். இவையெல்லாம் தந்த மன அழுத்தங்கள் (Stress) இதயமே, உன் வலிகளுக்கு இவையெல்லாம் காரணங்கள் என்று என் புத்தி சொன்னது. மன அழுத்தம் மிகப் பொல்லாதது. உன்னை பலவீனப்படுத்த அது ஒன்றே போதும். மன அழுத்தங்களுக்கும் இதயப் பிரச்சினைகளுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக மருத்துவ விஞ்ஞானம் சொல்கிறது. இதயமே கருவிலிருந்து என்னோடு எனக்குள்ளே இருக்கிறாய். ஆனால் உன்னை எவ்வளவு தூரம் நான் புரிந்து கொண்டிருக்கிறேன் என்ற கேள்வி - உடன் இருப்பவர்களை எந்த அளவுக்கு புரிந்து கொண்டு இருக்கிறோம் என்பதைப் போல, இப்போது எழுந்தது.

பள்ளிக்கூடத்தில் சுகாதாரத்தை ஒரு பாடமாகப் படித்த போது சின்னச் சின்ன விஷயத்துக்கும் தடியால் ஓங்கி அடிக்கும் கணேசன் மாஸ்டர் உன்னைப்பற்றி படிப்பித்தது ஞாபகத்தில் வந்தது.

'எல்லாரும் டப் டிப் சத்தம் கேட்குதோ எண்டு தொட்டுப் பாருங்கோ...'
இதயம் ஒவ்வொருவரதும் கைப் பொத்தி அளவானது...
இரத்த ஓட்டம் இல்லை என்றால் உறுப்புக்கள் ஒன்றும் இயங்காது...
இது உள்ளுறுப்புக்களில் மிகப் பிரதானமான ஓர் உறுப்பு.
எது இடது சோணை அறை? எது வலது சோணை அறை?
எது நாடி? எது நாளம்?

கேள்விகள் கேட்பார். சரியாய்ச் சொல்லாட்டில் அடி விழும். நான் எனக்குத் தெரியாவிட்டாலும் தெரிஞ்சது போல என்ரை முகத்தை வைச்சிருப்பன்.

வேலுப்பிள்ளைதான் கனக்க அடி வாங்கிறவர்.

இவைகள் மட்டும் தான் உன்னைப் பற்றிய ஞாபகங்கள்.

ஆட்சா (கலைப்பிரிவு) சயன்சா (விஞ்ஞானப்பிரிவு) என்ற கேட்டுவிட்டு அப்பிடி எண்டால் என்ன எண்டு சொல்லாமல் தங்கடை பாட்டிலை எங்களை பிரிச்சு விட்டதாலை அதற்குமேல் உன்னைப்பற்றி அறிந்து கொள்ள முடியவில்லை.

ஏனெண்டால் நான் ஆட்ஸ் பிரிவில் தொடர்ந்து படிக்க நேர்ந்தது.

இதயமே பிழையாய் நினைக்காதை. அது என்னுடைய விருப்பம் இல்லை.

ஏதோ உன்பாட்டுக்கு நீ இயங்கிக் கொண்டிருக்கிறாய் என்று மட்டும் தெரிந்தது.

இன்னும் சொல்லப்போனால், நீ எதையும் எதிர் பார்க்காமல் எனக்காக உழைத்துக் கொண்டிருக்கிறாய் என்ற எண்ணமும் இல்லை.

நீ இருக்கிறாய் என்பதே பொதுவாக மறந்து போகிறது.

இப்பிடித்தான் பலரும் தங்கள் தங்கள் இதயங்களைச் சரியாகப் புரிந்து கொளளுவதில்லை.

**(தொடரும்...)**

சினிமா

# "பீஸ்ட்" படக்குழுவினருக்கு விருந்து வைத்த நடிகர் விஜய்

"பீஸ்ட்" படக்குழுவினருக்கு நடிகர் விஜய் விருந்து வைத்துள்ளார். இந்தப் புகைப்படம் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் விஜய் நடித்த "பீஸ்ட்" கடந்த 13 ஆம் தேதி உலகம் முழுக்க வெளியானது. பூஜா ஹெக்டே, செல்வராகவன், யோகி பாபு உள்ளிட்டோர் நடித்திருக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். சன் பிக்சர்ஸ் தயாரித்த இந்தப் படம் கலவையான விமர்சனங்களைப் பெற்று வருகிறது. படத்தில் இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாக சித்தரித்தாக குற்றம்ச்சாட்டும் எழுந்தது. இந்நிலையில், நடிகர் விஜய் "பீஸ்ட்" படக்குழுவை நேரில் அழைத்து விருந்து வைத்துள்ளார்.

இது தொடர்பாக இயக்குநர் நெல்சன் தனது ட்விட்டர் பக்கத்தில், "எங்களுக்கு விருந்து அளித்ததற்கு நன்றி விஜய் சார். மிகவும் ஜாலியான, மறக்க முடியாத மாலை வேளை எங்கள் அனைவருக்கும் இது அமைந்தது. விஜய் சார் அளித்த அன்புக்கும் ஆதரவுக்கும் இத்தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடன் பணிபுரிவது அழகான அனுபவம். இந்த அனுபவத்தை என் வாழ்வில் எப்போதும் நினைவில் கொள்வேன். உங்களுடைய வசீகரமும் புகழும் இந்தப் படத்தை சாத்தியமாக்கியுள்ளது. இந்த வாய்ப்பை அளித்த சன் பிக்சர்ஸ், கலாநிதி மாறன், காவ்யா மாறனுக்கு நன்றி. படக்குழுவினரின் உதவியின்றி இப்படத்தை உருவாக்கியிருக்க முடியாது. அவர்கள் சிறப்பாக பணியாற்றினார்கள். எங்களுக்கு ஆதரவளித்த ரசிகர்களுக்கு நன்றி. விஜய் சார் மற்றும் படக்குழுவினருடன் துணை நின்று பீஸ்டைப் பெரிய வெற்றிப்படமாக உருவாக்கியுள்ளீர்கள் அனைவருக்கும் நன்றி" என்று பதிவிட்டுள்ளார்.



# "ஹிந்தி எப்போதும் தேசிய மொழிதான்" — சர்ச்சை ஏற்படுத்திய அஜய் தேவ்கன் எள கிச்சா சுதீப் ட்விட்டர் மோதல்



"நான் ஈ" படத்தில் வில்லனாக நடித்திருந்த கிச்சா சுதீப் சமீபத்தில் அவருடைய புதிய படத்திற்கான விழாவில் பேசிய போது "ஹிந்தி இனி ஒருபோ-தும் தேசிய மொழி கிடையாது" எனப் பேசியிருந்தார்.

இது பாலிவுட் வட்டாரங்களில் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது. அதற்கு எதிர்வினையாக பாலிவுட் நடிகர் அஜய் தேவ்கன் ட்விட் ஒன்றை பதிவு செய்திருந்தார், அதுவும் ஹிந்தியில். "எனது சகோதரரே... ஹிந்தி நமது தேசிய மொழி இல்லையென்றால் நீங்கள் ஏன் உங்கள் தாய்மொழி படங்களை இங்கு டப் செய்து வெளியிடுகிறீர்கள்? ஹிந்தி முன்பும் இப்போதும் இனிமேலும் நமது தாய்மொழியாக தேசிய மொழியாக இருக்கும்" எனப் பகிர்ந்திருந்தார். இதற்கு பதிலளித்த சுதீப், "நான் பேசியது, பொருள் வேறாக உங்களுக்கு வந்து சேர்ந்திருக்கும் என நினைக்கிறன். நான் நேரில் சந்திக்கும் போது ஏன் அப்படிச் சொன்னேன் என்பதை உங்களுக்கு விளக்கிச் சொல்கிறேன். புண்படுத்துவது போலவோ, தூண்டும்படியோ, விவாதத்துக்கோ நான் அதைச் சொல்லவில்லை. நான் ஏன் அப்படிச் செய்யபோகிறேன் சார்" எனப் பதிலளித்திருந்தார். மேலும், அதன் தொடர்ச்சியாக, "நீங்கள் ஹிந்தியில் அனுப்பியது எனக்கு புரிந்தது. ஏனென்றால் நாங்கள் மதித்து, நேசித்து ஹிந்தியை கற்றுக் கொண்டிருக்கிறோம். புண்படுத்துவது என் நோக்கம் இல்லை. ஆனால், இப்போது எனக்குத் தோன்றுகிறது. ஒருவேளை என்னுடைய பதிலை நான் கன்னடத்தில் பதிவிட்டு இருந்தால் அது உங்களால் எப்படிப் புரிந்து கொள்ளப்படும் என்று. நாங்களும் இந்தியாவில்தானே இருக்கிறோம் சார்?!" என்றார். இந்தப் பதிலுக்குப் பிறகு அஜய் தேவ்கன், "நீங்கள் என் நண்பர். தவறாக நான் புரிந்துகொண்டதை தெளிவுபடுத்தியதற்கு நன்றி. நான் எப்போதும் நமது துறை ஒன்று என்றே கருதி வருகிறே-ன். நாம் எல்லா மொழிகளையும் நேசிக்கிறோம். அதே போல எல்லோரும் நமது மொழிக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்" என்று பகிர்ந்திருந்தார்.

இந்த விவாதத்தைச் சுட்டிக்காட்டிய நெட்டிசன்கள் பலர், "இந்தியாவிற்கு தேசிய மொழி என்று ஒன்று இல்லவே இல்லை, அலுவல் மொழியே உண்டு" என்று விளக்கி ட்வீட் செய்துவருகின்றனர்.

அதேபோல் மேலும் பலர், "சமீபமாக தென்னிந்திய படங்கள் பல பாலிவுட்டில் வெற்றிக்கொடி நாட்டி வருவதும், ஹிந்திப் படங்கள் பல தோல்வியடைந்து வருவதும் பாலிவுட் டாப் ஸ்டார்களை நெருக்கடியில் தள்ளியுள்ளது. அதன் வெளிப்பாடே இந்த விவாதம்" என்றும் பேசி வருகின்றனர்.

இது பாலிவுட் வட்டாரங்களில் புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

அதற்கு எதிர்வினையாக பாலிவுட் நடிகர் அஜய் தேவ்கன் ட்விட் ஒன்றை பதிவு செய்திருந்தார், அதுவும் ஹிந்தியில். "எனது சகோதரரே... ஹிந்தி நமது தேசிய மொழி இல்லையென்றால் நீங்கள் ஏன் உங்கள் தாய்மொழி படங்களை இங்கு டப் செய்து வெளியிடுகிறீர்கள்? ஹிந்தி முன்பும் இப்போதும் இனிமேலும் நமது தாய்மொழியாக தேசிய மொழியாக இருக்கும்" எனப் பகிர்ந்திருந்தார்.

# இவ்வார ராசிபலன்

## 29-04-2022 வெள்ளி தொடக்கம் 05-05-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** உண்மைகள் வெளிப்படும் வாரம். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிட்டும். கணினிதுறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. உடல்நலம் மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். கணவன், மனைவி உறவு மேம்படும். தொழில் அபிவிருத்தி அடையும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். சிக்கனத்தை கையாள வேண்டும். திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பழையக்கடன் வசூலாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்கள் பலன் தரும். விரயங்கள் கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். சொத்துப் பிரச்சனைத் தீர்வுக்கு வரும். பெண்களுக்கு பெருமை சேரும். பொதுவாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விக்னேஷ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,2,1,9

அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**ரிஷபம்:** வரவும், உறவும் வலிமையாகும் வாரம். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பூமியால் நன்மை உண்டு. குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூரத் தொடர்பு லாபம் தரும். பாக்கெட்டில் காசும் கரையாது. பந்தாவும் குறையாது. தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். இனிக்கும் வாரம் தான். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும். அடுத்தவர் தலையீடு அமைதியை கொடுக்கும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். வியாபாரம் திருப்தி தரும். பொருளாதாரம் உயரும். வாகன நன்மை உண்டு. பயணம் அனுகூலம் தரும். விவேகம் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை மேம்படும். கடன் தொல்லை அகலும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெய்வ பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பணவரவு அதிகரிக்கும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஐயப்பன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**மிதுனம்:** முற்போக்கு சிந்தனைகள் உருவாகும் வாரம். பேச்சில் நிதானம் தேவை. நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. செய்த்தொழிலில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். உடல் ஆரோக்கியம் சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. அரசியல் ஆதாயம் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். மருத்துவச் செலவு குறையும். நட்பு வட்டம் விரிவடையும். விரக்திகள் மறையும். சிக்கனம் தேவை. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். புத்தி சாதுர்யம் பெருகும். மனதில் மகிழ்ச்சி கூடும். எதிரிகளால் பலன் கிடைக்கும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புதிய முயற்சிகள் பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நாகாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 3,2,9,8

அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,P




**கடகம்:** நல்லோர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். திருப்திகள் பெருகும். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோசம் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். விவேகம் வெளிப்படும். வீண் செலவு ஏற்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிரியமான காலம். வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். வெளியூர் பயணம் நன்மை தரும். புதுத்தொழிலை துவங்கும் வாய்ப்பு உள்ளது. இனிப்பான செய்திகள் வரும். செல்வாக்கு உயரும். இசை ஆர்வம் கூடும். கலைத்தொழில் லாபம் தரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வெற்றிச் செய்தி வரும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் உண்டு. உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப் பிரச்சனைகள் அகலும். உத்தியோகத்தில் ஒற்றுமை விலகும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புக்கள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். பொறுமையை கையாள வேண்டும். பழையக்கடன் தீரும். மனோபயம் அகலும். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குலதெய்வம், அதிர்ஷ்ட எண்: 2,5,9,4

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,K




**சிம்மம்:** சுபகாரியங்கள் நடக்கும் வாரம். வெகுமானம் கூடும். பழிச்சொல் நீங்கும். மனவேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும். இழுபறி நிலை நீங்கும். உறவினர்களால் பாதகம் உண்டு. உஷ்ண நோய் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். கடன் வாங்க நேரிடும். அரசு வகை ஆதாயம் கிட்டும். வெற்றிகள் குவியும். பெருமைகள் தேடி வரும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். சுபச்செய்தி வரும். காதல் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும். அடிப்படைத் தேவைகள் நிறைவேறும். ஆரோக்யம் கூடும். ஆபரணம் வாங்குவீர்கள். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாக்யவான்களை சந்திப்பீர்கள். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். விவசாய விளைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். அனுகூலமற்ற திடீத் தனவரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய வாகனம் சேரும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். விவசாயம் கைக்கொடுக்கும். கவலைகள் அடியோடு விலகும். பணியில் உயர்வு கிட்டும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. குடும்ப அமைதி கூடும். சொந்தத்தொழில் அமையும். தொழில் மாற்றம் ஏற்படும். கடன் உதவி கிட்டும். தொலைதூரப் பயணம் உண்டு. அதிர்ஷ்ட வாய்ப்பு கூடி வரும்.


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமர பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 1,9,7,5

அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,Z




**கன்னி:** வீண் வம்புகள் ஒழியும் வாரம். ஆன்றோர்கள் வாழ்த்து கிட்டும். கொடுக்கல், வாங்கலால் நன்மை சேரும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். கொள்கையில் பிடிப்பு சேரும். அதிகாரியின் ஆதரவு பெருகும். ஆரோக்யம் அபிவிருத்தி அடையும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். நிர்வாக பொறுப்புக் கூடும். விவசாய விளைச்சலில் பலன் உண்டு. சொந்த தொழில் அமையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். திருப்புமுனை ஏற்படும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபகாரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். இடமாற்றம் நன்மை தரும். புதிய உத்தியோகம் அமையும். பழையக்கடன் தீரும். அணிகலன்கள் சேரும். புதுத்தொழில் அமையும். வாய்ப்புக்கள் தேடி வரும். வாகன மாற்றம் வரும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. வில்லங்கம் தீரும். வீண் செலவு கூடும். பண நெருக்கடிகள் தீரும். பணி ஆர்வம் கூடும். பாதகமான சூழ்நிலை அமையும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலனில் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். தடைகள் விலகி, தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 4,6,8,9

அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**துலாம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். புத்தாடை சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நன்மைகள் அதிகம் உண்டு. நல்லோர்கள் வாழ்த்து உண்டு. நண்பர்கள் சேர்க்கையுண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. நிலபுலன் சேர்க்கை உண்டு. கடன் தீர்வு உண்டு. காதலில் வெற்றி உண்டு. கடின உழைப்பு உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை உண்டு. கனவு பலிதம் உண்டு. கவனமுடன் செயல்படவேண்டும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை தரும். வெளியூர் பயணம் ஏற்படும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவீர். எதிலும் நிதானம் தேவை. பொருளாதாரம் உயரும். மற்றோரின் வாழ்த்துக் கிட்டும். எதிர்பார்த்த ஏற்றம் கிட்டும். கேட்ட இடத்தில் கடன் கிட்டும். காரிய அனுகூலம் கிட்டும். கலைத்தொழிலில் உயர்வு பெறும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். புதுமுயற்சிகள் பலன் தரும். மன சந்தோஷம் கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை ஆபரணம் சேரும். கடனால் பிரச்சனை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உழைப்பு உயர்வு தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். புதிய அனுபவம் பெறுவீர்கள். இன்பமான செய்தி தேடி வரும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். திண்டாட்டங்கள் குறையும். திறமைகள் அதிகமாகும். பெருமைகள் கூடி வரும். நிதி நிலைமை சீராகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 2,1,9,7


அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,X




**விருச்சிகம்:** பூர்வீகச் சொத்து சேரும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். வழக்குகள் சாதகமாகும். கல்விக்கடன் உண்டாகும். பயணம் நன்மைத்தரும். அளவான பேச்சு நன்மைத்தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டு கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெருமைகள் கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப்பணியில் ஈடுபடுவீர்கள். கோதுமை தானம் குலவிருத்தி தரும். உதவிகள் கிடைக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. மாணவர்களுக்கு மதிப்பெண் உயரும். எண்ணிய காரியம் கூடும். எதிர்பாரா லாபம் தரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். பதவியில் உயர்வு வரும். இடமாற்றம் நன்மை தரும். வெற்றிநிலைத் தொடரும். குடும்ப கௌரவம் கூடும். நன்மதிப்பு உயரும். பாராட்டு கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றித் தரும். பெரியத் திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றித்தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மைத்தரும். தனவரவு உற்சாகம் தரும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. கூட்டுத்தொழில் நன்மை தரும். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 6,9,1,2

அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,J




**தனுசு:** மனைவியால் மகிழ்ச்சி பொங்கும் வாரம். தோல்வி நிலை மாறும். தொழில் வர்த்தகம் விரிவடையும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் பலிதமாகும். குதூகலப் பயணம் உண்டு. குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். பணியில் பாராட்டு கிட்டும். ஆரோக்யம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். பணியில் கவனம் தேவை. குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியல் ஆதாயம் உண்டு. நிதானம் தேவை. வேலை பளு கூடும். பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும். திருப்பங்கள் நிறைந்த காலம். பாதிப்புக்கள் ஒழியும். சோதனைகள் தீரும். ஆற்றல் வெளிப்படும். சுயத்தொழில் லாபம் தரும். தனவரவு சீர்படும். தகுதி மேம்படும். தாயார் உடல்நிலை சரியாகிவிடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சிக்கன நடவடிக்கை தேவை. தொழில் மந்த நிலை காணும். பணியில் செல்வாக்கு சேரும். தடைப்பட்ட நிலை மாறும். உத்தியோக மாற்றம் ஏற்படும். நலிந்த தொழில் மேன்மை தரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயத்தில் கவனம் தேவை. வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பணவிரயம் உண்டு. புதிய சிந்தனை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 3,9,7,1

அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K

***(தொடர்ச்சி 33ம் பக்கம்)***

# மாணவர்கள் குடிப்பதற்கு வழிகாட்டுகிறவர்கள் சினிமா கதாநாயகர்கள் என்கிறார் தயாரிப்பாளர் கே.ராஜன்

சிறுவன் யோகேஸ்வரன் பாடி நடித்து உருவாகியுள்ள "ஹே சகோ" இசை தொகுப்பு வெளியீட்டு விழா சென்னை பிரசாத் லேப் திரையரங்கில் நடைபெற்றது. இயக்குநர்கள் பேரரசு, ராஜுமுருகன், தயாரிப்பாளர் கே.ராஜன், பின்னணிப் பாடகர் உன்னி கிருஷ்ணன் ஆகியோர் ஆல்பத்தை வெளியிட படக்குழுவினர் பெற்றுக் கொண்டனர். இந்த ஆல்பத்தை ரகுராமன், சங்கீதா தயாரித்துள்ளார்கள்.

விழாவில் தயாரிப்பாளர் கே ராஜன் பேசும்போது, "யோகேஸ்வரனையும் அவனை வாழ்த்த வந்திருக்கும் அனைவருக்கும் நான் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால ஒருவரை வாழ்த்தும் போதும் தான் மனம் தூய்மை பெறுகிறது. இங்கே யோகேஸ்வரன் பாடியதையும் ஆடியதையும் பார்த்தபோது அற்புதம் என்று சொல்லத் தோன்றியது. இறைவனின் அருள் பெற்று வந்த குழந்தை அவன். யோகேஸ்வரனின் பெற்றோரை, குறிப்பாகத் தாயைப் பாராட்ட வேண்டும். இந்தச் சிறு வயதிலேயே இசையையும் நடனத்தையும் ஊட்டி வளர்த்துள்ளார்கள். இங்கே இரண்டு தம்பிகள் நடனம் ஆடினார்கள். உடலை வளைத்து நெளித்து மட்டும் ஆடவில்லை எலும்பை உடைத்து நொறுக்கி ஆடுகிறார்கள் என்று நினைத்தேன். நான் பயந்து போய் விட்டேன். அற்புதமாக ஆடினார்கள். அழகு அற்புதம். பெரிய நடிகர்கள் பெரிய இயக்குநர்களால் சினிமாவிற்கு ஒரு பயனும் கிடையாது. சினிமா வாழ்வது சிறிய படத் தயாரிப்பாளர்களால்தான். இங்கே உள்ள தயாரிப்பாளர்கள் எல்லாரும் பெரிதாக வளர்ந்து விட்டது போல் கதாநாயகர்கள் தெலுங்குப் பக்கம் போகிறார்கள். இன்னும் சிலர் சாப்பாட்டுக்கே வழியில்லாத ஸ்ரீதேவியின் கணவர் குடும்பத்திற்குப் படங்கள் கொடுக்கிறார்கள். பல ஆண்கள் படிக்கச் சொன்னால் குடிக்கப் போகிறார்கள். குடிப்பதற்குச் சினிமா கதாநாயகர்கள் வழிகாட்டுகிறார்கள். அவன் குடிக்கப் போகிறான். படிப்பில் தோல்வி கண்டால் பாருக்குப் போகிறான்" என்றார்.



ஜெய் கிருஷ் கதிர், பாடல் எழுதி இசை அமைத்து இயக்கியுள்ளார் விழாவில் இயக்குநர் ராஜுமுருகன் பேசும்போது, "கலை வடிவம் ஏதாவது ஒரு வகையில் அன்பையும் மனிதநேயத்தையும் நம்பிக்கையையும் ஓர் அங்குல அளவிலாவது ஏற்படுத்தி உயர்த்த வேண்டும். அந்த வகையில் இந்தப் பாடல் நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் உருவாகியுள்ளது. சிறுவன் யோகேஸ்வரன் நன்றாக பாடி, நடித்துள்ளான். இசையமைத்துள்ள ஜெய் கிருஷ் சிறப்பாக தனது பணியை செய்துள்ளார்.

எனது நண்பர் ஒரு சிறிய பட்ஜெட் படம் எடுத்துவிட்டு அவருக்கும் இசையமைப்பாளருக்கும் இடையில் நிகழ்ந்த மனஸ்தாபத்தால் சில காட்சிகளுக்குப் பின்னணி இசை முடிக்க முடியாமல் நின்று இருந்தது. படத்தை அவசரமாக முடிக்க வேண்டிய நிலை. அப்படிப்பட்ட, இக்கட்டான நேரத்தில் ஜெய்கிருஷ் வந்து ஊதியம் பற்றிப் பேசாமல் எதுவுமே வாங்காமல் தனக்கு எந்தப் பெயரும் கிடைக்காது என்று தெரிந்தும் பின்னணி இசை அமைத்துக் கொடுத்து உதவினார். அவர் திறமைக்கான உயரங்கள் காத்திருக்கின்றன. இன்னும் பெரிய மேடைகள் அவருக்கு அமையும். சிறுவன் யோகேஸ்வரன் மேலும் வளர்வான். வாழ்த்துக்கள்" என்று வாழ்த்தினார்.

விழாவில் பிரபல பின்னணிப் பாடகர் உன்னிகிருஷ்ணன் பேசும்போது, "நான் இந்த யோகேஸ்வரனை மட்டுமல்ல அவனுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அவனது பெற்றோரையும் பாராட்டுகிறேன் வாழ்த்துகிறேன். நல்லதொரு இசை முயற்சியாக இதைச் செய்திருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது இசையில் எடுத்துக்கொண்ட கான்செப்ட் புரிகிறது. சிலநிமிடங்களில் ஒலிக்கும் இதற்காக பல மணி நேரம் அவர்கள் உழைத்திருப்பது தெரிகிறது. இந்தப் பாடலை பார்க்கும்போது நல்ல நம்பிக்கையை அளிக்கிறது. வாழ்க்கை விசித்திரமானது. பல ஏற்றங்களையும் தாழ்வுகளையும் கொடுக்கக்கூடியது. நமது தாழ்வான நேரங்களில் யாராவது நம்பிக்கை வார்த்தைகள் சொல்வதற்கு என்று வேண்டும். அப்படி ஒரு நம்பிக்கை தரும் பாடலாக இதை நான் பார்க்கிறேன்" என்றார்.

இயக்குநர் பேரரசு பேசும்போது, "இங்கே யோகேஸ்வரனின் திறமையைப் பார்த்தோம். பெற்றோரும் ஊக்கம் கொடுத்திருக்கிறார்கள். அதே நேரம், அனைவருக்கும் பெற்றோர்கள் ஓரளவுதான் முன்னே கொண்டுவர முடியும். அதற்குப் பிறகு தன்னுடைய சொந்தத் திறமையால் உழைப்பால்தான் அவர்கள் வாழ்க்கையில் ஜெயிக்க முடியும் பிரகாசிக்க முடியும். அப்படி இரண்டு தளபதிகளைச் சொல்லலாம் இளைய தளபதி விஜய் தளபதியாக இருந்து பல வெற்றிகளைக் குவித்தவர். அவருக்கு அவரது தந்தை ஆரம்பத்தில் தூண்டுகோலாக இருந்தார். அதுபோல்தான் தளபதியாக இருந்து தலைவராக மாறி இப்போது முதல்வராக இருக்கும் அவருக்கும் தந்தை ஒரு தூண்டுகோலாக இருந்தார். ஆனால் அதற்குப் பிறகு அவரது உழைப்பாலும் திறமையாலும் வளர்ந்திருக்கிறார்".

இந்த பாடல் ஆல்பத்திற்கு வரிகள் எழுதி இசை அமைத்து இயக்கியிருக்கும் ஜெய் கிருஷ் கதிர் பேசும்போது, "முதலில் ஒரு பாடல் இசையமைப்பதாகத்தான் இருந்தது. ஆல்பம் தயாரிப்பதாக எண்ணம் இல்லை. ஆனால் போகப்போக அதை உருவாக்க வேண்டுமென்று யோகேஸ்வரனின் பெற்றோர்கள் விரும்பியபோது பட்ஜெட் பற்றி எந்த எல்லையும் குறிப்பிடாமல் அவர்கள் செலவு செய்தார்கள். எனக்கு முழுமையான சுதந்திரம் கொடுத்தார்கள். நானே இயக்கி பாடலை உருவாக்கி இருக்கிறேன். உங்கள் ஆதரவு தேவை" என்று கூறினார். இந்த விழாவில் எஸ் பேங்க் மேலாளர் தினேஷ்குமார், வாஸ்கோடகாமா படத்தின் தயாரிப்பாளர் சுபாஸ்கரன், ஜெம் டிவி சீதாபதி, ஒளிப்பதிவாளர் இளையராஜா, படத்தொகுப்பாளர் ராஜா, இயக்குநர் விமர்சகர் கேபிள் சங்கர், ஆல்பத்தில் நடித்துள்ள நடிகை சரண்யா ரவிச்சந்திரன், யோகேஸ்வரனின் தந்தை ரகுராமன் ஆகி-யோரும் கலந்து கொண்டனர். முன்னதாக வந்திருந்தவர்களை யோகேஸ்வரனின் தாயார் சங்கீதா வரவேற்றார்.

## இவ்வார ராசிபலன்

(32ம் பக்கத் தொடர்ச்சி)




**மகரம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். காலணிகள் காணாமல் போகும். புதிய பொருள் சேரும். காதல் எண்ணம் உருவாகும். உடல்சோர்வு ஏற்படும். கடன் பிரச்சனைகள் தீரும். கல்வியில் தடை ஏற்படும். விளையாட்டுத்துறையில் லாபம் தரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். மன அமைதி கூடும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். ஏற்றமான தருணம் அமையும். விவசாயிகள் பயன்பெறுவர். தெய்வீகப் பற்று அதிகரிக்கும். வீண்செலவு குறையும். திடீர் பயணம் தடைப்படும். பணியில் நிரந்தரம் உண்டாகும். புதிய நட்பினால் பலன் உண்டு. புத்திர வழியில் கவனம் ஏற்படும். அதிருப்தி அதிகரிக்கும். அமைதியாக இருப்பது நல்லது. போட்டிகள் நீங்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். பாசம் அதிகரிக்கும். பெருமைகள் சேரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். அன்பினால் காரியம் நிறைவேறும். படிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில் முன்னேற்றம் அடைவீர். பக்குவமான பேச்சு அவசியம். பணப்பற்றாக்குறை தீரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். காதல் எண்ணம் நிறைவேறும். சகோதரியால் சஞ்சலம் உண்டு. மனம் மகிழும் காலம். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிம்மதி உண்டாகும். மன சஞ்சலம் குறையும். கமிஷன் தொழிலில் கவனம் தேவை. கணவன், மனைவி இடைய நல்ல உறவு ஏற்படும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர். உடன் பிறந்தவரால் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு உண்டு. பற்றாக்குறை நீங்கும். பணவரவு கூடும். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகள் தொல்லை உண்டு. புண்ணிய ஸ்தலம் பயணம் ஏற்படும். உடல் உபாதை நீங்கிவிடும். காரியம் இழுபறியாகும். முயற்சி பலன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வான்தேவதை, அதிர்ஷ்ட எண்: 4,9,1,5

அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: UH




**கும்பம்:** ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும் வாரம். முடிவுகள் சாதகமாகும். உறவினரால் நன்மை உண்டு. நண்பரால் செலவு உண்டு. கால்நடையால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உடல்சோர்வு நீங்கும். வீண் விரயம் அதிகமாகும். சுபவிரயம் ஏற்படும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். உத்தியோக உயர்வு தரும். வாழ்வில் வளம் உண்டு. வியாபார மேன்மை உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச்சேர்க்கை உண்டு. சந்தோஷம் பெருகும். மாணவர் பாராட்டுப் பெறுவர். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவர்க்கு உதவி செய்வீர். தந்தை நலம் கூடும். அனுகூலமான போக்கு ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். உண்மைகள் வெளிப்படும். கன்னிப் பெண்களிடம் கவனம் தேவை. பிரபல்ய ஆசை ஏற்படும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலனில் கவனம் தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். சொல்லில் கவனம் தேவை. விபரீத போக்கு மாறும். சிக்கனத்தை கையாள வேண்டும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வீடு, வாங்கும் யோகம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ மூகாம்பிகை, அதிர்ஷ்ட எண்: 7,5,9,2

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**மீனம்:** நலமும், வளமும் நாடி வரும் வாரம். பெருமைகள் கூடும். பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். அரசியல் லாபம் தரும். மரத்தொழில் லாபம் பெறுவீர். மாமூலான வளர்ச்சி சிறக்கும். வேலைபளு அதிகமாகும். அதிர்ஷ்ட வாய்ப்பு கூடும். மின்சாரத்தில் கவனம் தேவை. வரவுகள் அதிகரிக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வியாபாரம் அபிவிருத்தி ஏற்படும். பொறுப்புகள் கூடும். பொறாமைகள் விலகும். அரசாங்க அனுகூலம் கூடும். எதிலும் எச்கரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. காதல் எண்ணம் ஈடேறும். தொழில் வளர்ச்சி கூடும். நிதி நிலைமை சீராகும். தோற்றப் பொலிவு கூடும். விவசாயம் லாபம் தரும். புது நண்பரால் அதிகப்பலன் கூடும். பிளர்க்கு உதவும் மனப்பான்மை ஏற்படும். எண்ணிய காரியங்களில் பெருமிதத்துடன் செயல்படுவீர். ஆனந்த வாழ்வு உண்டாகும். சுபிட்ஷங்கள் பெருகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். உலோகத் தொழில் உயர்வு தரும். உறவினர் வருகையால் பலன் உண்டு. கல்விச்செலவு உண்டு. நண்பர்கள் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சியால் பலன் பெறுவீர். பொருளாதார முன்னேற்றம் உயரும். வீண் வம்பு விலகும். புதிய தொழில் அமையும். உடல் சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,3,1

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R

# தமிழ்பட இயக்குனர்களிடம் சிந்தனை இல்லை என்கிறார் இளையராஜா



உயிர், மிருகம் போன்ற படங்களை இயக்கிய சாமி, தற்போது குழந்தைகள் படத்தை இயக்கியுள்ளார். "அக்கா குருவி" என பெயரிடப்பட்டுள்ள இப்படத்திற்கு இளையராஜா 3 பாடல்களை அவரே எழுதி, இசையமைத்துள்ளார். சில்ட்ரன் ஆப் ஹெவன் படத்தின் அதிகாரப்பூர்வ மறுபதிப்புக்கான "அக்கா குருவி" படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில் பங்கேற்ற இளையராஜா பேசியதாவது: உலக சினிமாக்களை பார்ப்பதில் எனக்கு ஆர்வம் அதிகம். அப்படி சில்ட்ரன் ஆப் ஹெவன் படத்தை பார்க்கும்போது எனக்கு மிகுந்த ஆச்சர்யமாக இருந்தது. ஒரு ஷூவை வைத்துக் கொண்டு குழந்தைகளின் உலகத்தை தத்ரூபமாக தந்திருந்தது சிறப்பான அனுபவத்தை தந்தது. ஏன் இத்தகைய படங்கள் தமிழில் வருவதில்லை என்று எனக்கு வருத்தமாக இருந்தது.

ஒரு கலைஞனுக்கு உயர்வான சிந்தனை தோன்றினால் தான் அவனை தாக்கினால் தான். இவன் உயர்வான ஒன்றை உருவாக்க முடியும். இப்படி படம் எடுக்க முடியும். அது நம் இயக்குநர்களிடம் இல்லை. அந்தக் குறை-யை தற்போது இயக்குனர் சாமி போக்கியுள்ளார். தற்போது சில்ட்ரன் ஆப் ஹெவன் படத்தை நம்முடைய ஊருக்கு தகுந்தவாறு கதையை மாற்றி ஒரிஜினல் படத்தைவிட சுவாரஸ்யமாக இயக்குனர் சாமி கொடுத்துள்ளார். இதுபோன்ற புதிய இயக்குனர்கள் வரவேண்டும் என விரும்புகிறேன். நான் முதன்முறையாக இயக்குனர் மணிரத்னத்திற்கு இசையமைத்ததற்கு இதுதான் காரணம். இதுபோன்ற நல்ல படைப்புகளை பொதுமக்கள் ஊக்குவிக்க வேண்டும். இத்தகைய படங்கள் வெற்றி பெற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# அன்பின் தொனி - 649

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

“ஜாதிகள் தங்களை மனுஷரென்று அறியும்படிக்கு, அவர்களுக்குப் பயமுண்டாக்கும், கர்த்தாவே.” **- சங்கீதம் 9: 20**

**வேறே தேவர்கள் இருக்க வேண்டாம்**

தவறான, பிளையான வழிபாடுகள் நடைபெறக்கூடாது என்பதற்காகவே எம்மைப் படைத்த கர்த்தராகிய தேவன் தமக்கு வரவேண்டிய வணக்கத்தைக் குறித்தும், விக்கிரக ஆராதனையைக் குறித்தும் மிகவும் விபரமாகவும் தெளிவா கவும் பரிசுத்த வேதாகமத்தில் எச்சரித்துக் கொடுத்திருப்பதை நாம் பார்க்கலாம்:

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமி யின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம், உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.
**- யாத்திராகமம் 20: 3-6**

கர்த்தர் ஒருவருக்கே ஒழிய வேறே தேவர்களுக்குப் பலியிடுகிறவன் சங்கரிக்கப்படக்கடவன். **- யாத்திராகமம் 22: 20**

நான் உங்களுக்குச் சொன்னவைகள் யாவற்றிலும் சாவதானமாயிருங்கள். அந்நிய தேவர்களின் பேரைச் சொல்ல வேண்டாம், அது உன் வாயிலிருந்து பிறக்கக்கேட்கப்படவும் வேண்டாம். **- யாத்திராகமம் 23: 13**

நீ போய்ச் சேருகிற தேசத்தின் குடிகளோடு உடன்படிக்கைபண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிரு, பண்ணினால் அது உன் நடுவில் கண்ணியாயிருக்கும். அவர்களுடைய பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளைத் தகர்த்து, அவர்கள் தோப்புகளை வெட்டிப்போடுங்கள். கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே ஆகையால், அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளவேண்டாம். அந்தத் தேசத்தின் குடிகளோடே உடன் படிக்கைபண்ணுவாயானால், அவர்கள் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றி, தங்களுடைய தேவர்களுக்குப் பலியிடுவார்கள், ஒருவன் உன்னை அழைக்கையில், நீ போய், அவன் பலியிட்டதிலே புசிப்பாய், அவர்கள் குமாரத்திகளில் உன் குமாரருக்குப் பெண்களைக் கொள்ளுவாய், அவர்கள் குமாரத்திகள் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுவதும் அல்லாமல், உன் குமாரரையும் தங்கள் தேவர்களைச் சோரமார்க்கமாய்ப் பின்பற்றும்படி செய்வார்கள். வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்கவேண்டாம். **- யாத்திராகமம் 34: 12-17**

நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும், சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும்பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.
**- லேவியராகமம் 26: 1**

கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை. ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின்கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும், உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வசேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களைக்குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்.
**- உபாகமம் 4: 15-19**

உங்கள் இருதயம் வஞ்சிக்கப்படாமலும், நீங்கள் வழிவிலகி அந்நிய தேவர்களைச் சேவித்து அவர்களை நமஸ்கரியாமலும் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள். இல்லாவிடில் கர்த்தருடைய கோபம் உங்கள்மேல் மூண்டு, மழை பெய்யாமற்போகவும், தேசம் தன் பலனைக் கொடாமலிருக்கவும் வானத்தை அடைத்துப்போடுவார், கர்த்தர் உங்களுக்குக் கொடுத்த நல்ல தேசத்திலிருந்து நீங்கள் சீக்கிரத்தில் அழிந்துபோவீர்கள்.
**- உபாகமம் 11: 16-17**

உன் தேவனாகிய கர்த்தரின் கண்களுக்கு முன்பாக எந்தப் புருஷனாவது ஸ்திரீயாவது உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற வாசல்கள் ஒன்றில் அக்கிரமஞ்செய்து, அவருடைய உடன்படிக்கையை மீறி, நான் விலக்கியிருக்கிற வேறே தேவர்களையாவது சந்திரசூரியர் முதலான வானசேனைகளையாவது சேவித்து, அவைகளை நமஸ்கரிக்கிறதாகக் காணப்பட்டால், அது உன் செவிகேட்க உனக்கு அறிவிக்கப்படும்போது, நீ அதை நன்றாய் விசாரிக்கக்கட வாய், அது மெய் என்றும், அப்படிப்பட்ட அருவருப்பு இஸ்ரவேலில் நடந்தது நிச்சயம் என்றும் கண்டாயானால், அந்த அக்கிரமத்தைச் செய்த புருஷனையாவது ஸ்திரீயையாவது உன் வாசல்களுக்கு வெளியே கொண்டுபோய், அப்படிப்பட் டவர்கள் சாகும்படி கல்லெறியக்கடவாய். **- உபாகமம் 17: 2-5**

*தொடரும்...*



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



**Serving the Tamil Community of Greater Toronto**



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

FINANCIAL BENEFITS
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

EMOTIONAL BENEFITS
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca



Carefirst Family Health Team



புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas, Broker
Sun Sanmugathas, Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
HIGHER ACHIEVEMENTS
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

LOOKING FOR YOUR Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTORSEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX ROYAL PROPERTIES
BUYING SELLING INVESTING

உதயம் 1360 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 29, 2022

# கனடா 'நிவாரணம்' அமைப்பின் ஊடாக தாயகத்தில் உயிர் காக்கும் சத்திர சிகிச்சை செய்யப்பெற்ற 19வயது நிவேதன்




கனடா வாழ் செந்தில்குமரனின் 'நிவாரணம்' அமைப்பின் ஊடாக தாயக மண்ணில் உயிர் காக்கும் 88வது சத்திர சிகிச்சை செய்யப்பெற்ற கிளிநொச்சியைச் சேர்ந்த 19வயது நிவேதன் தற்போது வைத்தியசாலையில் தேறி வருகின்றார்.

இதன் மூலும் மேலுமொரு இதய சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளது!

இது கனடா நிவாரணம் அமைப்பினால் தாயகத்தில் மேற்கொள்ளப்பெற்ற 88 வது சத்திர சிகிச்சையாகும். கிளிநொச்சி தர்மபுரத்தை சேர்ந்த நிவேதனுக்கு (வயது 19) சத்திர சிகிச்சை நடைபெற்று இருதயத்தின் இரு வால்வுகளும் மாற்றப்பட்டுள்ளது. இந்த இளைஞனுக்கு ஆறு மாத காலத்திற்குள் அறுவை சிகிச்சை செய்யவேண்டும் இல்லையென்றால் உயிராபத்து என்ற நிலையிலேயே இவருக்கான சிகிச்சை உடனடியாக நடைபெற்றது. இவரது தாயார், கணவர் பிரிந்து சென்றபின் தனியாக நான்கு பிள்ளைகளை வளர்த்து கொண்டிருக்கிறார். வறுமையின் சூழ்நிலையில் தத்தளித்த இந்த குடும்பத்திற்கு 15 லட்சம் என்பது எட்டாக்கனி. இது நிவாரண அமைப்பின் 88 வது உயிர் காக்கும் சத்திர சிகிச்சை! உடல் நலம் தேறி வரும் அவருக்காக இறைவனை வேண்டுவோம்! நன்றி! - இவ்வாறு கனடா வாழ் "நிவாரணம்" செந்தில்குமரன் தெரிவித்துள்ளார்.

# பூநகரி கௌதாரிமுனையில் சீன கூட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்ட கடல் அட்டைப் பண்ணையை தொடர்ந்தும் பராமரிக்க முடியாமல் முழுமையாக அகற்றப்பட்டது

பூநகரியில் கடந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் புதிதாக அமைக்கப்பட்ட இந்த கடலட்டைப் பண்ணையானது உள்ளூர் அமைப்புக்களின் அனுமதியோ அல்லது மாவட்ட நீரியல் வளத்தினைத் திணைக்களத்தினதோ அனுமதி இன்றி அமைக்கப்பட்டபோது கடும் விமர்சணம் முன் வைக்கப்பட்டது. இதே நிறுவனத்திற்கு யாழ்ப்பாணம் அரியா-லைப் பகுதியில் கடல் அட்டை குஞ்சு உற்பத்திப பண்ணை ஒன்றும் உள்ளது. *(தொடர்ச்சி உள்ளே 27ம் க்கத்தில்)*

## CANADA SUMMER JOB PROGRAM - JOB POSTING

### Marketing Assistant

**Responsibilities**

- Undertake daily administrative tasks to ensure the functionality and coordination of the office activities
- Support marketing manager in organizing various projects
- Update spreadsheets, databases and inventories with statistical, financial and non-financial information
- Assist in the organizing of promotional events and traditional or digital campaigns and attend them to facilitate their success
- Communicate directly with clients and build trusting relationships

**Requirements and skills**

- Proven experience as a marketing assistant
- Good understanding of office management & marketing principles
- Demonstrable ability to multi-task and adhere to deadlines
- Well-organized with a customer-oriented approach
- Excellent knowledge of MS Office
- Good communication and people skills
- High School diploma; or relevant work experience

**Salary :** Minimum wage according to the Government Summer Job Program

**Duration of engagement: 3months**

Please forward your application with your updated resume by email to:
**uthayannews@yahoo.com**

